உ

கணபதிதுணை.

சிவமயம்.

திருக்கூவப்புராண வசனம்.

இஃது,

தேவகோட்டை நகர வைசியகுலதிலகர்

ராம. பெரி. பிச.

ம-ள-ள-ஸ்ரீ பிச்சப்ப செட்டியார் அவர்கள்

விரும்பியவண்ணம்

பௌராணிகர் திருவிசைநல்லூர்

சி ந் ந ய நா ய க ர வ ர் க ளா ல்

இயற்றப்பட்டு,

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

உ

சிவமயம்.

பொருளடக்கம்.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருக்கூவப்புராண வசனம்.

முகவுரை.

சிறப்பும், செல்வமும், பக்தியும் மலிந்துள்ள நமது உத்தமதேசத்திலே, பரத கண்டத்திலே, பரம பதியாகிய சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் ஆயிரத்தெட்டு என்று ஆன்றோர் பிரமாண பூர்வமாய்க்கூறுவர். இவைகளிலே இப்போதுள்ள தேவாரப்பதிகங்களை யுடையனவாயிருக்கும் ஸ்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கு. இவ்விருநூற்றெழுபத்து நான்கு ஸ்தலங்களில் தொண்டைநாட்டில் உள்ளன முப்பத்திரண்டு. இம்முப்பத்திரண்டில் ஒன்றாகிய கூவம் என்று வழங்கும் திருவிற்கோல க்ஷேத்திர மானது ஆதியில் பிரமன் - விட்டுணு கண்ணுவாதி பல முனிவர்கள். அரம்பையர் - தரும சீலர் - தர்க்கமாதா முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற ஸ்தலம். இதனை சென்னைக்கு மேற்கே 30 - மைல் தூரத்திலுள்ள

கடம்பத்தூர் ரெயில் ஷ்டேஷனிலிறங்கி, தெற்கே புதுமாலகரம், பேரம்பாக்கம் என்னப்பட்ட கிராமங்களின் மார்க்கமாய் 6 - மைல் சென்றால் அடையலாகும். இதற்குச் சமீபத்தில் இலம்பையங் கோட்டூர் என்னும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடலைப்பெற்ற ஸ்தலமும் ஒன்றுளது. இக்கூவமாபுரியில் விற்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் சுவாமிபெயர் திரிபுராந்தகேசுரர்; அம்மையார் பெயர் திரிபுராந்தகியம்மை; என்பர். இத்தலதீர்த்தம் அச்சிறுகேணி யெனப்படும். இந்த சிவலிங்கப்பெருமான் விற்றழும்புடன் தீண்டாத்திருமேனியு முடையார். உலகில் அதிக மழை பெய்கிறதாக விருந்தால் சுவாமிமேல் வெண்மையான வர்ணம் படருகிறதும், யுத்தம் நேரிடுகிறதாக விருந்தால் சிவந்த வர்ணம் படருகிறது மான அதிசயஸ்தலம். 'இவ்வதிசயத்தைப் பின்னோர்க்கு விளக்குவான் பொருட்டே திருஞானசம்பந்த சுவாமிகளும் தமது திருவிற்கோலத் தேவாரப் பதிகத்திலும் "ஐயனல்லதிசயன்" என்று திருவாய் மலர்ந்துள்ளார். இத்தகைய மகிமை வாய்ந்த கூவமான்மியத்தினை ஆதியிலே சிவபெருமான் நந்திகேசுவரருக்கு காந்தத்திலே சனற்குமார சங்கிதையிலே காளிகா காண்டத்திலே கூறியுள்ளார். இதனை சுமார் ௩0௬ - வருடங்கட்கு முன்னர் நிஷ்

டாரூபியாய் விளங்கியிருந்த துறைமங்கலம் சிவப்பிர காசசுவாமிகள் சொற்பொலிவும், பொருட்பொலிவும், கற்பனு லங்காரமுஞ் செறிய செய்யுளாலியற்றினர். இச் செய்யுட்கள் நிகண்டு கற்று செய்யுளாராச்சியு முடைய இலக்கண இலக்கிய வித்துவான்களுக்கே யல்லாமல் ஏனைய சாதாரண கல்விமான்களுக்குப் பொருள்படுவது துல்லபமென உணர்ந்த தேவகோட் டை நகரவைசிய குலதிலகர் ம-ா-ா-ஸ்ரீ.ரா - ம-பெ-ரி-பி-ச-பிச்சையசெட்டியார் அவர்கள், இதனை வசன ரூபமாகவியற்றித்தரும்படி எம்மைக் கேட்டுக்கொண் டதனல் இஃது கற்ரோர்க்கும், மற்ரோர்க்கும், பெண் களுக்குங் கூட நன்கு விளங்கும்படி சரித்திரத் தொ டர்பாய் கடின சந்தியில்லாமல் செய்யுளை யொட்டி வசனரூபமா யியற்றினம். இஃது திருக்கூவப்புராண சரித்திரத்தினை நன்கு விளக்கித் திரிபுராந்த கேசுரர் பால் பத்தியைப்பெருகச் செய்வது மல்லாமல் திருக் கூவப்புராண செய்யுட்களின் பொருளையும் சிதைவு படாமல் உணர்தற்கும் ஓர் தீபம்போலாம். இதில் யாதேனும் தவறுதலுளதேல் அதனை வித்வமணி கள் அடியேனுக்கு விளக்கின் அதனை அவர் பெய ருடன் மறு பதிப்பில் வெளியிடுவோம்.

சாதாரண ௵
வைகாசி ௴
சென்னை

இங்ஙனம்,
திரு - சிந்நய நாயகர்.

உ

சிவமயம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
௪௧	௧௫	கங்கதை ...	களங்கத்தை.
௬௪	௧௬	தோன்றிற்றுள ...	தோன்றிற்று.
௭௧	௪	பாதத்திலும் ...	பாதலத்திலும்.
௮௩	௧0	பரிசுத்தனுகிய ...	பரிசுத்தராகிய.
௯௯	௨0	சூலாயுதத்தைத்தை ...	சூலாயுதத்தை.
௧0௩	௭	சூலாயும் ...	சூலாயுதம்.
௧௨௩	௨	லழியவே ...	ளழியவே
௧௨௪	௧௭	கருடாஸதிரத்தை ...	கருடாஸ்திரத்தை

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச்செய்த

திருவிற்கோலத்தேவாரம்.

பண் - காந்தார பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினான்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினானுறைவிடந்திருவிற்கோலமே. (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினனொருசரத்தினால்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனார்வண்ணவண்ணம்வான்
பையரவல்குலாள்பாகமாகவுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (௩)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலனை
யுதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (௪)

முந்தினன்மூவருண் முதல்வனாயினன்
கொந்துலாமலர்ப்பொழிற் * கூகமேவினா
னந்திவான்பிறையினனடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (ரு)

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (சா)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன்றரியலர்புறங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (எ,அ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. (கூ)

சீர்மையில்சமணொடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்துநல்கிடுஞ்
சீர்மையினனிடந்திருவிற்கோலமே. (க0)

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஃதமிழ்ஞானசம்பந்தன்
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. (கக)

திருசிற்றம்பலம்.

---

* கூவம் என்பது - கூகம் என மருவியது.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனூர்
அருளிச்செய்த

திரு இலம்பையங் கோட்டூர்த்தேவாரம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தான
நிலையினானெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலு
மிலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (க)

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்
றேவர்கடலைமகன்றிருக்கழிப்பாலை
நிருபமனெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர்மதிமுகத்துலவு
மிருமலர்த்தண்பொய்கையிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (உ)

பாலனும்விருத்தனும்பசுபதிதானும்
பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளுங்
காலனுமெனதுனாதனதுளையாகக்
கனலெரியங்கையிலேந்தியகடவு
ணீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்ப
நீர்மலர்க்குவளைகடாதுவிண்டோங்கு
மேலனாறும்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௩)

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண்ணாமலையண்ணல்
விளம்புவானெனதுளாதனதுளையாக
வெள்ளநீர்விரிசடைத்தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுளமலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள
விளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௪)

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுளாதனதுளையாக
வரியராவரைக்கசத்துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக்கருவிரலூகங்
கடுவனோடுகளுழ்மூர்கற்கடுஞ்சார
லேனமானுழிதருமிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௫)

மனமுலாமடியவர்க்கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிருந்துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுளாதனதுளையாகத்
தாழ்சடையிளமதிதாங்கியதலைவன்

புனமெலாமருவிகளிருவிசேர்முத்தம்
  பொன்னொடுமணிகொழித்தீண்டிவந்தெங்கு
மினமெலாமடைகரையிலம்பையங்கோட்டூ
  ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௬)

நீருளான்றீயுளானந்தரத்துள்ளா
  னினைப்பவர்மனத்துளானித்தமாவேத்து
மூருளானெனதுரைதனதுரையாக
  வொற்றைவெள்ளேறுகந்தேறியவொருவன்
பாருளார்பாடலொடாடலறாத
  பண்முரன்றஞ்சிறைவண்டினம்பாடு
மேருளார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
  ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௭)

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கை
  வேந்தனதடக்கைகளடர்த்தவனுலகி
லாருலாமெனதுரைதனதுரையாக
  வாகமோரரவணிந்துழிதருமண்ணல்
வாருலாநல்லனமாக்களுஞ்சார
  வாரணமுழிதருமல்லலங்கான
லேருலாம்பொழிலணியிலம்பையங்கோட்டூ
  ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௮)

கிளர்மழைதாங்கினானான்முகமுடையோன்
  கீழடிமேன்முடிதேர்ந்தளக்கில்லா
வுளமழையெனதுரைதனதுரைபாக
  வொள்ளழலங்கையிலேந்தியவொருவன்
வளமழையெனக்கழைவளர்துளிசோர
  மாசுணமுழிதருமணியணிமாலை
யிளமழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
  ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௯)

உரிஞ்சனகூறைகளுடம்பினராகி
யுழிதருசமணருஞ்சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரைதனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல்பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லைநன்பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடுதேனினமுரலு
மிருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௧௦)

கந்தனைமலிகனைகடலொலியோதங்
கானலங்கழிவளர்கழுமலமென்னு
நந்தியாருறைபதிநான்மறைநாவ
னற்றமிழ்க்கின்றுணைஞானசம்பந்த
னெந்தையார்வளநகரிலம்பையங்கோட்டூ
ரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்
வீடுபேறின்மையின்வீடெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம் - அரம்பேசுரர்.
தேவிதிருநாமம் - கனககுசாம்பிகை யம்மை.

சந்திரசேகரர்-கோடேந்து முலையம்மை - என்பதும் ,வழக்கம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூவப்புராண வசனம்.

பாயிரம்.

காப்பு.

குவளத்தந்தக்குளிர்விண்வளத்துறக்
கவளத்தந்தக்கரணமிருத்திய
பவளத்தந்தப்படிவங்கொடோளிர்
தவளத்தந்தத்தலைவனைவாழ்த்துவாம். (க)

நச்சிறுத்தநயனக்குவிமுலைப்
பொச்சிறுத்தநுசுப்பினர்ப்போற்றிவாய்
மிச்சிறுத்தவிரகிலிக்காங்கொலோ
வச்சிறுத்தவடிகளடிகளே. (உ)

திரிபுராந்தகநாதர்.

நீர்கொண்ட சடையொடு நம்பெருங்காமத் தழலவிப்பநிற்கின்றானைக், கூர்கொண்டகனன் மழுமாணுண்மையும்பெண்மையுமாய கூற்றிற்கேற்பச், சீர்கொண்டவலனிடங்கொணாயகனைப் புகலியிறைச்செந்தமிழ்ப்பூந், தார்கொண்டதிருவிற்கோலப்பெருமான்றனையிதயத்தவிசின்வைப்பாம். (க)

திரிபுராந்தகநாயகி.

பைத்தசிறு மணியரவங் தாழ்ந்துமதி கவர்கின்ற ப ரிசதென்ன, மெய்த்தவிரும்புகழ்த்திருவிற்கோலநாய கன்மகிழ விற்கோலத்தை, யொத்தநறு நுதலிடைப் பொற்சுட்டியின்கீழ் வெண்டிலகமொளிரத்தீட்டி,வை த்தருளு மெழிலுடைப் * பையரவல்குலம்மைபதம் வணக்கஞ் செய்வாம். (உ)

சபாநாதர்.

சீர்கொண்டமலைமாதின் றிருநுதல்கண்டராப்ப கைவெண்டிங்கணிக்கி, யார்கொண்டசடையரவமல் குலைக்கண்டடற்கையுழைப்பகையயர்த்து, நேர்கொ ண்டவுழைவிழிகண்டருகுறுமெய்ப் புலிப்பகை நீத் திருப்பநின்றே, யேர்கொண்டதனித்தில்லை நடம்பு ரியெம்பெருமானையிறைஞ்சல்செய்வாம். (௩)

சிவகாமியம்மை.

வன்னிகரம்வளர்வுறநற்பணி பயிலவருவார்க்குச் சுவர்க்கமீந்து, பன்னுறுதன்மதியடியார் பரிபுரங்கொ ண்டெழிற்கனிமெல்லிதழியாரப், பொன்னணுகுமல ரவைசேர்ந்திசைகொளரி மறையோதி புரிந்துதாழத், தன்னையிடத் திருத்துபரம் பொருளைநிகருமையம்மை சரணிற்றுழ்வாம். (௪)

விநாயகக்கடவுள்.

கற்றைநெடுஞ் சடாமவுலிப் பிறையுமொருதன் கோடுங் கரத்திற் சேர்த்தி, மற்றைநிறை மதியாக்கி மறுவிகந்துவல்லபை தன்வடிவுநூத்த, நெற்றிநிகர்த்த

---

* பையரவல் குலம்மை என்பதும் தேவிதிருநாமம்.

மையன்றிபழகொழுகுதிருமுகத்தை நிகர்ப்பநேபம், பெற்றமழ களிற்றைமனச் சேவகத்தி னிறுவியிடர்ப் பிறவிதீர்ப்பாம். (ரு)

சுப்பிரமணியக்கடவுள்.

நான்குமுகன்றொழுமைந்து முகனீன்றவாறுமுக னாதன்றன்னே, வான்குலவுமொருகடவுள்யானையின்பா கனைப்புனத்துவடிவுகூர்ந்த, மான்குறுகவேங்கையுரு வெடுத்தானையசுரர்குலமாய்த்துப்பேய்கட், கூன்குரு தியொடு மளவிப்புது விருந்திட்டானை நமதுளத்துள் வைப்பாம். (சா)

திருநந்திதேவர் - வேறு.

பாக்குலங்கள்பழிச்சுமைநெஞ்சமும்
வாக்குமங்கைவடிவுநிகர்த்தொளி
தேக்கும்வெள்ளிச்சிலம்புடனெம்மையுங்
காக்குநந்திகழறொழுதேத்துவாம். (எ)

காரைக்காலம்மையார்.

கிடந்துகண்களிற்கேட்குமவன்புக
லடைந்தகைகொடுயிர்ப்பவனத்தன்வாழ்
வடந்தயங்குவனத்திற்றலையினு
னடந்தவம்மைபதமலர்நண்ணுவாம். (அ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

அங்கமானதணங்கினுமேம்படு
மங்கையாகப்படைத்துமகளெனப்
பங்கயாதனன்வெள்குறப்பார்த்தருள்
பொங்குஞானசம்பந்தனைப்போற்றுவாம். (கூ)

திருநாவுக்கரசுநாயனுர்.

மருக்குலாவுமறைவனத்தொன்றிய
திருக்கபாடந்திறந்தசொல்வேந்தனை
யருட்குலாவுமறிவினேழுடிய
விருட்கபாடந்திறக்கவுமேத்துவாம். (௧0)

சுந்தரமூர்த்திநாயனுர்.

கன்றுகாமங்கழன்றிலர்தம்முரு
வென்றுமோர்வரிதென்றிருப்போன்றனை
யன்றுதூதுவனுகவரிவைபாற்
சென்றுவாவென்றதீரனைவாழ்த்துவாம். (௧௧)

மாணிக்கவாசகசுவாமிகள்.

இன்பமாணிக்கவாசகனென்னுமோர்
மன்பெரும்பெயரியாரும்வழங்குறத்
தன்பெயர்க்கொடையோடுதெரித்தபே
ரன்பன்றன்னையகத்துளிருத்துவாம். (௧௨)

அவையடக்கம் - வேறு.

மூதறிவாளருமறிவின்மூகரு
மோதுறுநடுநிலையோருஞ்சொற்பொருட்
டீதுரைப்பதற்கொருசெயலுங்கண்டிலே
ணுதலினென்கவிக்கழிவின்றாகுமால். (௧௩)

நூல்வந்தவழி - வேறு.

காவிநேர்விழிமங்கைபங்கினனிசைக்காந்த
மேவுமாசனற்குமாரசங்கிதையில்விரித்த
தாவில்காளிகாகாண்டமென்கடற்புகழ்தன்னிற்
கூவநீர்மையுட்கொண்டியான்கூறுவன்றமிழால்.(௧௪)

பாயிர முற்றிற்று.

சிவமயம்.

திருக்கூவப்புராண

வசனம்

நைமிசாரணியச் சருக்கம்.

உலக முய்யும் வண்ணம் ஆதியில் முனிவர்களெல்லோருஞ் சிருட்டி கர்த்தாவாகிய சதுர் முகனையடைந்துவணங்கி "யாங்கள்தவம்புரிந்துவாழத்தகுதியானவனத்தைச் சாற்றக்கடவீர்" என்றுகேட்க, அப்போது பிரம்மாவானவர் ஒரு தருப்பையை யெடுத்து வட்ட வடிவாய் வளைத்து பூமியின்மீதுருட்டி, இஃது தங்குமிடத்தை யடைந்து தவம்புரிந்து வாழக் கடவீரென் றருளலும், அம்முனிவர்களெல்லோரும் அந்த நேமியின் பின்னரே சென்று, அது தங்கிய வனத்தை யடைந்து, அங்கிருந்து தவம்புரிந்தனர். ஆதலினுலதற்கு நைமிசாரணியமெனும் பெயருண்டாயிற்று.

அவ்வனமானது, குளிர்ச்சி பொருந்திய மணங்கமழும் மலர்க்கொடிகளும், பலவகைத்தாய பாதவங்களும், சூரியகிரணங்களும் புகாத புதர்களுமுடையதும், வெயில் பனி மழை இவைகளால் வருந்தாது மாதவஞ் செய்பவருக்கு உறைவிடமாகியும் உள்ளது. சுவர்க்க போகத்தினையே துன்பமென வெறுத்து இந்திரன் இவ்வனத்தில் யான் இன்பமடையும் வண்ணம்

செல்லுதற்கு அருள்செய்யக் கடவீரென்று சிவபிரானைச் சந்ததந் தியானித்துப் பிரார்த்திப்ப னென்றால், அதன் சிறப்பை உரைப்பவர் எவர்? கிடைத்ததையே யுணவாகக் கொண்டு மற்றைய வூண்களைத் தேடாது வெறுத்து வதியும் யோகிகள்போன்ற சில சர்ப்பங்களும் ஆண்டுள. புறம்பிற் செல்லும் படவிரிவை யடக்கித் தம்மட்டிற் சுருக்கிக் கொள்ளும் சர்ப்பங்களைப்போலும் மனவிரிவை யடக்கிய யோகிகள் பொருந்தியிருக்கும் அந்த நைமிசாரணியத்தில், எலியும் பாம்பும், பாம்பும் மயிலும், மயிலும் ஓந்தியும், யானையுஞ் சிங்கமும், மானும் புலியும், பகையின்றி வாழும். அவ்விடத்தில் பாவத்திற்கும் புண்ணியத்திற்குமே பகையன்றி மற்றொன்றிற்கும் பகையின்றாம். அவ்வனத்தின்கண் அடர்ந்த நந்தன வனங்களின் இருளை நீக்கும்படி விளங்கி யிருக்கின்ற ஜோதி விருட்சங்களும், அதன்மேற் படிந்துள்ள மேகபடலங்களும், ஆண்டு சிதறிப்படர்ந்துள்ள நாகரத்தினங்களும், ஆதியில் பிரம விட்டுணுக்களுடைய மமதையைப்போக்க வெழுந்தருளிய சிவபிரானாகிய அக்கினி ஸ்தம்பத்தினையும், அத்தம்பத்தி லெழுந்த தூமப்புகையினையும், அவ்வக்கினியிற் சிதறிப் பறந்த தீப்பொறிகளையும் ஒத்து விளங்கின. அந்தக்கரணங்களுக் கதீதராகிய பரமசிவத்தின் பாத தாமரைகளைத் தஞ்சமாக வடைந்த முனிவர்க ளியற்றும் யாகத்தைப் பகைவர் பின்னப் படுத்த வொட்டாத காவலாகவு முள்ளது அவ்வனம்.

அன்றியும் அசோகமென்னும் பெயரை யடைந்துள்ள அவ்வனவிருட்சங்கள், அநங்கனுக்கு அம்பாக வலர்ந்து அல்லலையே விளைக்கும் பாவத்தினின்றும் நீங்கி, அசோகமென்னுஞ் சொல்லுக் குரிய வர்த்தத்தையுண்மையிலடைந்து, குளிர்ச்சியைப்பெற்று அத்தவசிகளது சோகம் நீங்கும் வண்ணம் மலர்களையும் ஈவனவாம். அருந்தவ மியற்றி ஐம்புலப் பகையை யழித்த திருத்தமான முனிவர்கள் வாழும் அவ்வனத்திலுள்ள மூங்கில் விருட்சம், வெண்குடைக்கு நிகராகிய சந்திரமண்டலத்திற்குமேலே உயர்ந்திருத்தலால் * காம்பென்னும் பெயரை விளக்கா நிற்கும். நெடிய ஓலைகளையுடையதெங்குகள் நெருங்கியிருத்தல் மயிற் கூட்டத்தை ஒத்து விளங்கின. சூரியன் அவைகட்கு உச்சியில்வரும்போது அம்மயிலின்மீது வீற்றிருக்கும் அறுமுகக்கடவுளை யொப்பன். அவ்வனத்தே அக்கினியைப்போலுந் தளிரையுடைய மாவிருட்சத்தினருகே நீலநிறமுடைய புன்னைமரம் பொருந்தி யிருத்தல் செஞ்சடைவள்ளலின் இடப்பாகத்தில் அறம்வளர்த்தநாயகி வீற்றிருத்தலை யொக்கும். ஒன்றோடொன்றிழைகின்ற மூங்கில்களிற் றீப்பற்ற, அவற்றின்மீதிருந்த குரங்குகள் திடுக்கிட்டுச் சுவர்க்கத்திலுள்ள கற்பக விருட்சத்தில் பாயாநிற்கும். பசிய இலைகளையுடைய மரங்கள் மலர்களைத் தமது நிழலிலுள்ள முனிவர்கள்மீது சொரிதல், அடியார்கள்மீது கேசவன்

---

* காம்பு - மூங்கில்.

அன்புடன் பொழிகின்ற மலர்மாரியையொத்து விளங்கும். இத்தன்மைவாய்ந்த நலமுடைய நைமிசாரணியத்திலுள்ள தவசிகள் ஐம்புலனையும் மனத்தையுந் திருப்பி முத்தலைச் சூலமேந்து முதற் பெருங்கடவுளிடத்திற்செலுத்தியதால், இவ்வுலகவாழ்வையொரு பொருளாகக் கொள்கின்றிலர். இவர்கள் உலகத்தாரது செல்வங்குறைதற்கும் வளர்தற்கும் காட்டாகவானத்திற்செல்லும் சந்திரனைக்காட்டியும், என்றுமொருதன்மையா யிருக்கின்ற மோக்ஷ செல்வத்திற்குக் காட்டாக எல்லாவற்றிற்கு மேலாக விளங்காநின்ற நமது பரமசிவத்தின் சடைமுடியின்கண் தேய்தலும் வளர்தலுமின்றி யிருக்கும் பிறைமதியைக்காட்டியும், தமது தவவாழ்க்கையே யழியாத நித்தியத்துவமுடையதெனப் பிறர்க்குணர்த்தும்படி வாழ்வார்கள். பக்தியோடு பரசிவத்தைச்சார்ந்து அனுபவித்திருக்கும் இன்பமே முத்தியல்ல வென்றால், இத்தரையில் சர்வபரித்தியாகஞ்செய்த மேலோர்கள் துன்பத்துக்கிடனாய் மின்னலைப்போற்றோன்றி மறையுஞ் சிற்றின்பத்தை வெறுக்காதிருப்பார்களென்று சொல்லவும் வேண்டுமோ? இவர்கள் செவ்வரிபரந்த கண்களையுஞ் சிவந்த வாயையுஞ் சிறுபிறைபோன்ற நெற்றியையுங் கரியகூந்தலையுமூங்கில்போன்ற தொடியணிந்த தோள்களையும் மலைபோன்ற தனங்களையுமுடைய மகளிர் அன்புடனணைந்தாலும் அவரைத் தமது தாய்போற்கருதுந் தன்மையையுடையவர்கள்; பொன்னையும் ஓடுபோற்பார்ப்பவர்கள். உறவும் பகையுமில்லாத ஞானத்தை யுடையவர்

கள். மித்துருவைக் காக்கவுஞ் சத்துருவைப் போக்கவும் வலிமைவாய்ந்த உண்மையான தவவலிமையிலே மிக்கோர்கள்; இன்பதுன்பத் தொடர்ச்சிகள் தேகத்திற்கேயென்று மகிழ்ச்சியும் வாட்டமும் நீங்கிய துணிபினையுடையவர்கள்; உருத்திராட்சமே ஆபரணமும் விபூதியே களபமுமாக விளங்கிய தேகவழகையுடையவர்கள். சடையே மகுடமாக வுடையவர்கள்; நீர்நிறைந்த கமண்டலமுந் தண்டுந் தாங்குங்கையை யுடையவர்கள்; குன்றவில்லியாகிய விமலனது பாததாமரையிற் பக்திபொருந்திய மனதையுடையவர்கள்; கண்களி லாநந்தபாஷ்பஞ் செரிய மனம் நெக்குவிட்டுருக மயிர்க்கூச்செறிய தண்ணிய கங்கை யணிந்த எம்பிரானைப் பூசிப்பவர்கள். நான்கு வேதத்தின் பயனாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தைப் பண்புடன்பகரு நாவையுடையவர்கள்; காமவெகுளி மயக்கமென்னு முக்குற்றங்களு நீங்கினவர்கள்; அயனையு மரியையு மவர்பதவிகளையும் விரும்பாதவர்கள்; முதற்கடவுளாகிய நமது ஸ்ரீகண்டரருளினால் அவர்கள் செய்கைகளை ஓர் திரணத்தைக் கொண்டியற்றவும் நிறுத்தவும் வல்லவர்கள்; புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் விருப்பு வெறுப்பில்லாதவர்கள். அன்பான இனிய வசனமும் பரிசுத்தமுந் திருவருண்மார்க்கமு மாசாரமுஞ் சத்தியமு முடையவர்கள். தீமை காமம் பொய் ஆசை கோபம் இவைகளினின்று நீங்கியவர்கள். வேதாந்தக் கருத்துணர்ந்த மேலோர்கள்; வேதண்ட வில்லியார் ஆலயங்கடோறும் அடைந்து வணங்கு நேயர்கள்.

இத்தகைய பெருமைவாய்ந்த முனிவர்களுக்குள் முன் பொருநாள் காசிபர் வசிட்டர் கௌதமர் பாரத் துவாசர் கண்ணுவர் சவுனகர் புலத்தியர் சனகர் நார தர் வான்மீகர் சாதாதபர் முதலாகிய வனேகர்கூடி அவ்வனத்தின் ஒருபக்கத்திற்சென்று வீற்றிருந்தனர். அங்ஙனமிருந்தவர் பிறவிக் கடலைக் கடப்பது ஒப் பற்ற பரசிவகதியிற் பொருந்தினவர்க் கன்றி யேனை யோர்க்குஅரிதென்று தமதுபுந்தியுட்கொண்டு, அனை வரும் அது கைவல்லியமாகும் வண்ணம் முயற்சி ப்ப தெவ்வாறென்று ஆராயுஞ்சித்தத்துடன் ஒருவ ரை யொருவர் வினவ, அப்போது அருந்ததிக்குத் தலைவராகிய வசிட்டர் அவர்களைப் பார்த்துச் சொல்லுகின்றார். "எவ்வகைப் பொருளையுங் கொடு க்க வல்லது தவமேயன்றி வேறல்ல. இவ்வுலகில் அந் தத் தவத்தைச்செய்வதே இவ்வுடலெடுத்ததனாலாகத் தக்க பெரும் பயனென்பார்கள். தவத்தினால் எமனை யும் வெல்லலாம்; தவத்தினால் எழுகடலையும் உண்ண லாம்; தவத்தினால் மேருவைப் பறித்துத் தாங்கலாம்; தவத்தினால் அக்கினியையுந் தரிக்கலாம்; தவத்தினால் ஐம்பூதங்களைச் சிருட்டிக்கவும், உயிர் வர்க்கங்களை யுற்பத்தியாக்கவும், தோன்றியுள்ள வுயிர்களை சங்கரிக் கவும், தஞ்சமென் றடைந்தவர்களுக் கருள்புரியவுங் கூடும்; அண்டமும் அதிலுள்ள பொருளும் தன் னிடத்தில் அடங்கும் வண்ணம் பெரிய வடிவத்தைக் கொள்ளவும், அணுவைப்போற்குறுகவும், ஆழமாகிய நீரிலும் ஆகாயத்திலும் செல்லவும், என்றும் அழி

வில்லாம லிருக்கவும், செய்ய வல்லது தவமே யன்றி வேறு யாதுளது? இலக்குமியை மார்பில் வைத்தருளிய விஷ்ணு முதலிய தேவர்களைத் தவத்தினால் நின்றவிடத்தில் தியானித் தழைக்கவுங் கூடும். அத்தேவர்கட்கும் அறிதற்கரியவராகிய வெள்ளியங்கிரியில் விளங்கும் விமலனது பாதத்தையு மடையலாகும். ஆதலால் உயர்வொப்பில்லாது தனக்குத்தானே ஒப்பாகிய தவத்தினையே செய்யவேண்டியது, என்று வசிட்டமுனிவ ரோத, அதைக்கேட்ட சாதாதபமுனிவர் இதனைக் கூறுகின்றார்.

"முனிசிரேஷ்டர்களே! தருமமே யொப்பற்ற பொருளாகும்; ஏனெனின், இப்பூமியினிடத்து அது இடையே மாறுபடாததகுதிமிக்க வின்பத்தை யீந்து, விண்ணுலகினுமுடன்சென்று அருமையான வவ்வின்பத்தினையு மளித்து, அந்தகனையும் அணுகாவண்ணம் வெல்லு மென்றால், இம்மையிலும் மறுமையிலுந் துணையாவது அவ்வறமேயன்றி மற்றொன்றுந் துணையாகாது. அதுவே புகழுங் கல்வியும் செல்வமும் வீரமும் பொலிவும் மகிட்சியும் அழகும் ஆசாரமும் மேன்மையும் அளித்து, இகழப்பட்ட பழி பாவங்களை நீக்கி, உமா மகேஸ்வரர்களிடத்தில் ஒளிபெற்றிருக்கும் சிவகணத்தொருவனாயிருக்க அவர்களைப் பரிசுத்தான்மாவாக்கி, அவர்க்கு அவ்வுமா மகேசுரர் திருவருள்புரியும் வண்ணம் செய்விக்கும். அன்றியும், இடப வாகனத்தின்மேல் எழுந்தருளிவரும் எம்பெருமானாரது அழ

ஷப திருமேனியும் தருமமேயாகும். ஆதலா லொருவன் யாதானுமொன்றை இயற்றவென்றால் அவ்வறத்தையே யியற்றுதல் வேண்டும்.'' என்று சாதாதப முனிவர் கூற, விபூதி யணிந்திருக்குந் திருமேனியில் உருத்திராக்கமாலைகள் நிரம்பியிருக்க வீற்றிருக்கும் கௌதமமுனிவர் இதனைக் கழறுகின்றார்.

"சப்திக்காநின்ற கருமை நிறம் பொருந்திய கடலாற் சூழப்பட்ட வுலகினில் செய்யவேண்டுவது யாதென்று கருதின், பிரம்மகபாலத்தைக் கரத்திலேந்தி இல்லங்கடோறும்பலியிரக்கும் பரமசிவனைத்திருவுள்ளக்களிப்புடன் தருமரூபமாகிய இடப வாகனத்தின் மீது எழுந்தருளிவரப்பண்ணி எளிதில் அநுக்கிரகஞ் செய்விப்பது, பாவத்தைப் போக்கவல்ல தானமேயன்றி வேறொன்றுண்டோ ? அரிய கலைக்கியானங்கள் யாவையும் ஆராய்கின்ற விவேகிகளும், மகாதபசிகளும், உயர்குலத்தி லுதித்தவர்களும் தானஞ் செய்பவனையே புகழ்ந்திருக்கின்றார்கள். அது மாத்திரமோ? சத்துருக்களும் உறவு கொண்டு அவன் பக்கத்தையடைவார்கள். மேகத்தைப்போற் பயனை யெதிர்பாராமல் ஈவோனது விரிந்தபுகழானது பதினான்குலகத்தினும் பரவும். பிரம்மா விஷ்ணுமுதலிய தேவர்கள் தங்கள் தங்கள் பதவியை அவனுக்குறைவிடமாகச் செய்வதற்கு ஒருவர் முன்னொருவர் முந்திவந்து வாதிடுவார்கள். இவ்வுலகில் நல்ல தானத்தின் பெருமையையறிந்தவர்கள் வாயினால் இல்லையென்கிற சொ

ல்லையும் சொல்லார்கள். அவர்கள் (தம்மால்) தொகுத்தற்கரிய தம்முயிரை ஒருவர் வேண்டுவரேனும் அக்குறிப்பறிந்து அதனை அவர் வேண்டுமுன் தாமேவிரும்பித் துணிந்து கொடுப்பரென்றால், அவர் தம்மால் தொகுத்தற்குரிய பொருள்களில் அருமையாகக் கருதப்பட்ட ஓர் பொருளைக் கொடுப்பா ரென்பதில் என்ன விசேடம்? ஒன்றுமில்லை. பூமியில் தானஞ் செய்யாதவனது ஜநநத்தை முள்ளாற் சூழப்பெற்ற முருக்கமலருக்கு ஒப்பாகச் சொல்கின்றார்கள். ஆதலினாலே மிகுந்த புகழைத் தரத்தக்க தானமே மற்றெல்லாவற்றினுஞ் சிறந்தது" என்று பிரகாசம் பொருந்திய சடாபாரத்தையுடைய கௌதமர் கூறினர். அதனைக் கேட்டுக் காசிப முனிவர் கழறுகின்றார்.

"உலகத்தில் ஒப்பற்ற சத்திய மொன்றே தவத்தின் பலனையுந் தானத்தின் பலனையும் ஒருங்கேயடையும் வண்ணஞ் செய்தலினால், அதனையொருவன் தலைமையாகவாய்க்கப்பெறுவானாயின், அதுஅவனைப் பந்தத்தில் நின்றும் நீக்கி நான்மறை முடிவான பரசிவத்தின் அரிய பதவியைப்பெறும் வண்ணம் உயர்த்தி விடும். இன்னும் ஆராயுமிடத்துச் சந்திர சூரியர் கிரமமாய் உதித்தொடுங்குதலும், வாயுபிரமாணத்தோடு சஞ்சரித்தலும், கடலானது எல்லையைக் கடவாதிருத்தலும், மேகம் அளவோடு மழையைப் பெய்தலும், அருவமாகிய வுயிர்கருப்பையிற் சென்றடைதலும், பின்னுற்பத்தியாதலும், வாழ்நாளளவுந் தேகத்தில் நிலைபெற்று

நிற்றலும் சத்தியத்தினு லல்லவோ? பிறவியினின்றும் நீங்கி நமது பிரானுகிய சந்திரசேகரனது பாதத்தை யடைய வொருவன் விரும்புவானுயின், அவன் அரச னுயிருந்து இவ்வுலகெலாம் ஆளும்படி நேர்ந்தாலும், அல்லது துன்பமடைந்து இவ்வுடலை விட்டிறக்க நேர் ந்தாலும் சத்தியத்தினின்றுந் தவரா திருத்தல் வேண் டும்." என்று காசிபமுனிவர் சத்தியத்தி னியல்பைத் தவசிகளுக் குரைக்க, அதனைக்கேட்டு பாரத்துவாச முனிவர் பகர்கின்றுர்.

"குன்றுபோலுஞ் சலியாத உயர்ந்த குணத்தினை யுடையவர்களே! தேவர்கள் மகிழும்படி யவிர்ப்பாக த்தா லுணவை யுண்பித்து, பூமியிலுள்ள உயிர்களுக்கு மேகத்தைக்கொண்டு உணவாதிகளை வழங்குவித்து, எண்ணிறந்த உலகங்கட்கும் இன்பத்தை யளித்து, தானம், புண்ணியம், தவம் இவைகளையும் விருத்தி செய்வித்தலும், காமனை யெரித்த கடவுளை மிகவும் மனமகிழச்செய்வதும் சுருதிகளிற் கூறிய யாகமே யாகலான் அதுவே மேலான பொருளாகும்." என்று பரத்துவாச முனிவர் பகர, அதனைச் சிந்தித்துக் கண் ணுவமுனிவர் கழறுகின்றுர்.

"இல்லற வொழுக்கத்தைப் பொருந்தி பிதிர்க்கள் கடனைத் தமக்கியன்றவளவி லியற்றித் தங்கள் மரபி லுள்ளவர்கள் அடையக்கூடிய நரகவேதனையை நீக் கும்பொருட்டு அறிவிற்சிறந்த மக்களைப் பெறுவதற் கிணையாக மற்றென்றுமில்லை. மேலானகீர்த்தியோடு

இம்மை மறுமை யென்னும் இரண்டிலும் இன்பத்தை த்தரும் புத்திரரைப் பெறும் புண்ணிய வாழ்க்கையானது மேற்சொல்லிய தவத்தைப் பார்க்கிலு மிகச் சிறந்ததாகும்'' என்று மகப்பேற்றைக் கண்ணுவ முனிவர் சிலாகித்துப் பேச, கொன்றை மாலை யணிந்த கூத்தனைப்போற்றி இடபத்தை யொத்த திடகாத்திர ரூபத்தையுடைய துருவாசமுனிவர் உரை செய்வா ராயினர்.

"உறவினரிடத்துந் தாய் தந்தையரிடத்தும் மனைவியினிடத்தும் புத்திரரிடத்தும் பூமியினிடத்துஞ் செல்வத்தி னிடத்துங் கீர்த்தியி னிடத்தும் மற்றையவற்றினிடத்தும் உண்டாகும் அவாவாகிய சஞ்சலத்தைப் போக்க வல்லது உண்மையாகிய துறவேயன்றி மற்றொன்றுமோ ? * ஈட்டும்போதும், பதனஞ்செய்யும்போதும், துன்பத்தைச் சேர்ப்பித்தலினாலும், நெருங்கிய சுற்றத்தாரையும் வாட்டும் பகைவராகச் செய்வித்தலினாலும் விரும்புகின்ற திரவியத்தை வெறுத்திருத்தலே யின்பமாகும். கனலுங் கள்ளும் விஷமுங் கிட்டினவர்களையும் உண்டவர்களையு மட்டுமே தகித்து மதியை மயக்கி அழிவினை யுண்டாக்கும் மிக்க துன்பத்தைத் தருகின்ற காமமோ, அதிக தூரத்திருந்து நினைத்த மாத்திரத்திலேயே மேற் சொல்லியனவற்றை யெல்லா மியற்றிவிடும். பின்னுந் தொடர்ந்து துன்பத்தோடு கொடியநரகத்தினுந் தள்ளும்.

* ஈட்டல் - சம்பாதித்தல்.

ஆகையால் பெண்ணாசை முதலியவைகளை நீத்து, குற்றமறத் துறத்தலாகிய அரிய செய்கையொன்றே மேலானமோட்சத்திற் செலுத்தும்" என்று தவத்திலுயர்ந்த துருவாசமுனிவர் சாற்றினர். இவ்வண்ணமாக, தபசிகள் வேறுவேறு விதமாய்ப்பேசி வினையொழியத்தக்க நன்மார்க்கத்தை யாராயுந் தருணத்தில், அவர்கள்செய்த தவமே யோருருவாகி வந்ததைப்போல் உருத்திராக்கமாலை மார்பி லழகைச் செய்ய, பிரகாசிக்கின்ற திரிபுண்டர நீற்றொளிநெற்றியிற் பொலிவெய்த, கரத்திற்றண்டொடு கமண்டலந் தாங்கி சூதமுனிவர் அவ்விடம் வந்தனர். அவரைத் தவசிகள் யாவருங்கண்டவுடன் விரைந் தெதிர்கொண்டு வணங்கித்துதித்தழைத்து வந்து அழகிய வேராசனத்தி லமர்வித்திருக்கச்செய்து, அருக்கிய முதலியவளித்துச் சொல்லுவார். "உண்மையான மோட்சமடையு முபாயத்தை யாங்களாராய்ந்துக்கொண் டிருக்குஞ் சமையத்தில், போசன விருப்பால் மயங்கி வருந்து வோரிடத்தில் விரைந்து போனக மளிக்க வருபவரைப்போல், வந்தீர்; பழைய புராணங்கள் யாவையு முணர்ந்த முனிவரே! நீரிங்கேவந்ததனல் யாங்களுய்ந்தனம்; நல்லவர்கள் தாம்பெற்ற கல்வியுஞ் செல்வமும் யாவருஞ் சிறப்பாகப் பெற்றவையே யாகும். வியாசமகா முனிவரையொத்த சத்தியஞானத் தலைவரே! அருளைப்பொழியும் அழகிய முகத்தையுடைய தவத்திற்சிறந்த சூதமுனிவரே! வினையின்

சம்பந்தம்நீங்கிப் பரமசிவன் பாததாமரையை யடை யுந்தன்மையைப் பகரவேண்டும்" என்றூர்கள்.

இவ்வண்ணம் முனிவர்கள் வினவ, சூதமுனிவர் மனதிற்குதூகலமெழ, "நீங்கள் வேருெரு பொருளை யுநினையாமல் முத்தியை யடைய நினைந்தீர்கள் அதனு லும் மிடத்திற் சிவபெருமான் றிருவருள் பதிந்தது; யானும் இன்றையத்தின முங்களை யடைந்து உய்ந்த னன்" என்று ஓதுகின்ருர். "அருமையான வித்தைகள் பதினெட்டாம்; அவை:—இருக்கு யசுர் சாமம் அதர் வணமென வேதம் நான்கு, அங்கமாறு, கருமகாண்ட ஞானகாண்டமெனப் பிரிவுபட்ட மீமாஞ்சை, மிருதி, காந்தருவம், பரதம், வாகடம். புராணம், நியாயசாத்தி ரமென்று சொல்லப்படுகின்றன. இவைகளில் புராண மே மேன்மையுடையதாம்; சொல்லப்பட்ட அப்புரா ணம் பதினெட்டாம்; அதில் முக்கணெம்பெருமான் யாவர்க்கு முற்பட்டவனுகலின் அவருக்குப் பத்துப்பு ராணமும், விண்டுவிற்கு நான்கும், அயனுக்கிரண்டும், சூரியனுக்கு மக்கினிக்கு மொவ்வொன்று மாக வமை யப்பெற்றன. அவற்றுட் பரசிவத்தின் புராணம் பத் தும் மிகச்சிறப்பினை யுடையனவாம். அவைகளிற் காந் தம் மிகச் சிறப்புடையது; அக்காந்தம் சனற்குமார சங்கிதையில் காளிகாண்டம் அதிக இனிமையையு டையதென்று பேரறிவாளர் மொழிவார்கள்; அதில் ஒப்பற்ற முத்தியை யடைவதற் கேதுவாயுள்ளதை பூர்வத்தில் எமது ஆசிரியராகிய வியாதமுனிவனாக்

கேட்க அவர் என்பால்வைத்த கருணையினால் அருளிச் செய்தார். அவர் அன்றுரைத்தவண்ணம் உமக்கு யா னுமொழிவேன். இவ்வுடலெடுத்ததனாலாகிய பிரயோ சனத்தைப்பெறும் முனிவர்களே! அதனைக் கேளுங் கள்; இந்த சிறையாகிய பந்தத்தினின்றும் நீங்கி ஒப் பற்ற முத்தியை யடைதல் உண்மையான சிவஞானத் தாலல்லாமல் வேறுள்ள கருமங்களாலாகா; அச்சிவ ஞானத்தையடைந்தவர் பிரமாவின் கற்பாந்தத்திற் சச் சிதாநந்த முத்தியை யடைவாரென்று சான்றோர் கூறு வர். பிறையணிந்த முக்கட்பிரான் திருத்தலங்களிற் றருமஞ் செய்பவரைத்துரத்தும் பாவிகளும், பாவகிரு த்தியங்களை யியற்றுபவருமாகிய விவர்கள், அக்குற்றங் களை யெளிதிற் போக்கி, மறைமுடிக்கரிய ஞானத்தை மருவி மெய்மையானநற்கதியை யடைவார்கள்; சர்ப் பங்களின் மேல் எலிகள் பயமின்றித் தாவி யோடுகி ன்ற தவத்திற் சிறந்த நைமிசாரண்யவாசிகளே! அஞ் ஞான வலிமையொழிந்து மெய்ஞ்ஞானத்தை யடைய விரும்பினால் வியாக்கிர பாதமுனிவர் துதிக்கச் சிற்ச பையில் நடம்புரியுஞ் சிவபெருமானுடைய தலங்களை இக்கலியுகத்தில் மிகவு மனமுருகி யடையவேண்டும்." என்று சூதமுனிவர் கூற, முனிவர்கள் களிப்படைந்து குற்ற மற்ற சூதமுனிவரே! வியாசமுனிவருடைய மாணாக்கர்களுக்குள் ஞானத்தாலுயர்ந்தவரே! முத்தி யைச் சிவபிரான் வாழுந் தலங்கள் கொடுக்கத்தக்கன வென்றீர், யாங்கள் சொல்வதொன்றுண்டு, "சந்திரன் விளங்குஞ் சடாபாரத்தையுடைய தாணுவுஞ் சாம்ப

வியுந் தங்கள் புத்திரர்களோடு கைலையில் இருப்பது போல வீற்றிருப்பதாகியும், அளவற்ற அமரர்களும் இந்திரனும் அயனும் அரியும் என்றும் உவகையுடன் சிவபெருமானைத்துதித்துப் பொருந்தி யிருப்பதாகியும், அனந்தங்கோடி தலங்களிலே யடையக்கூடிய பிரயோசனம் யாவையும் எளிதிலீவதாகியும், அயனழிந்தாலும் அழியாததாகிப் போகத்தையும் மோட்சத்தையும் ஒருங்கே யுதவுஞ் சிறப்பினை யுடையதாகியும், கங்கைமுதலிய தீர்த்தங்களைப் பார்க்கிலும் மிக்க புனிததீர்த்தங்கள் பொருந்தி யிருப்பதாகியும், நினைத்தாலும் வசனித்தாலுங் கேட்டாலும் பிரம்மவிட்டுணு சிவனென்பவர்களது பதவியைத் தரவல்லதாகியுமுள்ள வோர்தலத்தை யெங்கட்கியம்பக் கடவீர்" என்றலும், எழுந்த பேருவகையால் பரமசிவத்தின் திருக்கூவத்தை யுள்ளத்தில் தியானித்துக் கன்றை நினைக்கும் பசுவைப்போல மனங்கசிந்துருக மயிர்க்கூச்செறிய கண்களி லாநந்தபாட்பந் ததுப்ப உடல் கம்பிக்க முனிவர்களே! நீங்களியம்பியவை முழுமையும்பெற்ற பெரிய தலமொன்றுண்டு, அதனது பெருமையை யாதிசேடன் அநந்தயுக மிருந்தறைந்தாலும் அடங்காது; யான் சிறிதறிந்த மாத்திரம் இயம்புகின்றேன்.

நைமிசாரணியச்சருக்க முற்றிற்று.

திருத்தலச்சருக்கம்.

அனாதியாயுள்ள ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களுநீங்கி மெய்ம்மையான முத்தியை ஆன்மாக்கள் காணும் வண்ணம், விற்கோல நாதரெழுந்தருளி யிருக்குந் தலத்தைச் சூழ்ந்த தொண்டை நாட்டினழகைச் சுருக்கிச் சொல்லுகின்றோம் கேளுங்கள். ஆகாய மாகிய பெண் கரிய சலநிறைந்த சாடியில் வெள்ளியவஸ்திரத்தைத் தோய்த்து அக்கரிய வஸ்திரத்தை விரித்துப் போர்த்ததைப்போல் வெண்மையான மேகங்கள் கடனீரில் படிந்து, கரிய நிறத்தோடு பரவியமை, விண்ணுலகில் உலவுகின்ற வெள்ளையானையானது கடலின் கண்சென்று, சூல்கொண்ட சங்கங்களையும் முத்தங்களையும் கரையின்கண் எறியும் அலையோடு கூடிய நீரைமுகந்து, மண்ணுகில் உலவுகின்ற மதம்பொருந்திய கரியயானைபோன் றிருந்தது. அல்லதூஉம் தென்கயிலாய மாகிய காளத்தி மலையில் வாழ்கின்ற எமது பெருமான்றிருமுடியில் முன்னொரு யானையானது சென்று குளிர்ந்தநீரை அபிடேகஞ் செய்ததுபோல், நந்திமலையென்னும் பெரிய சிகரத்தின் மேல்வந்து நீரைப்பொழிந்தது. உயர்ந்த மலையின் சிகரத்தினின்றும் அருவிநீரானது பக்கங்களிலுள்ள இரத்தினங்களை வாரிக்கொண்டிழியுந் தோற்ற மானது, சிவபிரான் முடியில் வாழும் பாம்பானது அம்முடியை விட்டோடும் இயல்பினை யொத்திருந்தது. அன்

றியும், கொடிய அரசர்கள் குடிகளைச் சிறைகொண்டு சென்று மீட்டும் அவரை விடுவாராயின் சிறைபிடிக்கப்பட்ட குடிகள் விருப்பத்தோடு தம் நகரை நோக்கிச் செல்வதுபோல், மேகங்களாற் பொழியப்பட்ட நீரானது கரிய பெருங்கடலைத் தேடிச்சென்றது. சிறப்பு பொருந்திய நந்தி மலையில் காராம் பசுவைப்போலுங் கரியமேகங்கள் அடைந்து அமுதமாகிய நீரைப் பொழிதலும், அந்நீரானது பாலாறென்கின்ற அழகிய ஒருபெயர்பெற்றுப் பூமியிற் செல்கின்றது. பெருஞ்சிறையிலகப் பட்டிருக்கும் மெலியவர்களை வலியவர்கள் சென்று மீட்டுக்கொண்டுச் செல்வதைப்போல, ஏரி குளங்களில் நெடுநாளாய்ப் பொலிவு பெற்றிருக்கும் நல்ல நீரை ஒலித்துக்கொண்டு செல்லும் பாலாறானது அவ்வேரிகளின் கரைகளை யுடைத்து விரைவாகக்கொண்டு செல்லாநிற்கும். ஆகாயத்தில் பொருந்திய கொடிய கேதுவென்னும் கிரகம், அவ்வாகாயத்திலுள்ள குளிர்ந்த சந்திரனென்று நினைந்து வாயைத்திறக்கும்வண்ணம், அப்பாலி நதியானது குறிஞ்சி நிலத்தின்கண் சென்று காட்டுப் பன்றியின் கொம்பையதன் அலையாகிய கரங்களில் வாரிக்கொண்டு மேலெறியும், அண்டமுகட்டை யளாவிவரும் நீரானது தொண்டை நாட்டினில் நிலவளங்களை நிறப்புவதன்றியும் ஒளிவீசும் புதிய விரத்தின முதலிய மலைவளங்களையும் அந்நிலந்தரும்படிச் செய்யாநிற்கும் அன்றியும் அந்நதிப் பெருக்கானது சுனைகளிற்றங்கி நின்று ஓர் பக்கங் குங்குமத்தைக் கலந்தும் ஓர் பக்கம் மகரந்தத்

தைக் கலந்தும் செல்வதை நோக்குங் கால், மலை மங் கையாகிய பார்வதியைக் கலந்தருளிய சிவபெருமானை யொத்திருந்தது. அவ்வெள்ளம் அலையை வில்லாக வும் குறுக்கே வருங்கொடிகளை நாணாகவும் குமுத வரும்புகளைப் பாணங்களாகவுங்கொண்டு கடலோடு போர்செய்யப்போவதை யொத்து மிருந்தது. பனைமர ங்களைத்தள்ளி, சோலைகளிலுள்ள மதுவோடுங்கலந்து, அன்னப்பறவைகள் தங்குதற் கிடமுடையதாகி, வை கையாற்றிற்குச் சமானமாய்ச் சங்கங்களைப்பெற்று, இரத்தினங்களைச் சுத்தமாம்படிக்கழுவி, இப்பாலாறு செல்லாநிற்கும். பாலியா மங்கை * சிலம்பை நூபு ரமாகக் காலிலணிந்து, சந்தனத்தை நெற்றியிற்றிலத மாக விட்டு, அழகிய கொடிகளை இடையிலணியும் மேகலாபரணமாகப் பொருந்தி, தனத்தின்மேல் முத் தங்களைப் பிரகாசிக்கும் ஆரமாகக்கொண்டு, சங்குக ளாகிய வளையல்களை யணிந்து, பாம்புகளை இரத்தின மாலைகளாகத் தாங்கி, நீலோற்பலங்களைக் கூந்தலாகப் படைத்துச் செல்வாளாயினள். இளமை தங்கியவா ளைமீன்கள் மேலெழுந்து தெங்கின்கணுள்ள இளநீரை மோத, அவ்விளநீரானது வேகமிக்க குதிரைகள் பூட் டிய சூரியன் இரதங்காறும் விசையோடும் போயிற்று; போகவும் அதனைத்தாகவிடாய் கொண்டவ்விடத்தி ருந்த அருணனாகிய பாகன் விரைவாகப் பற்றியுண்ணு கிற்பன். இஃது ஆ கூமுற்றவர் எவ்வளவு தூரத்திலிரு

---

* சிலம்பு - மலை.

ப்பினும் அவருக்கு வேண்டியவற்றை அவ்வாகூழ் ஊட்டாமற் போமோ? என்பதனை யறிவித்ததாம். பாலாறென்னும் பேரரசன் கஸ்தூரியுஞ் சந்தனமும் இரத்தினமும் முத்தும் மலர்களுந்தாங்கி, யானைமேலிவர்ந்துகொண்டு, பெருமித முடையனுய் அளவற்றபேர்கள் துதிக்கும்படிவர, அதனையுணர்ந்த கடலரசானது விரைவாகவோர் காததூரம் எதிர்சென்றழைக்கச் செல்லாநிற்கும். தன்னிடத்திலாடிய மானிடர்க்குப் புறம்பே படிந்த அழுக்கோடு உள்ளத்தின்கணிகழும் அழுக்கையும் ஒழித்து மீண்டும் பிறவா வண்ணஞ்செய்து நின்மலத்தன்மையைக் கொடுக்கும் புண்ணிய தீர்த்தம் இப்பாலாறன்றி யுலகத்தில் வேறொன்றுண்டோ? அப்பாலாருனது தன்னைக்கண்டோர் பிரமபதமும் தன்னிற் படிந்தோர் விஷ்ணு பதமும் சலத்தை உண்டோர் உருத்திரபதமும் பெறுதற்கு முறையே தாமரையையும்-சங்கினையும் சர்ப்பத்தையுந் தாங்கிச்செல்கின்றதென்பதாம். பொய்கைகளிலும் அகழ்களிலும் சோலைகளிலும் உலவும் பாலாற்றின் வெள்ளமானது மள்ளர்கள் ஆரவாரஞ் செய்யாநிற்கும் வயலில் (கண்ணுதற்பெருங் கைலையையடைந்து ஆயிரஞ் சிரங்களைப்பெற்று வலம்புரிச்சங்கங்களை யூதும் பாணுகம் பன்னகைகளைப்போல்) நீண்டிருக்கும் கால்வாய்களில் நிரம்பியோடும். விசாலமாகிய மலையிலுதித்த பாலாற்றின் தெள்ளிய நீரானது பரவ,அதுகண்டு மள்ளர்கள் மருதநிலப்பறையோடும் ஆர்ப்பரித்து இடந்தோறுங் கூட்டமாகக்கூடி வயலினிடத்தே கலப்பைகளில் கடாக்-

களைப்பூட்டி நல்ல அழகுள்ள பெண்கள் காற்சிலம் பைப்போற் படைச்சால் கீறிப்போக பக்கங்களிற் பரவியுழுவார்கள். எமனுடைய வாகனத்துக் கொப் பான கடாக்களைக் கலப்பைகளிற் பூட்டி அதட்டிச் செலுத்தி மள்ளர்கள் உழுகின்ற வயல்களின் கண் உள்ள அன்னப்பறவைகள், சங்கங்களைப் பார்த்துத் தாமீன்ற முட்டையெனக் கருதி, அவற்றினை விரைந் தெடுத்து, ஆகாயத்திற்சென்று பார்த்து, ஓகோ இவை நம்முடைய முட்டையல்ல சங்கினங்களென்று விட்டு விட, அவை கீழே விழ்வது சந்திரன் ஆகாயத்தினின் றுந் தவறி விழ்வதையொக்கும். நெருங்கிய இதழ் களை யுடையதாமரை மலராகிய கிண்ணத்தில் நிரம் பியுள்ள மதுவை மொய்த்திருக்கும் வண்டினங்களோ டிப்போக மள்ளர்கள் வாய்மடுத்து வயிறாரவுண்டெ ழுந்து, கால்வாய் வழியாகவந்த நீரானது தேங்கிச்சிற ந்திருக்கும் வயல்களையுழுது, கலக்கிய சேற்றைப் பர ம்படித்துக் குழம்பாகச்செய்துத் பறித்துக்கொண்டு வந்த நாறுகளை நடுவார்கள். அதன்பின் உழவர்கள் களை களைவிப்பக்கருதித் தங்கள் மாதர்களைப் பார் த்து, அமிர்தத்தை யொத்தவர்களே! எங்கும் உங்கள் விழிகளோடும் அதரத்தோடும் முகத்தோடும் தாம ரை மலரும் குமுத மலரும் நீலோற் பல மலரும் மாறுபட்டு நிற்கின்றன வென்றுரைக்க, அம்மாதர் கள் அவற்றின் பால்பகை பாராட்டி வளையல்களொ லிக்க வயல்களிலுள்ள அம்மலர்களை வேரோடுங் களை வார்கள். பூரணச்சந்திரனை யொத்த முகவிலாசத்தை

யுடைய மள்ளஸ்திரிகள் வயலின் கண் வருதலும் அதில் வாழுஞ் சேற்கெண்டைகள் கண்களால் எங்களைப் புறங்கண்டவர்கள் எம்மிருப்பிடத்திற்கு என்ன காரணத்தால் வருகின்றார்கள் அதனையறிவோமென்று மேற்கிளம்பி மோதா நிற்கும். ஒள்ளிய வளையலணிந்த மள்ள ஸ்திரிகள், இலக்குமியானவள் பலவுருவங்களைக்கொண்டு வயற் பக்கங்களில் நெருங்கியுள்ள தாமரை மலர்கள் தோறும் பொருந்தி யிருந்து, பின்னர் அதினின்றுங் குதித்து நின்றாற்போல, நீருள்ள குளிர்ந்த வயல்களில் நின்றனர். அளவில்லாத அலைவீசும் நீர் நிறைந்த தண்ணிய வயலில் செந்நெற் பயிர்களின் இலையொன்று ஓர் புரம் வளைந்து பசியகதிர்மேல் நிமிர்ந்து தோன்றுவது, கொலைமதயானைகளை யடக்கும் அங்குசம் போன்றிருந்தது. மச்சங்களை யுண்ணவந்த நாரைப் பட்சிகள் ஓடும்படி வாளைகள் மேலெழுந்து பாயாநின்ற வயல்களில் விளைவித்த பயிர்கள் பாலினதி சூழ்ந்த தொண்டை நாட்டிலுள்ளவர்கள் செய்த புண்ணியம் விளங்கும் வண்ணம் செழுமையுடன் விளைந்தன. மேலே நிமிர்ந்து பசுமையாகிய சுருள் விரியப்பெற்ற பயிர்களில் பால் நிறைந்து பழுத்திருக்குங் கதிர்களை மள்ளர்கள் பார்த்து, அரிவாளைக்கையிற் கொண்டறுத்து, ஆகாயத்தை யளாவப் போர்களை வகுப்பார்கள். பின்னர் போர்செய்யு மள்ளர்கள் போராக விருக்கும் அவைகளைக் கட்டாகக் கட்டி உடம்பில் வியர்வை யரும்பச் சுமந்துகொண்டு போரக்களத்தில் நெருக்கமாய்ப் பரப்பி அடித்து

கரிய கடாக்களைக்கொண்டு துவைப்பித்து, ஆர்ப்பரிப்பார்கள். அதன் பின்னர் வேருகிய வைக்கோல்களை நீக்கி காற்றுலாவுந்திசையாக நின்று பதர்களைத்தூற்றி நெற்குவையாக்கி, அதில் ஆறிலொரு பாகம் அரசருக்குக்கொடுத்து, மற்றைந்து பாகங்களை நல்லறங்களிற் செலவு செய்வார்கள். இளைஞர்கள் தங்களை விட்டுப் பிரிந்த பெண்களின் அளகத்தையும். குண்டல மணிந்த செவியையும் கண்களையும் அதரத்தையும் பற்களையும் கண்டத்தையும் தனத்தையும் கரங்களையும் உந்தியையும் முழந்தாளையும் கணைக்காலையும் புறங்காலையும் அங்குள்ள தடாகங்களிலிருக்கும் பாசைக் கொடியும் வள்ளையும் சேலும் ஆம்பலும் முத்தும் சங்கும் அரும்பும் தாமரையும். நீர்ச்சுழியும் நண்டும் வராலும் ஆமையும் ஆகிய இவைகள் அவர்கள் மனம் விரும்பக் காட்டாநிற்கும். தடாகத்திலுள்ள தாமரைகள் இராக்காலத்தில் மலர்ந்த வண்ணமிராது குவிந்தழ கொழிந்திருப்பதற்கு யாது காரணமெனின் வானத்திலெழுூங் சந்திரன் இத்தொண்டை நாட்டிலுள்ள தோகையர்கள் முகவிலாசந் தனக்கில்லாமையைக் கருதித் துன்பத்துடன் ஆகாயவெளியில் அலைந்து கொண்டிருப்ப இத்தாமரைமலர் மலர்ந்திருப்பதெற்றுக்கென்கிற பொருமை மனத்துட்கொண்டு அவனவ்வாவியினுள்ள தாமரையினழகை யழித்துக் குவியச்செய்ததைப்போ லிருக்கின்றது. அன்றியும் குளிர்ச்சி பொருந்திய இலைகளா லடரப்பெற்ற அழகிய நீர்ப்பரப்பையுடைய வத்தடாகத்தின் கண்ணே

ஒளிபொருந்திய குமுதமலர்கள் மலர்ந்திருக்கின்ற மை நோக்குங்கால் ஆகாயத்திற் காணப்படும் நக்ஷத்திரக் கூட்டங்களையொத்திருந்தன. வாடுகின்ற இடையை வருந்தச்செய்யு மாபரணங்கள் பொதிந்துள்ள வரும்புபோன்ற தனங்களையுடைய பெண்கள் ஒலிக்கின்ற வண்டுகள் பறந்தோடும் வண்ணம், அத்தாமரைத் தடாகத்தின் கண்ணே நீராடா நிற்பார்கள். அன்றியும் அத்தடாகத்தில் மூழ்கு மாதர்களது கண்களை நீலோற் பலமென்றும் இதழைக்குமுதமென்றும் முகத்தைத்தாமரையென்றும் கரிய கூந்தலைத் தங்களினமென்றுங் கருதிப் பலவண்டுகள் ஆவலாக வந்தணைய, விரைவில் நீரிலமிழ்ந்து விடுவார்கள். சில மாதர்கள் தடாகத்தின் மூழ்கிக் கரங்களை மாத்திரமேலே காட்டி நிற்க, அக்கரங்களைப் பறந்து போகின்ற பெண்ணன்னங்கள் பார்த்துத் தாமரை மலராகக் கருதி யக்கரத்தில்வந்து தங்க, அப்பறவைகளின் மனம் நையும் வண்ணம் பிடித்துக்கொள்வார்கள். தடாகத்தில் மூழ்குஞ் சந்திரனை யொத்த முகமுடையவோர் பெண் தாமரைபோலு முகமுடைய மற்றொருத்தியைக்கண்டு அவளைப் பெண்ணென்றெண்ணாது தாமரையென்றே யெண்ணி அவள் முகத்தைப் பிடித்தலைப்பாள். மயில்போலுஞ் சாயலையுடைய வோர் பெண் மற்றொரு பெண்ணினுடைய அல் குலைக்கண்டு அதனை அல்குலெனக் கருதாது பாம்பென்றே யெண்ணி அதனைப் பிடிப்பாள். பெண் யானைபோல் நடந்த வோர்பெண்ணைச் சிங்கம்போலு

மிடையையுடைய வொருத்தி கண்டு அவளைப் பெண் ணென்றெண்ணாது யானையென்றே கருதி வருந்து வாள். பூமிதேவிக்கு இத்தன்மையன வாயவளப்பம் வாய்ந்த தொண்டை நாடு பொன்னா லியற்றப்பட்ட பதக்கமாகவும் ஏனையதலங்கள் சுற்றிலும் பதிக்கப்ப ட்ட ரத்தினங்களாகவுந் திருக்கூவக்ஷேத்திர மானது அதனடுவிற் பதிக்கப்பட்ட மணியாகவும் விளங்காநிற் கும். தனக்கொப்பில்லாத் திருக்கூவமென்னுந்தலம், கச்சணிந்த விரண்டு தனங்களாகிய யானைகளை ஏகம்ப மென்னும் வச்சிரக்கம்பத்திற் பொருந்தும் வண்ணங் கட்டிய காமாட்சியம்மையார் முப்பத்திரண் டறங்க ளையு மியற்றிக் காட்டிய பொன்மதில் சூழ்ந்த காஞ்சி மாநகரம் தெட்சணதிக்கில் விளங்கும் வண்ணம் இந் நிலவுலகிற் பொருந்தியுள்ளது. ஒளிபொருந்திய விரத் தினங்களாலும் பொன்னாலுஞ் செய்தமைக்கப்பெற்ற கோபுரங்களையும் மாட மாளிகைகளையும் மண்டபங் களையும் மேடைகளையும் நோக்குங்கால் இவ்விடத் தில் இந்திரனுடைய நகரம் வாழவந்ததோ வென் றெண்ணக்கூடிய சங்கை விளையா நிற்கும். விளக்க மிக்க நவரத்னங்களும் நெருங்கப்பெற்று மேன்மை யாகப் பற்பல செய்குன்றுகள் விளங்குதல் பாதளத் திலுள்ள ஆதிசேடன் சிரங்களிற்றரித்த பல கிரீடங் கள் பூமியின்மேற் புறப்பட்டுத் தோன்றுவதை யொ க்கும். சிறந்த மரகதத்தா லியற்றப்பட்ட கோபுரங் கள் அர்த்த சந்திரன் போன்ற நெற்றியை யுடைய பெண்கள் நடு நிலையிலே நெருங்கப்பெற்று விளங்

கும் தோற்ற மானது, பல இலக்குமிகள் மார்பிற் பொருந்த மேகமண்டலம் வரைக்கு முயர்ந்து நிற்கின்ற பல விட்டுணுக்களை யொத்திருக்கும். தெள்ளிய நிலவைப்போலும் ஒளி வீசும் மேலுப்பரிகையிலுள்ள சயனக்கிரகங்களிற் பெண்களடைந்தபோது அவர்கள் நாயகர்கள் அன்னோர் சேலைகளை யவிழ்த்துவிடலும் அதனால் வெட்க மடைந்து ஒளி வீசும்பத்மராகத்தாற் செய்யப்பெற்ற ஆபரணங்களால் தம் முடலை மறைத்துக்கொண்டு அந்த நிலவொளியானதிருண்டு போகும் வண்ணம் நீலவஸ்திரங்களை மேலே விரிப்பார்கள். கல்யாண விழா நடைபெறும் இல்லங்களின் கடை வாயல்கள் தோறும் அழகு நிரம்ப வரிசையாகக் கட்டப்பட்டுள்ள கரும்பும் வாழையும் கமுகும் விளங்குத லெதை யொத்திருக்கின்ற தெனின், அவ்வில்லத்துள்ள பெண்களினது சிவந்த விதழினழகையுந் தோளினழகையுந் தொடையினழகையுங் கண்டத்தி னழகையும் யாசிக்கும் வண்ணம் யாசகனொருவன் முதற் கடையிற் காத்திருத்தலை யொத்திருக்கின்றன. பிரமன் தனது வாகனமாகிய அன்னப்பறைவையை ஆலயத்துக் கப்பாணிறுத்தித் தான் உட்சென்று ஆதிகர்த்தாவாகிய அமலனைப் பணிந்து திரும்புவதற்கு முன், அந்த அன்ன மானது அவ்விடம் வந்த பெண்களுடைய நடையைக்கண்டு அந்நடையைத் தான் கற்றுக்கொள்ள விச்சித்து அவர்கள் பிறகே போய் விடலும், அதனைச் சதுர்முகனறியாது தேடிப்போவான். கூவநாதர் தரிசனத்திற்

காக மன்மதனோடு வந்த இரதி தேவியைக்கண்ட ஆடவர்கள் தங்கள் மகளிரைப் பார்த்து இதுவென்ன நமக்கெதிரில் தனியே ஒருத்தி எதிர்ப்பட்டனள். அவள் யாரென்று வினவ அம்மாதர்கள் தம் கணவர்கள் அவளிடத்திலாசை வைத்தார்களெனக் கருதிப் பிணங்கிக் கொள்வார்கள். அவ்வாலயத்தின்கண் வந்துள்ள ஆடவர்களினழகை மன்மதனோக்கி உள்ளம் பொறுமல் வெட்கி இவர்கள் முன்னே நாம் உருவமாய் வராமலருவமாய்வர நம்மை முன்னே அருவமாகச் சபிக்கப்பெற்றது மிகவும் நன்மையாயிற்றென்று மனந்தெளிந்து அப்புறஞ் செல்வான். ஏற்போரது உள்ளங்களிகூர இனிய வசனங்களைக் கூறிக்கொடுக்கும் கொடையாளிகளாகிய கூவமா நகரவாசிகளது வள்ளற் றன்மையைப் பார்த்துச் சுவர்க்கத்திலுள்ள கற்பக முதலிய பஞ்சதருக்களுங் காமதேனுவும் கனைகடலும் கார் மேகமுங்கண்டு தமது வள்ளற்றன்மையை இகழ்ந்து பயப்படுகின்றன. மோகமெனுங் கடலைக்கடந்து சாஸ்திரங்களின் கரை கண்ட முனிவர்களது யாக சாலையிலுண்டாகிய புகை மேலெழுந்து இந்திரலோகத்திலுள்ள பொன் மாளிகைகளின் பக்கங்களிற் போய் மேக சாலங்கள் மேருவைச் சூழ்ந்ததுபோற் சூழா நிற்கும்.

இத்தன்மையான கூவமாநகரத்தின் கண் முனிவர்களுந் தேவர்களுஞ் சூழ முப்புரத்தை யெரிக்கும் வண்ணம் முதல்வரெழுந்தருளிய போது அங்

யனஞ் செல்லாவண்ணம் விநாயகக்கடவுள் ஏர்க்கா லோடச்சையு மிறுத்துத் தடுத்தனர், அச்சமயத்திற் றேவர்களுடைய துன்பம் நீங்கும் வண்ணம் அவ்வி டத்தில் ஞானநாயகராகிய சிவபெருமான் திரிபுரஞ் சாம்பராகும் வண்ணம் மேரு வில்லைப்பற்றி யுத்த கோலமாய் அவ்விடத்திலேயே நின்றருளினர். அவ் வாறு நின்ற சிவபிரான் தன்னுடைய ஏர்க்காலை யொ டித்த காரணத்தால் கூவரக்கினரென்னுந் திருப்பெ யர்புனைந்த பிள்ளையாரோடு யுத்தத்திற்குச் சென்று உடனே பயங்கரமான சொரூபத்தையுடைய தேவி யானவள் தம்முடன் பொருந்த மேருகோதண்ட மண் டிதரென் றியம்பும்படி யங்கெழுந்தருளி யிருந்தார். இவர் இங்ஙன மிருக்கவே முருகக்கடவுள் வயிரவர் வீரபத்திரர் கூர்மாண்டர் ஐயனர் காலாக்கினி உருத் திரர் ஆடகேசர் பிரமா விஷ்ணு இந்திரன் முனிவர் கள் ஏனையதேவர்கள் இவர்களெல்லாஞ் சிவபெருமா னைத் தியானித்துக்கொண்டு அக்கூவமென்னும் புரா தனதலத்தி லிருந்தார்கள். எப்போதும் இக்கூவமா நகரத்திலெழுந்தருளிய வெந்தையாதிய விறைவரது கலைகளிலொன்றை யாயிரங் கூறுசெய்து அவற்றி லோர் கூறு கைலையங்கிரியி னிலைபெற்றிருக்கும். அவ் விடத்திலமர்ந்த வேனையதேவர்கள் கலைகளும் தத்த மக்குரிய கலைகளில் ஆயிரத்திலொன்றேயாகும். அந் நகரத்தின்கண் வந்த வமரர்கள் கண்களை யிமைத் துக் கால்களைப் பூமியிற் பொருந்தவைத்து முன்னு ள்ள யுகங்கள் நான்கிலுங் கிரேதாயுகத்தி லந்தணராக

வுந் திரேதாயுகத்திற் க்ஷத்திரியராகவுந் துவாபர யுகத்தில் வைசியராகவும் கலியுகத்திற் சூத்திரராகவும் வெவ்வேறு பெயர்களைக்கொண்டு வாழ்வார்கள்.

கலியுகத்தில் நிலைபெற்றுள்ள சிறப்புப்பொருந்திய பெரிய கூவமா நகரத்தில் வசிக்கின்ற வேளாளர்கள் தருமத்தின் றலையினிற்றலானும் பேரறிவினாலுங் கொடையாலும் பக்தியாலும் பாவத்தைத் தராநின்ற கொலை முதலிய குற்றங்களினீங்கி யிருப்பதினாலுஞ் சத்திய வசனத்தினாலும் அவர்களைத் தேவர்களென்றே மதிக்கலாம். பிரம கற்ப முடிவில் உலகெலா மழிவுறத் தொலைக்கும் அப்பிரளய வெள்ளத்திலும் எமது வள்ளலாகிய விற்கோல நாதர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலத்திற்கு அழிவின்றாம். ஏனெனின் கிணற்று நீரை வெள்ளங்கொண்டேகுவது முண்டோ? (கூவம்-கிணறு) கைலை கேதாரம் காசி காஞ்சி மதுரை திருவண்ணாமலை திருவாரூர் திருக்காளத்தி சிதம்பரம் முதலிய தலங்கடோறும் நமதிறைவ ரெழுந்தருளியிருந்து இயம்புவதெல்லாம் மகா தவசிகள் வாழப்பெற்ற இக்கூவமா நகரத்தின் பெரிய புகழேயாகும்; காசிமுதலிய தலங்களிற்செய்த பாவங்கள் அனைத்தும் திரிநேத்திரதாரி யாகிய எமது சிவபெருமான் மகிவிருப்போ டெழுந்தருளி யிருக்கும் இக்கூவமா நகரத்தினெல்லையை யடைந்த வப்போதே யகன்று விடும்; கூவமாநகரத்தின்கணியற்றிய பாவங்களைக் காசி முதலிய தலங்களா லென்றைக்கும் நீக்க முடியா; இத்தகு

சிறப்பால் கூவமாநகரம் தனக்குத் தானே யொப்பா விருத்தலால், இந்நகரத்தில் நடத்தலே ஆலயத்தை வலம் வருதலாகும். நல்ல சுகாசனத்தி லிருத்தலே யோகாசன மாகும்; சயனித்தலே சிவபெருமானை வணங்கும் வணக்கமாகும்; வசனித்தலே சிவபெருமானைத் துதித்தலாகும்; ஒருவரை யொருவர் வினவுதலே சாஸ்திரவிசாரணைச்செய்தலாகும்; யாதானுமொன்றை நினைத்தலே சிவத்தியான மாகும்; நித்திரையே சமாதியாகும்; யாதொரு செய்கையே யாயினும் சிவ பணியாகும்; பார்த்தலே கொன்றைச் சடையானை நாடலாகும், இத்தகு சிறப்பு வாய்ந்த ஒப்பற்றதாகிய கூவமா நகரத்தை ஒருவனடைந்து ஓரணுவளவாக வியற்றப்பட்ட ஓர் அறமானது மேன்மேலு முயர்ந்து மேருவைப்போல் வளராநிற்கும். அம்மேருவிற்குச் சமதையாயியற்றபட்ட பாவ மானது அணுவினும் அணுவாய் நீறுபட்டழியும்; புத்திரர்களையுந் தாயையுந் தந்தையையும் அந்தணரையும் வதை செய்த பாதகர்களாயினுங் கூவத்தினெல்லையில் செல்வார்களாகில் அவர்கட் கந்நகரம் மேலான மோட்சத்தையே யளிக்கும். பன்றி யானை கோழி நாய் குதிரை அன்றிற்பட்சி கழுதை காக்கை பாம்பு முதலிய வற்ப ஜெந்துக்களும் கொன்றையணிந்த கோமானது கூவமாநகரத்தில் நற்கதியை யடைகின்றனவாம். பக்தியோடும் அந்நகரத்தி னுமத்தை யுரைத்தவர்களும் மனதில் தியானித்தவர்களும் அங்கே கருவிலுதித்தவர்களும் இறந்தவர்களும் உண்மையான மோட்சத்தை

யேயடைவார்கள். அந்நகரத்துக் கயலூரிலுள்ளவர்கள் ஓர் நாழிகை யக்கூவபுரத்தில் வசிப்பார்களாகில் பிரமாவினது நூறு கற்பகாலபரியந்தம் சிவலோகத்திலிருப்பார்களென்றால் அதற்கிணையாக வெந்தத்தலத்தை யியம்புவோம்? கூவமாநகரத்தில் விளங்கும் ஞானசொரூபியை யாயிரகோடி யரிபிரமர்களடைந்து பூசித்திருக்கின்றனர். ஆண்டுவந்தனை வழிபாடோடடைந்த விந்திரருக்கும் அளவேயின்றாம். தேவர் சித்தர் இயக்கர் கின்னரர் நாகர் இவர்களெல்லாம் மேருவை வில்லாக வளைத்தற்கிடனாயிருக்கு மிக்கூவமாநகரத்தைச் சூழ்ந்த அட்டதிக்கிலும் வந்து பிரதிட்டைசெய்து பூசித்த விலிங்கங்கள் அளவில்லாதன. அவையெலாம் தரிசித்தவர்க்கு புத்தி முத்திகளை யளித்து விளங்காநிற்கின்றன. புகல்வதற்கரிய புகழ்பொருந்திய கூவமாநகரத்திற்கு மேற்கில் மேனகை உருப்பசி அரம்பை முதலியோர் அரம்பேசனென்னுந் திருநாமத்தால் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்து நல்ல இளமையும் அழகும் என்றும் அழியாவண்ணம் வரம் பெற்ற இலம்பையங்கோட்டூர் என்னும் ஓர் க்ஷேத்திரம் விளங்குகின்றது. அந்த சிவலிங்கப்பெருமான் விரும்பினவர்கள் விரும்பியவண்ணம் வரமளித்து விற்றிருக்கின்றனர். அதன் கீட்டிசையில் தம்மை அநாதியாய்ச் சம்பந்தித்துள்ள ஆணவமலம் நீங்கக் கண்ணுவமுநிவர் பூசித்த சிவலிங்கமொன்றுளது. அது தன்னைவந்து தரிசித்தவர்கள் இந்திரசெல்வத்தைப் பெற்றிடும்படி அருள்செய்யும்.

கொன்றையணிந்த விற்கோலநாதரது சந்நிதானத்திற்கு முன்னேயவர் சடாடவியிலுள்ள கங்கையைப் பார்க்கினும் பரிசுத்தமான தீர்த்த மொன்றுண்டு; அதில் தேவர்களும் தினமூழ்கி உடற்களங்கமேயன்றி மனக்களங்கமும் நீப்பார்கள்; உயர்ந்தவிற்கோனுகிய அவ்வெம்பெருமானது அம்பு (சலம்) பட்டால் வினைகளெல்லாம் அப்போதே நாசமடையாமல் தங்கிநிற்குமோ? அத்தன்மையான தீர்த்த மிங்கேயுண்டாகிய தெவ்வாறென்றால், அசுரருடைய திரிபுரங்களழிய நின்மலராகியபெருமான் வேதப்புரவிபூட்டிய பொன்னிரதத்தமர்ந்து புரவலர் புடைசூழ்ந்துப் போற்ற வித்தலத்தில் வந்து நின்றபோது, விநாயகக்கடவுள் தேரினேர்க் காலைத் தமது திருக்கரத்தா லொடித்த விடத்தில் நமது பவமென்னுங் கங்கத்தைக்கழுவ வல்லதாயோர் தீர்த்தந்தோன்றிற்றுள. ஆகையாலதற்கரிய திருநாமம் அச்சிறுகேணியென் றறைவார்கள். அதன்பெருமையை அம்பிகையை யொருபால்வைத்த அரனே யறைவதல்லாற்போதம் ஒருசிறிதுமில்லாத வென்புந்தியினுற் புகல்வதற்கெளிதாமோ? ஆயினும் அதனைப்புகழ்ந்து துதித்தாற் றீங்குகளெல்லா மகலும் என்னும் விதியொன் றிருக்கின்றபடியா லடியேனும் அறிந்தபடி யறையா நிற்கின்றேன்.

எட்டுப்பகல் அத்தீர்த்தத்திற்சென்று மூழ்கினுல் ஒவ்வோர் தினத்திற்கும் முறையாக அளவற்ற பாவங்கணீங்கும்; புண்ணியம் வளரும்; இந்திரபதம் பிரமப

தம் முகுந்தன்பதம் சிவபதம் முத்தி என்னும் பதவிகளையும் அடையலாகும். ஆதிவாரம் சோமவாரம் அட்டமி அயனம் பூரணை முதலிய தினங்களில் அதில் மூழ்குகின்றவர்கள் இம்மையில் நல்ல புத்திரப்பேற்றையும் அரசாட்சி யையுஞ் செல்வத்தையும் பெற்று மறுமையில் மேலான சாயுஜ்ஜியத்தையுமடைவார்கள். அதின் மூழ்கிப் பறந்துபோம் பட்சிகள் எந்த தடாகத்திற்போய்த் தங்கினாலும் அந்ததடாகத்தின் மூழ்கினவர்களும் வினையெலா நீங்கி மெய்க்கதியையடைவார்களானால் உலகிலுள்ள எந்த தீர்த்தங்களும் அந்தப்புனிதமாகிய தீர்த்தத்திற்கு ஒப்பாகா; அதுபோலவே சொல்லப்பட்ட எந்த மூர்த்திகளும் விற்கோலநாதனுக்கு ஒப்பாகார். சமுத்திரத்தாற் சூழப்பெற்றுள்ள எந்தத்தலங்களும் கூவநகரத்திற்குச்சரியாகா. முப்புவனங்களினும் பேர்பரவிய முனிவர்காள்! யான் அளவற்ற யுகங்களிற்செய்த தவத்தினாலும் அம்பிகைபாகரது திருவுள்ளத்து நிறைந்த கருணையாலும் எமது குருபரனருளினாலும் அரியகீர்த்திநிறைந்த கூவமாநகரத்தின் பெருமையைச் சிறிதறிந்தோதினேன்; பாவங்களெல்லா நீங்கவும் மலபரிபாக மெய்தவும் நீங்களதை வினவுதற்குக் காதல்கொண்டீர்கள்;" என்றிவ்விதஞ் சூதமுனிவ ரிசைக்கவும், பெரியதவசிகளெல்லாம் ஆனந்தமடைந்து, "இன்றைக்கு எமது விழிகள் சிறப்படைய வும்மைதரிசிக்கும் பேற்றைப்பெற்றோம்; உலகிலுள்ள சகலநன்றியையுமுள்ளவர்களானோம்; எங்கள்பவப்பிணிக்கு மருந்தாக

விருக்குந் திருக்கூவத்தை யடைந்து வணங்கும் அரு ம்பயனையும் பெற்றோம்'' என் றுரைத் திதனைச்செப் புவாராயினர் :— அருந்தவமுடைய சூதமுனிவரே! முன்னமுரைத்த திரிபுரத்தினியல்பென்னை? அதிற் றலைவரா யிருந்தவர்கள் யாவர்? அவர்கள் பெயரெ ன்ன? தேவகூட்டங்களோடு மிறைவரவர்களை யழிக் கவந்த காரணம்யாது? விநாயகக்கடவு ளச்சையொ டித்தது யாதுக்கு?'' இவைகளையோதக் கடவீரென் றுரைக்கச் சூதமுனிவர் சொல்லுகின்றார்.

திருத்தலச்சருக்கம் முற்றிற்று.

திரிபுரதகனச் சருக்கம்.

உலகின்கண் புகழ்நிலை நிலைநாட்டிய தாரகனு க்கு வித்துன்மாலி தாரகாக்கன் கமலாக்க னென்னும் வேலேந்திய கையையுடைய வீரர்களாகிய மூன்று புத்திரர்களுண்டு. அம்மூவரும் பாவத்திற்கு மூல காரணமாகிய காம வெகுளி மயக்க மென்னு முக்குற் றங்களைப்போ லுற்பத்தியாயினர். அநேக யுகமாக வனந்தம் பூமிகளையும் அண்டங்களையும் ஆண்ட தாரு கனுடைய வுயிர்மாயும்படி அவனுடலை முருகக்கட வுள் வேலாயுதத்தாலழித்த பின்னர், அம்மூன்று புத் திரரும் பிரமனை நோக்கி யரியதவத்தைச் செய்தார் கள். இப்படியநேகநாள் யாதோருணவுமற்றுத் துன் பத்துடன் தவமியற்றித் தேகமிளைக்கப் பெற்றிருந்த

வர்களுக்கு அருள் புரியுமாறு கமலாசனத்திலிருந்து லகாக்கும் கடவுளாகிய பிரமன் கருணைகூர்ந்து அன்னவாகனரூடராய் கமண்டல நீரையுங் கைக்கொண்டு பிரசன்னமாயினர். அம்மூவரும் அவரைக்கண்டு வணங்கித் துதிக்கப் பிதாமகன் களிப்படைந்து "நீவிர் எதனைவிரும்பி என்னை நினைந்து தவஞ்செய்தீர்கள். அதனை நன்றாய் மொழியக்கடவீர்" என்ன, கைகூப்பி மொழியலுற்றனர். யாங்கள் மூவுலகுஞ் செல்வதற்கு மூன்று கோட்டையை யளித்தல்வேண்டும். அவைகளில் யாங்களிருந்து அளவற்ற யுகங்கள் அரசுபுரிந்து பகைவர்களை யழிக்கவேண்டும். ஆயிரம் வருடத்திற் கோர்கா லிம்மூப்புரங்களு மொன்றாகக் கூடல்வேண்டும்; எமக்கிறுதிநாளுண்டானாலும் எம்மெதிரிலொருவனே நின்று எளிதாக விளையாடுவதைப்போல வொருகணையா லெம்மை யொருங்கே யழிப்பதல்லாது வேறொரு செய்கையினாலே யெம்மை வெல்லக்கூடாத ஓர் பெருமையையு மெமக்கருளல் வேண்டுமென்றார்கள். அவர்கள் வினவியதைக்கேட்ட பிரமதேவன் அவ்வண்ணமே யாகக்கடவதென் றருள்செய்து சென்றனன். அப்போதே பிரமதேவனாணையின்படி நூறு யோசனை அகல நிகளங்களையுடைய பொன்னிரும்பு வெள்ளியினாலாகிய மதில்கள் மூன்றும் அந்தந்த நிலத்துக்குரிய சிறப்பிற்குத் தக்கபடி பூமியின் மே லிரும்புமதிலும் அந்தரத்தில் வெள்ளிமதிலுஞ் சுவர்க்கத்திற் பொன்மதிலுமுண்டாயின. அவற்றை மூவரும் முறையாகப்பெற்று மயனை யழைத்து நீ

கோபுரம் ஆலயம் சித்திரகூடம் மண்டபம் அசுரர்க ளிருக்கும்மண்டபம் குதிரைச்சாலைகள் யானைக்கூடங் கள் வீதிகள் ஆவணங்கள் செய்குன்றுகள் சோலைகள் தடாகங்கள் முதலிய யாவையும் உண்டாக்குவாயெ ன்று கட்டளையிட்டனர். அவனும் அவர்கள் கட்டளை ப்படியே யுண்டாக்க, மூன்றசுரரும் அவையனைத்தை யும் நோக்கி ஆனந்தங்கொண்டு நமக்கிந்த நகரங்கள் மிகவும் நலமாயிருக்கின்றனவென்று மகிழ்ந்திருக்குஞ் சமயத்தில் கலைக்கியானங்களிற் றேர்ச்சியடைந்த மய னென்பவன் பகைவரைக்கடியும்புயத்தையுடைய அம் மூவருக்கும் ஒருறுதிமொழியைச் சொல்வதாயினன்.

செல்வமும் பதாதிகளுஞ் சத்துருக்களை வெல்லும் வீரமும் புகழும் மேன்மையுங் கல்வியும் புத்திரப் பேறும் மோட்சமும் வேண்டியவர்கள் வேண்டியவா றளிக்க வல்ல சிவலிங்கப்பூசனையைச் செய்வார்கள். துன்பமும் பழியும் பகையும் பயமும் வெறுப்பும் பிணிகளும் கோபமும் நிந்தைகள் சொல்லலும் தரித் திரமுஞ் சோக மோகங்களைப் பொருந்துதலுமாகிய வினைகளெல்லா மிலிங்கபூசையினால் நிவிர்த்தியாகும். உள்ளங்கையி லடங்கத்தக்க நீரினால் இலிங்கத்திற்கபி டேகஞ்செய்து எவ்விடங்களிலுங் கிடைக்கக்கூடிய வோர் பச்சிலையைக் கொண்டர்ச்சித்து மாலும் பிரம னும் வணங்கும் பாதத்தையுடைய மகாதேவரைப் பூசியாமல் வருந்துபவர்களது மடமையை யானென் னென்றிசைப்பேன். உலகின்கண் பலர், சிலர் நல்வாழ்

வடைந்திருப்பதைப்பார்த்து இவர்கள் இவ்வாழ்வு பெற்றிருப்பது பூர்வத்திற்செய்த பூஜாபலனென்று ரைக்கின்றார்களன்றோ? அதனைக்கேட்டும் மெய்ம் மையாய் விளங்கும் பூசனையில் விருப்பங்கொண்டு அதனைச் செய்யாம லுழல்கின்றோ ரதுசெய்கையை யென்னென்றிசைப்போம். மயக்கத்தைச் செய்யாநி ன்ற பிறவியினின்றும் நீங்கிப் பேரின்பத்தை யடை யத் திருவருளைச் செய்யாநின்ற சிவலிங்கபூசனையைச் செய்யாத மருள்பொருந்திய மனதை யுடையோரெ டுத்திருக்கின்ற தீய தேகமானது சுருண்டிருக்கின்ற நாய்வாலின் றோற்றத்தை யொத்திருக்கும். (நாயி னதுவால் எப்படி நிமிர்தலை யறியாதோ அப்படியே இவர்களது பிறவியும் நீங்குதலையறியா.) பரசிவலிங்க த்தின்திருமேனியிற்படும்படி யோர் நறுமணங்கமழு மலரை அறியாமல் வீசியமாநுடர்களே இந்திரனென் கின்ற நாமத்தைக்கொண்டு சுவர்க்கத்தை யடைந்து எப்பொழுதும் தேவர்கள் வணங்கும்படி வீற்றிருப் பர். பூமியில் வீழ்ந்தமலர் சுருங்கிய மலர் வண்டுகள் கிண்டியமலர் பழையமலர் உலர்ந்தமலர் ரோமத்தாற் சிக்குண்டமலர் இவைகளை நீக்கி நல்ல பரிசுத்தமான வோர்புட்பத்தை மனமகிழ்ந்து சிவபெருமான் திரு முடியிலிடுவாராயின் அவர்கள் மீண்டுஞ் செனனமெ டார். பூர்வத்தில் அறிவின்மிக்க மார்க்கண்டேயமுநி வர் பொன்போலுஞ் சிறந்த மணமிகுந்த மலர்களாற் பரமசிவத்தைப் பூசித்துத் தம்மீது வலியபாசத்தை வீசிய மறலியையும் வென்று விலக்குதற்கரிய விதி

யையும் விலக்கினானன்றோ? விரும்பிய பொருளை விரும்பிய வண்ணமடைய வேண்டில் எழின் மிகுந்த திருநீற்றினைத் தேகத்திலே தரித்து உருத்திராக்ஷ மாலையையும் பூண்டு சிவலிங்கபூசனையைச் செய்யுங்கள்.'' என்று ஆலோசனையிற் சிறந்தவனும் அழகில் மிக்கவனுமுள்ள மயன் கூறினன். கொடிய அசுரர்கள் அவனுரைத்த வார்த்தைகளைக் கேட்டு விடத்தைக்கக்குகின்ற சர்ப்பம் மாணிக்கத்தையுந் தரிக்குந் தன்மையைப்போல நினைத்தற்கரிய லிலிங்க பூசையையியற்றுதலாகிய நலத்தினை யெய்தப் பெற்றனர். அதன்பின்னர் அவ்வசுரர் திக்குகளிலுள்ள இந்திராதி திக்குப்பாலகர்களையும் தேவர்களையும் மற்றுளோர்களையுந் தங்களுக்கு வாய்த்துள்ள வலிமையினால் வளைத்துக்கொண்டு தண்டித்து அவர்கள் துன்பமுறும்படிப் பிடித்தேவலாளர்களாகக் கொண்டனர். கொடிய தீப்பொறிகளைச் சிதறுகின்ற கண்களையுடைய அம்மூவரும் உலகிலுற்பத்தியாகும் எல்லாவுயிர்களும் துன்பத்தின் மூழ்கும்படி திரிலோகத்தையுஞ் செயங்கொண்டு எங்குந் தங்களாக்கினையை நிலைநாட்டியாண்டார்கள். அப்பொழுது தேவேந்திரன் இவ்வசுரர்களியற்றுந் துன்பத்தினைச் சகியாதவனாய்த் துக்கத்துடன் இந்திராணியை விரைந்தழைத்துக்கொண்டுவருந்துகின்ற தேவர்களோடும்கூடி வெகுகாலம் மகாமேருமலையில் மறைந்திருந்தனன். யாவரினுஞ்சிறந்து விளங்கும் இந்திரன் தனது செல்வமெல்லாமிழந்து மனைவியுடன் மறைந்து வறியனாய்ச்சென்று மேரு

வில் மறைந்திருந்தா னென்றால், இன்ப மெனப்படு வன வெல்லாமும் ஒருங்கே துறந்து விடுவதாகிய இன்பமொன்றே துன்பமில்லாததாகும். கூகைகளைப் பகற்காலத்திற் காக்கைகள்வருத்த வதனாற் பயமுற்றிருந்த அக்கூகைகள் தங்கட்குவன்மையைக் கொடுக்கும் இராக்காலத்தை எதிர்பார்த்து அதுவருமளவும் ஒளித்துத் தங்கியிருத்தல்போல அசுரர்களை வெற்றிகொள்ளுங்காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டு மேருவில் மறைந்திருக்குந் தேவர்கள், தமதரசனாகிய இந்திரனைப்பார்த் தியம்புவார்கள். நாங்கள், அசுரர்களியற்றுந் துன்ப மெவ்வாறு நீங்கு மென்று அதற்குரிய முயற்சியைச் செய்துகொள்ளும் வல்லமையுள்ளோமா? நீரே சொல்லு மென்று தேவர்கள் வருந்திக்கூறினர். இந்திரன் ஓ தேவர்காள்! நாம் அனைவரும் பிரமனிடத்திற்சென்று, எங்கள் வருத்தங்களை யெல்லாந் தீர்த்தருள்வாய் கடவுளே என்று வேண்டிக்கொள்வோம் வாருங்க ளென்றனன். அவ்வார்த்தையைத் துன்ப மிகுந்திருக்கும் சுரர்கள் கேட்டு ஆர்வங்கொண்டவர்களாய் இன்றோடே யெங்கள் துன்பம் போயிற்றென் றெழுந்துவர, இந்திரன் பிரமனிடஞ்சென்று அவர் பாதத்தில் தேவர்களோடும் வணங்கித் துதித்து அங்கு மெலிந்து நிற்க, அவர்களைப் பிரமன் பார்த்து ஓதேவர்களே! "நீங்கள் முகம் வாடி யிருக்கின்றீர்கள் உங்கள் மனத்தினுள்புகுந்து நீங்காதிருக்கின்ற துன்பங்களைச் சொல்லக்கடவீர் என்னலும் இந்திரன்" ஓ இறைவனே! நின்னருளின்

வலிமையைப் பூர்வத்தி லடைந்துள்ள அசுரர் எங்களை வருத்த மனம்நைந்து வருந்தி மேகத்தைக்கண்டஞ்சுங் குயிலைப்போல் மேருவினிடத்தி லிதுகாறும் மறைந்திருந்தோம்; இனியாகிலும் அந்த அசுரர்களை யழித்து எம்மைக்காப்பாற்றும் வண்ணம் முறையிட்டுக்கொள்வோ மென்றும்மிடம்வந்தோம். சரசுவதியை நாவிலுடையநீர், கலக்கமாகிய இக்கடலை நாங்கள் கடக்கும் வண்ணஞ்செய்யலாம். வேறுயாரிதனை யியற்றும் வன்மையுள்ளவர்கள்? ஆகையால் உமது திருவருளைப்புரியும்" என்று பிரார்த்தித்தனன். பிரமதேவன் இந்திரனை நோக்கி, ஆயிரங்கண்ணனே! திரிபுரத்தில் வசிக்கும் அசுரர்களது மிக்க போர்வலிமையை நம்மால் நீக்கமுடியாது. உங்களெண்ணத்தையுங் கொடிய துன்பங்களையுந் திருமாலாகிய கமலக்கண்ணன்தான் களையவல்லவன், என்று இந்திராதியர்களை யழைத்துக்கொண்டு அரியின் பக்கலடைந்து, செல்வமிழந்த தேவர்கள் அசுரர்களாற் செய்யப்படுங் கொடுந்துயரனுபவிக்கும் வகையை மனம்வருந்தி யுரைத்து, "என்னையனே! கொடியவசுரர்களை யழித்து இவர்களைக்காக்கக்கடவீர்" என்ருர். திருமாலதனைக்கேட்டு உங்களால் சொல்லப்படுஞ் சத்துருக்களை, உபசத்துக்களாகிய வோர்வகை மந்திரங்கட்கதிட்டான தேவதைகளாயுள்ளவர்களே யுத்தத்திலழித்து விடுவார்களென்று வேதங்கள் சொல்லுகின்றமையால், அவர்களைவிடுத்து அந்த மூன்று வீரரையும் விரைவிலழியச் செய்விக்கின்ருேமென்று சொல்லி திருமால் அந்த

உபசத்துக்கள் வரும் வண்ணந் தன் மனதில்நினைந்த னர். அவ்வுபசத்துக்களும் அதுவுணர்ந்து எதிரேவந் துநின்றனர். அவர்களைநோக்கி "நீவிர் கோபத்துடன் சென்று முப்புராதிகளையழித்து வானவர்களுடைய துன்பத்தை யகற்றுங்கள்" என்றருளினர். அவர்களத னைக்கேட்டு யாங்களப்படியே செல்லுகின்றோ மெ ன்றுசொல்ல, மீண்டுந் திருமால் தன்பாலுள்ள கணங் களில் எண்ணிறந்தவர்களைப் படைத் துணையாகச் செல்லும்படி ஏவ, அவர்களனைவரும் அவரடிபணிந் துபோய் தண்டாயுதம் வேலாயுதம் வச்சிராயுதம் வா ளாயுதம் அம்பு வில் சக்கிராயுதம் பிண்டி பாலம் சூ லாயுதம்கணிச்சி முதலியவைகளைத்தாங்கி, யண்டங் குலுங்க ஆர்ப்பரித்தெழுந்து சண்டமாருதம்போற் பகைவரோடெதிர்த்துச் சமர்த்தொழில் புரிவான்வே ண்டி திரிபுராதிகளுடைய கோட்டையாகிய பெரிய மதிலின்மீது கடலை நோக்கிச்செல்கின்ற நதியைப் போற் செல்லும்போது, அந்தவெள்ளத்தைப்பார்த்து வேறொரு சமுத்திரம் எதிர்த்தாற்போ லங்குவசிக் கும் சிவந்த கண்களையுங் கரியசரீரங்களையுமுடைய வசுரர்கள் விரைவாகவெதிர்த்து யுத்தஞ்செய்யத் தொ டங்கி இடிகளைக் கக்குகின்ற மேகத்தைப்போல விற் களில் நின்றும் பாணவருடங்களைப் பொழிந்து கதை யும் வேலும் மழுவும் வாளும் வீசி எதிரிகள் தாள் களுங் கரங்களுஞ் சிதறும் வண்ணம் செய்தார்கள். அப்போது உபசத்துக்களும் அத்தன்மையவாகிய ஆயுதங்களை யார்ப்பரித்து வீசினார்கள். இவ்வாறு

பகைத்து இருதிறத்தாருங் கொடும்போ ரிபுறறும் போது மதம் பொருந்திய யானைகளையொத்த அசுரர்களுக்காற்ருமல் நாரணன் விடுத்த உபசத்துக்கள் முதுகுகாட்டி யோடினர். அதனைக்கண்டு தேவர்கள் மாயவன் மலரடியில் வீழ்ந்து சேடன்மீதரிதுயிலமருந் தேவனே! நீ அனுப்பிய உபசத்துக்கள் அசுரரோடும் யுத்தஞ்செய்து வலிமைகெட்டோடிப்போயினர். இனி யியற்றுங் காரியம் யாதென்றனர். அதனைத் திருமால் கேட்டு மனம் வருந்திப் பெருமூச்செறிந்து பாவத்திற்கஞ்சாத அக்கொடியவர்கள் சிவலிங்கத்தை யருச்சிக்கின்றதனுல் யாவராலும் வெல்லப்படாதவராயினுரென்று நினைந்து, தன்னெதிரில் வருந்திநிற்கும் தேவர்களைப் பார்த்துக் கூறுகின்ருர். தேவர்காள்! உண்மையான சிவலிங்க பூசையைச் செய்பவர்க்குச் சர்ப்பத்தினுலும் மிருகத்தினுலும் பேய்களாலும் நவக்கிரகங்களாலும் பிணிகளின் ருெடர்பாலும் அரசர்களாலும் கொடியோர்களாலும் வஞ்சகர்களாலும் வரத்தக்க துன்பங்கள் வரா.

அநந்தங் கொடியபாவங்களைச் செய்தவர்களானுலுங் தேவதேவனைச் சிவலிங்கத்தில் அருச்சிப்பாராயின் அவர் கெடுதியற்ற மாதவத்தையுடைய புண்ணியராவர்; அவரிடத்தில் அந்தகனும் மனதிலச்சங் கொண்டணுகான். ஆகையான் மும்மதிலுடைய வவ்வசுரர்கள் அரனைப் பூதிசாதனத்துடன் பூசனைபுரியும் வரைக்கும் எந்தசெய்கையினுலு மிறக்கமாட்டார்கள்.

அவர்களை நாம் ஒருபாயத்தினுல் சிவார்ச்சனையைவி ட்டுநீங்கும் வண்ணஞ்செய்வோம் ; தேவர்களே! அத னுலுங்கள் மனத்துயருமகலும்" என்றுரைத்து மர கத மலையானது சந்திர சூரியர்களை யிரண்டுபக்கத்தி லும் வைத்திருத்தலைப்போற் சக்கராயுதத்தையுஞ் சங்கத்தையுந்தரித்தமாயவன் நாரதமுனிவனைநோக்கி இவ்வாறு கூறுகின்ருர். நாரதனே! உலகில் அன் புடைய கணவர்கள் உயிர்போன்ற பதிவிரதத்தன் மைவாய்ந்த பெண்களை அமையப்பெறுவராயின் அக் கற்புடைப்பெண்கள் பல்வகைப்பட்ட வுலகெல்லாம் அழிய நினைப்பராயின் அழிந்துவிடும். அவர்களா லழி யாம லிருக்கவுங்கூடும் ; ஆகலான் வலிமையுடைய முனிவர்களைப்பார்க்கிலும் அக்கற்புடையமகளிர் மிக் கவலிமையையுடையவர்கள். வணங்கப்பட்ட கடவு ளென்று தன்நாயகனை நினைக்கும் பதிவிரதைகள் ஓர் காரியத்தைகட்டளையிடுவாராயின் அதனையானும் பிர மனும் மனமகிழ்ச்சியுடனியற்றுவோம் ; நாங்கள்மாத் திரமோ ஒப்பற்ற வெமது தலைவராகிய பரசிவமுமிய ற்றுவார். கற்பகலாதமாதர்கள்மனமகிழ்ச்சியடைவரா கில்அதனுல்கிடைத்தற்கரியநன்மைகளெல்லாமாகும். அவர்கள் சினங்கொண்டாலோ தீமையுமவ்வண்ணமே யுண்டாகும்; அவர்களது தன்மையை யாரறிந்துரைப் பர்? தமக்கு வாய்த்த கணவர்கள் தரித்திரரானுலும் நற்குண மில்லாதவரானுலுங் கிழவரானுலும் நோயு டையவரானுலும் அழகில்லாதவர்களானுலும் அங்கவி னர்களானுலும் மூடரானுலும் மிகக் கொடியவரானு

லுங் கற்புடையமகளிர் அவர்களிடத்தில்வைத்த பக்தி யிற் குறைவுறுர்கள். திரிபுரத்தை யாளுகின்ற வஞ்ச கம்பொருந்திய கொடிய வசுரர்களையடைந்த மாதர்க ளித்தன்மையாகிய கற்புத்தன்மையையடைந்தவர்கள். என்னசூக்ஷியினுலேனும் அழித்தற்கரிய வந்த கற்பை நீ யழித்துவரக் கடவாய் என்றனுப்ப, நாரதமுனிவர் திருமாலே; என்னிடத்தி லமைந்துள்ள அரியமாயை யினுல் அப்பெண்கள் கற்புத்தன்மை முழுவதையும் விரைவிலகற்றுகின்றே னென்றேகினர். அம்முனிவர் சென்ற பின்பு தேவர்கள் நெருங்கிய சபையிலுள்ள விஷ்ணுவானவர் தனியாகச் சென்று திரிபுராதிகள் தாங்கள் செய்யுஞ் சிவலிங்கபூசனையைவிட்டு நீங்கும் படி யோர்காரியத்தைச் செய்வேனென்று, வேதங்க ளுக்கு மாறுபாடாகிய வோர்நூலை யவர்கள் மனதிற் குப் பொருந்தும் வண்ணமியற்றி, அதனைக் கைக்கொ ண்டு புத்தவடிவோடும் அவர்பால் செல்வாராயினர்.

வலிமைபொருந்திய முப்புரத்தைநோக்கிவருகின்ற விஷ்ணு, புத்தன், அருகன், சினன் என்கிற மூவருமே ஒருருக்கொண்டு வருகின்றுர்களென்றெண்ண ஆண் டுச்சென்று வஞ்சமதியைக்கொண்டு தாமியற்றிய நூ லால் பாவ மார்க்கங்களையெல்லாம் தரும மார்க்கமெ ன்று மயக்கிக் கூறுகின்றபொழுது, அதனைக்கேட்ட அசுரர்கள் மயங்கி விளக்கமிக்க விபூதி ருத்திராக்கதா ரணம் சிவலிங்கார்ச்சனை முதலியவைகளில் வைத்தி ருந்தபற்றுக்களைவிட்டு நீங்கினுர்கள். நீங்கி, இதுதான்

நினைக்கவும் செய்யவுங்கூடிய விதியென விருப்பத்துடன் நாராயணனுரைத்த பொய் நிறைந்த வஞ்சநூலின் விதியைக் கதியென்று கொண்டு, மன மருளடைந்து மதியிழந்த கொடிய வசுரராகிய கயவர் அதுகாறுந் தமக்குரிய நிதியாகக்கொண்டு பூசியிருந்ததிருநீற்றை யிழந்து, வெறும் பாழுடம்பா யிருக்கப்பெற்றனர். அப்பாழுடம்பானது சந்திரன் பிரகாசித்து நின்றுமமையும்போ திருண்டு பொலிவின்றிக்கிடக்கும் சங்குலை யொத்திருந்தது. இவ்வசுரருடைய செய்தி யிங்ஙனமிருக்க இவர்களுடைய மனைவிமாரிடத்திற் சென்ற நாரதர் மிகவுமுறுதியுள்ள வம்மாதர்கணெஞ்சிற் காமங்கலந்து விளங்கும் வண்ணம் மாயையைத் தருகின்ற வார்த்தையைச் சொல்லி மயக்கத்தைச்செய்ய, தேவர்களியற்றிய புண்ணியத்தின் வலிமையால் அவர்கள் கற்புநிலையினின்றும் அகன்று காமத்தையடைந்து மெலிந்தனர். நாரதமுனிவர் அவரது மெலிவைக்கண்டு இனித்தான் அவர்கள் கூட்டோடு மாய்குவரென்று ஆர்வமுற்று களிப்புடன் தேவர்களிடம் சென்று திரிபுரத்தினடந்த விருத்தாந்தங்களையெல்லாம் அவர்கள் மகிழும் வண்ணஞ் சொல்லினர். அதனைக்கேட்டதேவர்கள் நம்பகைஞர் தோற்று ரென்றுள்ள மகிழ்ந்து முகுந்தனை மூன்றுதரம் வலம் வந்து பணிந்து அவரடியைமுடிமேற்கொண்டு ஆனந்தத்துடனுடிப் பாடுவாராயினர்; அந்த அமரர்களுடைய ஆனந்தத்தைத்திருமால் பார்த்து உங்கள் வியாகூல முழுமையுங் கெடுப்பதற்கு எமது சிவபெருமானுடனே முறையிட்டுக்

கொள்ளுவோம் வாருங்களென்று தேவர்களை யழைத்துக்கொண்டு எம்பிரானுடைய கைலை மலைக்குப் போயினர். கைலையைநோக்கிப் போனதிருமால் அக்கைலையின் அழகினை நோக்கி ஓதேவர்காள்! முன்னே காணப்படும் இவ்வழகினை யெடுத்துச் சொல்லு மிடத்து அதோ வருகின்ற நாரணன் தனது நாயகராகிய சிவனாரது திருவடியை வணங்கித் தேவர்களுக்குண்டாயிருக்குந் துன்ப மிதுவாமென்று சொல்வானாயின் அத்துன்பத்தை இன்றே தொலைப்பனென்று தன்னுள்ளே நினைத்து நமக்கு முன்னே தெரிவிக்க ஒருருக்கொண்டு வருவதைப்போலு மிருக்கின்றது. அன்றியுஞ் சந்திரனானவன்முன்னே தன்னைச்சிரசிற்றரித்த சிவபெருமானைத் தான்றலையிற் சுமக்க விரும்பி தவத்தினாலே யாகாயத்தை யளாவிய பெரிய உருவத்தைக் கொண்டெழுந்து நின்றதைப்போலு மிருக்கின்றது. அன்றியும் வெண்ணிறத்தினை மிக்க பாற்கடலானது சிவபிரானுக்கும் நாமேயிருக்கும் ஆசனமாயிருந்திருப்போமென நினைத்துப் பின்னர் இப்பொழுது நம்மை யிடமாகக்கொண்டிருக்கும் இக்கும்பதி நமக்குத் திரணமொத்தவன்; இவனை நமதலையில் அலைந்து கொண்டிருக்கத் தாங்கி யிருக்கின்றோம்; சிவனைப் போலல்லவே சிவபெருமான் அவன் சிற்கன புராணனாயிற்றே, ஆகலான் பாலாகிய நாம் தயிராகப்பரிணமிப்பது போல் கனமான மலையாகப் பரிணமிப்போமென்றெண்ணி இவ்வுருக்கொண்டிருப்பது போலு மிருக்கின்றது. இவ்வண்ணமாக விளங்குங் கைலை

யாகிய ஒப்பற்ற ஞான மலையில் இலக்குமி நாயகரா கிய திருமால் தேவர் கூட்டங்களோடு சிரசில் கைக ளஞ்சலியாகக் குவிய நந்தி எம்பெருமானுக்குக் கா ட்டிச்சென்றனர். சென்று, அளவற்ற பிரமதகணங் கள் துதிக்கயாவர்க்குந் தலைவராகிய நந்திதேவர் அம ர்ந்திருக்கும் முதற்கடை வாயிலை யடைந்து அந்நந்தி தேவரை வணங்கி நின்று கூறுகின்றனர். எங்கள் தெய்வமாகிய வையனே! நீர் உள்ளே சென்று தெய் வசிகாமணி யாகிய சிவ பிரானுக்கு இங்கிருக்கும் யாங்கள் அவரையணுகும் வண்ணமுரைத்தருள வே ண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்ய,அங்ஙனமே யாகுக நீவிரிங்ஙனம் நின்மின்களென்று நிறுத்தி நந்திதேவர் சென்று அளவில்லாதனவாகிய புவனங்களுக் கதிபர்க ளும் பல சிவகணங்களும் அளவற்ற முநிவர்களு நிறைந்திருக்கின்ற சபையில் அளவற்ற பிரகாசத்து டன் விளங்காநின்ற மணிகள் பதித்த பீடத்திலமர்ந் தருளிய அளவற்ற பெரிய அருளாளரான சிவபெரு மான் முன்சென்று, அன்பாக வணங்கி ஐயனே! திரு மால் பிரமன் இந்திராதி தேவர்கள் சூழ முதற்கடை வாயிலில் வந்திருக்கின்றனரென்று விண்ணப்பஞ் செய்ய, பெருமான், அவர்களை விரைவாக அழைக் கக் கடவாயென்றனர். உடனே நந்திதேவர் ஒரிமை நேரத்திற்குள் முதற்கடை வாயிலையடைந்து ஓதிரு மாலே! உங்களை உமாமகேசுரரழைக்கின்றனர் வாரு ங்களென்றுசொல்ல. திருமால்முதலிய யாவரும்நிறை ந்த மகிழ்ச்சியுடையவராய் அணையைத்திறந்து விடப்

பட்ட நீர்போலோடி மின்னலைப்போன்ற சடையை யுடைய வித்தகன், என்னையீன்ற அன்னையுடனமர்ந் திருக்குஞ் சபையிற் சென்று மரக்கொம்பு சாய்வது போல் கீழே வீழ்ந்து அன்புடனெழுந்து மிகுந்த பக்தியோடு தலையிற் குவித்த கைகளுடன் நாக்குழற மனநெக்கு விட்டுருகக் கண்ணீர் மார்பில் நிரம்பி வழியவுடல் சோர்ந்து நின்று துதிக்கத்தொடங்கினர்.

நிறைந்தநின் றெல்லை யுண்மை நிலைதிரி வின்றி யாங்கள்
பிறந்திறந் திடுத தீர்ப்பான் பேரரு ளுருவு கொண்டிங்
குறைந்தநின் கருணை போற்றி யுயிர்க்குட லளித்தி யக்கிச்
செறிந்தமுன் வினைய ருத்தித் தீர்த்திடும் பரிவு போற்றி.

உலகுயி ரின்பந் துய்ப்பவுனதுபே ரருளே மாதென்
றிலகுற விடத் திருத்தி யிருந்திடுங் கருணை போற்றி
விலகியவ் வின்பஞ் சில்லோர் விடுக்கவவ் வுருவ கன்ற
வலகினல் லருள்கொண் டுற்ற வமலவக் கருணை போற்றி.

ஐம்பெரும் பூத மாதி யாயதத் துவசா லங்க
டம்பெரு கறிவொ டுக்குந் தனியிருண் மலம்வே றாக
நம்பநின் னருளி னின்ற நற்றவர் தம்மின் வேறு
யிம்பரி னறிந்து கூடா திருந்தவா றிருப்போய் போற்றி.

அருவுநல் லுருவு மற்றை யருவுரு வதுவு மாகப்
பரவுமொன் பதிற்றுப் பேதப் பகுதியுஞ் சத்தி யைந்தின்
விரிவுமன் றூய வுன்றன் மேனிலை தமதே யாக
பொருவரு மன்பர்க் காக்கும் பொருவிடைப் பாக போற்றி

என்றிவ்வண்ணந் துதித்து நிற்க எங்களையகளாகிய சிவபெருமான் திருமாலை அருளோடும் பார்த்து இல

க்குமியின் மூலமுகங் குழையப்பெற்ற வயிரத்தோ ளனே! நீ வருத்த நிலையோடு, கூடியிருக்கின்ற இத் தேவர்களுடன்வந்த காரணம் யாதென்று வினவினர். திருமால், எம்பெருமானே! பொன் வெள்ளி இரும் பினாலாகிய கோட்டைகளைப் பிரமன் கொடுக்கப் பெற்றுள்ள அசுரர்கள் செய்யுந் துன்பத்தால் இத் தேவர்கள் நொந்து இந்திரனோடு இந்நாள் காறும் எல்லை காணக் கூடாத துன்பக்கடலில் மூழ்கிக்கிடக் கின்றனர். தேவரீர் கருணையங் கடலாதலால் தேவர் கள் துன்பத்தினின்று நீங்கி உனது பொற்பாதக மலங்களுக்கு எப்போதும் ஏவல் செய்யும் வண்ணம் கோட்டையை யுடைய அசுரர்களது ஆற்றலை யழி த்து அருள் புரியக்கடவீரென்று விண்ணப்பஞ் செ ய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் இந்திரனும் சிவ பெருமானைப் பணிந்து எங்கள் பெருமானே அடி யேன் தேவர்களோடுங் கப்பலின் பக்கலில் சுழலு கின்ற காகத்தை யொத்திருக்கின்றேன்; யாங்களுன தடைக்கலம், எங்கள் மீது கிருபை செய்யுமென்று பிரார்த்தித்தனன். அதனைக்கேட்ட ஞான நாயகன் சுரர்கள் மனதிலுள்ள துன்பத்தை நீக்க நினைந்து நகைத்து நாமெழுந்தருளி வந்து அசுரர்களை யழி த்து விடுகின்றோம். அதற்கு நம்மிடத்தில் யுத்தத் திற்குரிய ஆயுதங்களொன்று மில்லையே யென்றருள, அத்திருவாக்கைக்கடவுளர் கேட்டு அளவற்றவுலகமெ ல்லா மிமைநேரத்தி லாக்கி யளித்தழிக்குந் தயாநிதி யாகிய இறைவன் இவ்வண்ணம் பகர்ந்தது ஓர் விளை

யாடலாகுமென்றெண்ணித் தங்கள்தச்சனுகிய விசுவ கர்மனைப்பார்த்துச் சொல்லுகின்றனர். ஓ மயனே! நம து பெருந்தகையாராகிய சிவபெருமானுக்கேற்றதே ரொன்றை யியற்றக்கடவா யென்றனர். அவன் அதிக விரைவாக பூமியே தேராகவும், சந்திர சூரியர்களே சக்கரமாகவும், வேதங்களே புரவியாகவும், சதுர்முக னே சாரதியாகவும், மேருவேவில்லாகவும், அநந்தனே நாணுகவும், அக்கினி சந்திரன் திருமாலென்னு மூவரு மே பாணமாகவுஞ் செய்தனன். தேவர்கள் அவற் றைக்கண்டு ஆர்வமேலிடும் மனத்தினராய் வணங்கி ஆதிபகவனே! அமலனே! முக்கட்பராபரனே! தே வரீர் திருவருளினுலாகிய இவைகளைக்கொண்டு எங்க ளை வருத்துகின்ற சத்துருக்களையழித்து எங்களை ரட் சிக்கவேண்டுமென்றுர்கள். அதனைச் சிவபெருமான் கேட்டு, தமியேனுக்குத் தாயாகிய சங்கரியுடனெ ழுந்து தேவர்களெல்லாஞ் செயசெயவென்று துதிக் கப் பாததாமரையைப் பொற்பாது கைமீதிருத்தி நின்று நீங்கி வெளியேவந்து அங்குநின்ற இரதத்தி னலங்காரத்தைத் திருக்கண்களாற் பார்த்துச் சாம்ப வியுடன் அதிலேறிக் கூர்மையான பாணத்தையும் மேருவில்லையும் செந்தாமரை மலர்போன்ற திருக்கர த்துத்தாங்கிக் காண்டற்கரிய சுந்தரத்துடனின்றனர். நிமிர்ந்தோங்கியிருக்கு மேருவானது என் வில்லாகவ ளைந்ததெனின் நறுமணங்கமழுங் குவளை மலரை வெ ன்று சேற்கண்டைபை மருட்டி நீண்டகாதளவும் உ ருவவோடி செவ்வரிபரந்த கண்களையுடைய உமாதே

வியைத் திருமணம் புணரும் இறைவனது ஒப்பிகந்த தோளைப் பொலிவு பெற்றிருக்கு மேருமலை கண்டு மிக்க நாணமடைந்து தலை வளைந்ததாகும். திருமால் என்பாணமானரெனின்? தன் மனதையே ஆலயமாகக் கொண்டெழுந்தருளிய சங்கரனுக்குத் தன் மனைவி யாகிய பூதேவியே இரதமாகவும், தன் புத்திரனாகிய பிரமாவே சாரதியாகவும், தன்புத்திரனாகிய பிரமனுக் குப் பேரனாகியசூரியனும் இலக்குமியுடன் றிருப்பாற் கடலிற் பிறந்த தன்மைத்துனனாகிய சந்திரனுமே சக் கரமாகவும்! தன்சயனமாகிய அநந்தனே நாணாகவும், ஆன காரணத்தைக் கருதியே தானுமோர் பாணமு மாகிநின்றான். இளங்கதிரை விரிக்கும் ஒரு கோடி சூரியர்கள் ஒருருக்கொண்டு ஓரிரதத்தின்மீதுவந்தாற் போல் இறைவனிற்க, அக்கோலத்தை தேவர்கள் கண்களிப்பக்கண்டு மனமகிழ்ந்து உள்ளத்திலுள்ள கவலையெல்லா மொழிந்து கற்பகமலர்மாரியைப் பொ ழிந்தார்கள். பின்னர் சந்தோஷமெனும் கடலிற்படி ந்த தேவர்கள் பெருமானது கீர்த்திகளை யெடுத்துப் பாடினர். அவரது பாதபங்கயத்தைச் சிரமேற் சூடி னர். எழுந்து துள்ளி தொடைகளைத் தட்டினர். கை களைக் கோத்தாடினர். உத்தரீயத்தை மேலேவீசிப் பற்றினர். திக்குக்டோறுமோடினர்.

கவரிமான் மயிராகிய சாமரை மின்னுகின்ற செஞ் சடையோனாகிய சிவபெருமான் " என்னை நிலைபெற்றி ருக்குந் தன்னிலைமையினின்று நீங்கிய மயிரென்று யிக

ழ்தல் செய்யாது சுத்தமாக்கி உலகெலாம் புகழுஞ் சிறப்பையும் அளித்தானென்னு முவகைமேற்கொண்டு ஆடுவதைப்போல பலர் இரண்டு பக்கலில் நின்று சாமரைகளை அசைத்தனர். அநேகஞ் சர்ப்பங்கள் பல சந்திர சூரியர்களை கவ்விக்கொண்டு எங்களீசன் திருமேனியிலுள்ள தங்களினமாகிய நாகங்கட்குக் கொடுக்கக்கருதி அவ்வொளியைநீட்டி வாங்கி மோசஞ்செய்யலுற்றமுறைமைபோல எண்ணிலாதவர் ஒளி வீசும் நீண்ட ஆலவட்டங்களை யெப்பக்கமு நின்று வீசினர்கள். ஆலவட்டத்திலுள்ள, சூரிய சந்திரர்களி னுருவமைத்தலும் வீசுங்கால் திருகிவீசலும் இயல்பு, வெற்றிமிக்க பானுகம்பன் ஆயிரஞ் சந்திரர்கள் ஒருங்கே சேர்ந்ததைப்போல் ஆயிரஞ் சங்கங்களை ஆயிரம் வாய்களிலும் வைத்தூதினன். முழவம்பேரிகை கைத்தாளம் பம்பை முதலிய வாத்தியங்கள் அநேகர் இடி இடிப்பதுபோ லொலிக்கச் செய்தனர். அப்போது காகளங்கள் "ஞானசொரூபியானேன் வந்தான், பக்தியில் விளங்குவோன் வந்தான். பிறவி வேரறுப்போன் வந்தான், பேருண்மூர்த்திவந்தான், ஆனந்தக்கூத்தன்வந்தான் நீலகண்டன் வந்தானென்றூதின. பிரமத கணங்களெல்லாம் விடத்தைச் சிந்தும் பல்லையும் வாயையுமுடைய நாகங்களை யணிந்த நமது பெருமான் கொடிய போர் புரியச் செல்வான் மேருவை வில்லாகப் பிடித்தானென்று மகிழ்ச்சிமீதூர்ந்து சட்டைகிழியச் சரீரம் பூரித்து கல்லையொத்த திரண்ட தோள்கள்வீங்கி நெஞ்சங் கரையும்வண்ணம் உவகைபொங்கிச் சூழ்ந்தன. வெள்ளிய அரிவாளை மாற்றிவைத்

தாற்போன்ற வக்கிர தந்தங்களையும், பிலத்துவாரத்தையொத்த வாய்களையும், மலையின் குகையைப் போல் உட்டுளைபொருந்திய மூக்குகளையும், இடியிடித்தாற்போன்ற இனிய சொற்களையும், தீப்பொறிசிதறுஞ் சூரியனைப்போன்ற கண்களையும், அக்கினிசுவாலித் தெழுந்ததைப்போன்ற சிகைகளையும், இந்த வண்டத்தை வைத்தாலும் போதாதென்னும் வயிறுகளையும், குறுகிய கால்களையுமுடைய பூதக்கூட்டங்களெல்லாம் ஐம்பூதங்களையும் ஆக்கியளித்தழிக்கும் வன்மையினையுடை நமது பெருமான் என்னைப்பார்த்து நீயே அந்த அசுரர்களையழித்துவிடென்றுரைக்க மாட்டாரோ என்றும்" இக்கூட்டங்களிலெனக்கில்லாமல் யாவர்க்கு இந்த யுத்தங் கிடைக்குமோ வென்றும், என்னையொத்த வேறு சிலர் அசுரரை வதைக்க நான் பார்த்துச் சும்மாயிருப்பேனோ என்றும், தங்களுக்குள் தாங்களே நினைந்து வாடுந் தன்மையுடையனவா யிருந்தன. அன்றியும் பண்ணினிடத்தில் நிறைந்துள்ள வோசையைப்போல் ஆகாயத்திலுஞ் சத்திய வுலகிலும் வைகுண்டத்திலுஞ் சமுத்திரங்களினும் பூவுலகினும் மலைகளிலும் கணங்கள் நிற்பனவாயிருந்தன. இவ்வண்ணம் எங்குநிறைந்திருக்கும் வலிய கணங்கள் குறித்துத் தோள்களைத் தட்டியும், தங்களைத் தாங்களே புகழ்ந்தும், இந்தயுத்தத்தை நாங்களே செய்ய விரும்பியிருக்கின்றோமென்று சிவபெருமானைத் தொழுதும், தங்களது ஸத்தைத் தாங்களே மதித்தும் கடல்களஞ்சும்படி ஆர்ப்

பரித்தும், மகிழ்ந்து, மலைபோன்ற தோள்களைத் தட்டிக்கொண்டு அண்டகடாகங்களெல்லாம் அதிரும்படி யாரவாரித்து வந்தன. எழுகடலுமார்ப்பரிக்க பல சந்திரர்களுதித்ததைப்போலும் தேவர்களாற்றுங்கப்பட்ட குடைகள் மேலோங்கிவிளங்கின. மண்ணுலகமானது என்னை யிழிவுபடுத்தும் பொன்னுலகின்மேலெதிர்த்து யுத்தஞ் செய்வேனென்று மேலெழுந்து போவதைப்போல் மண்தூளிகள் மேற்செல்லவும், அதனைக்கண்டு பொன்னுலக மெதிர்த்துச் சமர் செய்ய வருவதைப்போல் தேவர்கள் தூவும் பொற்சுண்ணங்கள்வந்து அவற்றுடன் கலக்கவும், அதனைக் கண்ட தேரிற்கட்டிய கொடிச்சீலைகள் குறுக்கேநின்று அடித்துவிலக்குவதைப்போ லசைந்தாடிக் கொணடிருந்தன. இவ்வாறு பூதகணங்களினடுவே அந்திவாணுத்த சிவபெருமானது தேரைப் பிரமதேவன் தென்திசையைநோக்கிச் செலுத்தினன். சிவபெருமான் தமது பாதபங்கயத்தை வணங்கி புடைசூழ்ந்துவரும் அமாருடன் அநேககாதவழியை இமைநேரத்திற்கடந்து கூவமென்னுந் திருநகரத்தை யடைந்தனர். அங்கு அச்சமயத்தில் அழகிய அருள்மதம் பொழியும் யானைமுகத்தினையுடைய விநாயகக்கடவுள் அழகிய கொன்றைமாலையை யணிந்த சிவபெருமானுடைய இரதத்தின் அச்சை யெவருந் திடுக்கிடும்படித் துதிக்கையாலொடித்தனர். அந்த க்ஷணத்தில் நீண்டசர்ப்பத்தினை யரையிலணிந்த சிவபெருமானிடத்துப் பதிந்த அன்பில் தனக்கு நிகரில்லாதவரும், வேதகூட்டங்

கள் முற்றிலும் வந்து வணங்கப்பெற்ற பாத தாமரையையுடையவருமாகிய திருமால் விரைந்துஇடபவடிவங் கொண்டு இடையிற்புகுந்து பெருமானுடைய வரிசையமைந்த கொடிகள் கட்டப்பெற்ற பூமியாகிய தேரை தன்முதுகிற் றாங்கிக்கொண்டனர். தந்தையின் றேரினது அச்சை புத்திரர் துதிக்கையாலொடித்தவுடனே அதனை யறியாததேவர்கள் மனம் பதைபதைத்து முன்னினும் பதின் மடங்கு துன்பமடைந்து முகத்திலறைந்தழுது இது நமது சத்துருக்களுடைய செய்கைதானென்று நிச்சயித்துதிக்குகடோறுமோடினர். அருளானது உலாவப்பெற்ற ஆறுதிருமுகங்களையும், ஒளிபொருந்திய மாலையானது புரளப்பெற்ற மார்பத்தையும், புயங்களையும், அரியவேதப்பொருளாய் சிவஞான மானது விளங்கப்பெற்ற பாத தாமரைகளையுங்கொண்டு எனதுள்ளத்தின் கண்விளங்குவோனாகிய முருகப்பெருமான் "மருண்டமனத்தராயோடிப்போகுந் தேவர்களைக்கண்டு ஓ தேவர்களே! நில்லுங்கள் நில்லுங்கள், பயப்படாதீர்கள் என் தந்தை தேரினச்சையொடித்தவர் எனக்கு முன்வந்த விநாயகக்கடவுளே" மூன்று மதில்களில் வாழும் அசுரர்களல்லர். வம்மின்களென்றழைத்தனர்.

அதுகேட்ட வானவர்கள் மீண்டுவந்து கந்தசுவாமியின் பக்கல் அடைந்து "முருகனே இனிநம்மையாண்டருளிய நாதன் எவ்வாறு யுத்தஞ்செய்வாரென்று ஐயங்கொண்டு நின்றனர். அப்போது சிவபெரு

மான் அவர்களை நோக்கி "நமது மூத்தகுமாரனை யான் முதலிற் பூசனைசெய்யாமல் இரதத்திலேறினமையால் இவ்விடையூற்றை அவன் விளைத்தான் என்றுகூறி, மூத்த பிள்ளையை நினைந்து விநாயகக் கடவுளை வந்தனை செய்யாதவர்கள் முயற்சிக்குங் காரியம் விக்கினமாகுமென்பதை யாவருக்குங் காட்டும் பொருட்டு கூவமாபுரத்தில் பிரணவசொரூபியாகிய விநாயகக்கடவுளை கனிவர்க்க முதலியவைகளைக்கொண்டு அர்ச்சித்தார். பின்பு தேவர்களது மனத்துயர் நீங்கத் தனக்கு முன்னே அசுரருடைய மும்மதிலும் வரும்படி நினைந்தார். நினைக்கவும் நூறு யோசனை தூரம் அகலமுள்ள அந்த, மும்மதில்களும் அவ்வசுரர்கள் துன்ப மடையும்படி விரைந்து வந்தடைந்தன. இங்ஙன மடைதலும் இரதகச துரகபதாதிகளோடும் யுத்தஞ்செய்யும் பொருட்டு அவ்வசுரர்கள் எதிர்த்து நின்றார்கள். அதனைக்கண்டு தேவர்கள் கலக்கங்கொண்டு இடதுகரத்தில் மேருவாகிய வில்லும் வலது கரத்தில் அதிதீட்சண்ணியமான அம்புங்கொண்டு நிற்கின்ற சிவபெருமானுக் கருகிற்சென்று அசுரர்களை யழிப்பதற்கு இது நல்ல சமயமா யிருத்தலால் தேவரீர் போர்புரிந்து சங்கரிக்க வேண்டுமென்று வேண்டினர். அங்ஙனம் உமாதேவியைப் பார்த்து நகைக்க - அந்நகையினின்றும் வலிய அக்கினிக்கொழுந்து தோன்றி ஒரு நிமிடத்திற் பாதி ஆவதற்குள் திரிபுரங்களிற் சென்று பற்றியது. சிவபெருமான் தன் திருவாயினிடத்து வைத்திருந்து உமிழ்ந்த

தைப்போல் வெளிப்பட்ட அத்தியானது பற்றித்தி
குதிசென்றெரிந்து ஆகாயத்தை யளாவ, அசுரர்கள்
மெல்லிய புழுக்களைப்போல் பதை பதைத்து உயிர்
நீங்கினுர்கள். ஒப்பற்ற திருநீற்றையணியா தொழிந்த
அவ்வசுரருடல்கள் நீருயின. அதுபோலவே அவ்வ
சுரருடைய தேர்களும் புரவிகளும் கைகளுஞ் சிக
ரங்களும் சபைகளும் சோலைகளும் உளர்களும் மற்
றவைகளு மொருங்கே யெரிந்தன, திருத்தமான முப்
புரமும் நெக்குவிட்டுருகிச் சிதைந்து போயின, அம்
முப்புரத்திற்றலைவராக வசித்த மூவரும் தாங்கள
டைந்த வரத்தின் வலிமையால் அழியாமல் கிளை
கள்நீங்கிய விருட்சம் போல் நின்றனர். தேவர்க
ளுக்குப் பகைஞரிருந்த திரிபுரங்களிற்செஞ்சடைக்
கடவுள் நகையி னின்றும் பற்றிய தீயினிடமிருந்
தெழுந்த புகை ஆகாயமுழுமையு மூடி மேகங்களெ
ன்று சொல்லும்படி நின்றது. அசுரருடைய மதி
ல்களில் அரனுடைய வெள்ளிய நகையினின்றெழுந்த
அக்கினியானது சென்று தாக்கினதால் அந்த வெ
ள்ளிமதில் கரைந் துருகும்போது அதிற் சிதறித் தெ
றித்த பலதுண்டு துகள் களைப்போலுமாம் சந்திர
னும் நக்ஷத்திரக் கூட்டங்களும் - தன் பாதத்தை
யடைந்தவர்களது பழைய தீவினையைப்போல் முப்
புரமு மெரிந்து சாம்பலாப்போக சாகாமலிருக்கின்ற
மூன்றசுரரையும் எம்பெருமான் பார்த்து மேருவில்
லைவளைத்து அதிற்பாணத்தைத் தொடுத்துநின்றனர்.
இங்ஙனமாக இனிய சொற்களையுடைய பார்வதி பா

காது மலர்க்கரத்திலே தாங்கப்பெற்ற இவ்வில்லா
னது வலிமிக்க நாண்வடிவைப் பெற்றிருக்கும் தன்
சயனத்தி னுனியிலே அம்புருக் கொண்டு இருந்த
திருமாலுக்கு பொன்மலையாகிய வில்லானது பொன்
னாற்செய்த சிறந்த திருவாசியைப்போல் ஒளிதழை
த்துக் கொண்டிருந்தது. இந்த வில்விற்றொடுத்த
அம்பைநோக்கிச் சிவபெருமான் அவ்வசுரர்களுயிரை
பானம் பண்ணக்கடவா யென்று விடுத்தனர் - விட
வுங் குன்றைப்போனின்ற மூவர் மார்பிலும்பட்டு ஓர்
கணப்பொழுதுக்குள்ளே உருவி அப்புறம் சென்று
திரும்பவுஞ் சிவபிரானது வலக்கரத்தில்வந்தமர்ந்தது.
அந்த அம்புபட்டவுடன் அசுரர்களலறி ஆகாயத்தைத்
தொடும்படித் துள்ளிவிழுந்து உணர்வு சிதைந்து வா
னவர் மனத்துயர் மாண்டுபோம்படி மாண்டனர். அம்
புபட்டமார்பின் துவாரங்களில் நின்றும் பெருகிய
இரத்தவெள்ளம் பெருக்கெடுத் திரைச்சலிட்டுக்கொ
ண்டு அலைகளோடு கம்பம்போல் மேலெழுந்து ஓடி
னது அப்பிணமலையின் பக்கங்களில் அனேகவரு
டங்களுக்கு நமக்கு ஆகாரமிருக்கின்றதென்று நினைந்
துபற்பல நரிகளுஞ் சென்று சேர்ந்தன - தேவர்க
ளெல்லாம் பணிவிடை செய்ய திரிலோகத்தையும்
ஆண்டுகொண்டிருந்த திரிபுராதிகளும் இறந்து அவர்
களுக்குச் செய்யவேண்டிய ஈமவிதிகடன்களைச் செய்
துபார்க்கவும் ஒருவருமில்லாமல் நாயும் நரியும் புரட்
டிப்புரட்டி யுண்ணும்படிக் கிடந்தார்களென்றால்-இத்
தன்மையாகிய வாழ்வைப்பார்த்து மகிழ்வதும் மதி

யாகுமோ பூதங்களுக்கு யுத்தஞ்செய்யும் பிரதிட்டையைக் கொடாமற் சிவபிரானே யவ்வசுரர்களைக்கொன்றது எவ்வண்ண மிருந்ததென்றால் - சிலர் வறுமையாளரை யழைத்துக்கொண்டுபோய் அன்னம் பகரின்றோ மென்று இல்லிற்சென்றவுடன் அளிக்கமாட்டோம் போமென்று சொல்வதை யொத்திருந்தது. திரிபுரங்களும் மருளையொத்தன, அத்திரிபுரத்தில்வசித்த அசுரர்கள் இருளையொத்தனர், திருமால் அவ்விருளை யோட்டுகின்ற அருளை யொத்தனர், அவ்வருளுக்குப் பொருளாகும் திரிபுராரியாகிய சிவபெருமான் அவ்வருளினை யுடைய பொருளை யொத்தனர். உமாதேவியார் தனது மார்பில் பொற்சிமிளைப் பதித்தாற்போலும் பெற்றுள்ள தனங்களை அனுபவிக்கும் நன்மையை மிகுதியாகப் பெற்றிருக்கும் சிவபிரானது நகையாகிய அம்பால் முப்புரமும் சாம்பராய்ப்போனதும், அப்புரங்கட்குத், தலைவராகிய அசுரருடைய உயிர்கள்போய் அழிந்ததும், தேவர்கள் கண்டு ஆர்ப்பரித்து மேகங்களும் அஞ்சும்படி மலர்மாரிபெய்து களிப்பால் கைகளைக் கோர்த்துக் கொண்டாடி யுடல் வியர்த்துச் சாம்பராய்க் கிடக்கும் புரத்தின் சமீபத்தேபோய் கொடியராகிய அசுரருடைய சரீரங்களைப் பார்த்துக் குறித்து பரமசிவத்தைப் பாடினர் - வில்லுடன் அம்பேந்தி நிற்கும் அச்சம்புவின் பாததாமரையைச் சிரசிற்சூடி ஆநந்தக்கடலில் மூழ்கிப் புகழ்ந்து கூறுகின்றனர். இறைவனே இந்நகரத்தினிடத்தில் உனது பொன்போன்ற மலர்ப்பாதங்களை யருச்

சனைசெய்து யாங்கள் வாழும் வண்ணம் அருள் செய்யக்கடவாயென்று மொழிய, அப்போ தவ்விடத்தில் நிலைபெற்ற சிவலிங்கவடிவமாயினர். அவ்வாருதலும் உள்ளமகிழ்ந்து இமையர் இந்திரன் திருமால் பிரமன் முனிவர்க ளென்னும் இவர்கள் எல்லாம் திருமஞ்சன தீர்த்தம் - புட்பங் தூபதீப மிவைகளைக்கொண்டர்ச்சித்து இதுதான் சரீரமெடுத்ததற்குத் தக்கப்பிரயோசனமென்று துதித்தார்கள் - முன்னே விறகோலங் கொண்டு நின்றபெருமானே சிவலிங்கவடிவா யமர்ந்ததனல் அவ்விலிங்கத்தை யுலகத்தவர் விற்கோலநாதரென்றியம்பும்படி யவ்விடத்தில் வீற்றிருந்தனர். விற்கோலநாதராய் சிவபெருமான் அங்குநிற்கவும் விநாயகர் கந்தர் பிரமன் திருமால் இந்திரன் புவனத்தலைவர்கள் தவசிகள் முதலாயினோர்களும் எங்களுக்குமபொருத்தமானதலம் இதுதானென்று அங்குவசித்தார்கள், உமையவளுடன் சிவபிரானீங்காமல் எப்போதும் அங்கெழுந்தருளியிருக்குங் தன்மையினல் அக்கூவமாநகரம் * அவிமுத்தமென்னும் பெயரை யடைந்தது. அன்றியுஞ் சிவபிரானுடைய தேரின் ஏர்க்காலை விநாயகக்கடவுள் ஒடித்ததனல் † அது கூவரமென்னும் பெயரையுமடைந்தது. ஊர் நடுவிலுள்ள கிணற்றைப்போல் அத்தல மிருத்தலால் திரிலோக வாசிகளும் வந்து அங்கு சுகத்தை யடைகின்ற காரணத்தால்கூவமென்கிற பெயரையுங் கொண்டது.

---

* அவிமுத்தம் - தேவவுணவு தங்கிய விடம்.

† கூவரம் - அச்சு - ஏர்க்கால் - கூவம் - கிணறு.

பூர்வத்திற்செய்த தீவினைகள் அகல்வதற்கு எங்கள் விற்கோலநாதரது திருக்கூவத்தை நினைத்தல் சர்ப்பங்களின் விடநீங்க கருடனை நினைக்குந் தன்மையைப் போலுமாம். என்றிவைகளை ஐம்புலன்களை வென்ற சூதமுனிவர்கூறி ஓ முனிவர்களே குன்றவில்லியின் கூவமாநகரத்தை யடைந்து அரிய மோட்சத்தையடையுங்க ளென்றனர்.

திரிபுரதகனச் சருக்க முற்றிற்று.

சந்தானகிரி சந்தானச் சருக்கம்.

உலக மயக்கத்தைத் தூக்கும் மேன்மைவாய்ந்த நைமிசாரண்ய முனிவர்கள் சூத முனிவருரைத்த வார்த்தையைக் கேட்டு மனமகிழ்ந்து கூவபுரத்தினியல்பைக் கேட்கக் கேட்க எங்களாசை வளருகின்றதேயன்றி யடங்கவில்லை, ஆகலின் புராணங்களைச் சொல்லவல்ல சூதமுனிவரே எங்களுள்ளங்களிகூர இன்னமு முரைக்கக்கடவீர் என்று கேட்க - முனிவர் அவ்வார்த்தைக்கு மிகக்களிப்படைந்து இதனைக் கூறுகின்றார் :—

பூர்வத்தில் முப்புரமும் எரியும்படி புன்னகை புரிந்து அதில் வசித்த அசுரர்களையுங்கொன்று தென்திக்கிலுள்ள கூவமாபுரத்தில் நரசிங்கமாகிய நாரணன் வணங்கும்படி தேவசிங்கமாகிய சிவபிரான் எழுந்தருளியிருந்த காலத்தில் அசுரர்களியற்றிய துன்பத்

தினின்றும் நீங்கிய சுரர்களைப் பார்த்து பிரமன் ஒன்று கூறத் தொடங்கினர் - வண்டுகள் நெருங்கித் தேனையுண்டு இசைபாடுங்குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த தேவர்களே "இத்திருமாலானவர் மிகவல்லமையுடையவர், என்ன வென்ருல் பகையாயுள்ளவர் கையில் வாளாயுதத்தை மறைத்து வைத்துக் கொண்டு சமயமறிந்து சத்துருக்களை யழிப்பதைப் போல் இந்த மாயவன் இந்தத்தலத்தில் ஓர் தந்திரத்தை யெண்ணி சிவபெருமானது திருவேட மாகிய விபூதி உருத்திராக்கத்தை அவ்வசுராருடைய வுருவத்தினின்று மாற்றிப் பின்னர் சிவபிரானுக்கோரம்புமாகி அவ்வசுரர்களைக் கொன்றனன், ஆகையால் சிவலிங்க பூசனையைச் செய்பவர் அறிவில்லாப் பாதகர்களானுலும் அழிய மாட்டார்களென்றும், அச்சிவலிங்க பூசனையைச் செய்யாதவர்கள் மகாதவசிகளானுலும் அழிந்து விடுவார்க ளென்றுமறிந்தோம், இதனுல் மனதில் நிறைந்த வாசையுடன் சிவபூசனையைச் செய்வோரது பெருமையைச் சொல்ல முடியுமோ இம்மை மறுமைகளிலடையத் தகும்பிரயோசனங்களையும், வேத முடிவானது தெளிவிக்கும் பேரின்ப வீட்டையும், உண்மையாகத் தாத்தக்கது அச்சிவலிங்க பூசனையேயன்றி வேருென்றுண்டோ. ஆகையால் செம்மையாகிய மனத்தினுல் சிவபூசனையைச் செய்யாமல் மோட்சத்தையடைய ஆசையை மனத்தில் வைத்திடலானது சிறகில்லாத சிறியவோர் பட்சியானது ஆகாயத்தில் பறப்பதற்கு விரும்புந் தன்மையைப் போலுமாம்.

சடையின் கண் வாழுஞ் சந்திரன் அலைபெறியுங்கங் கையினது சிறுதுளிகள்தெறிப்ப அதனுல் நனைந்து குளிரடைந்து அதனைப் போக்கிக்கொள்ள இடக்கரத்திலிருந்து எழுகின்ற அக்கினியின்சுவாலையால் காய்ந்து ஒழித்துக் கொள்ளச் செய்யுஞ் சிவபிரானைப் பரமென்றறியாமல் யானும் திருமாலும் இயற்றிய தீங்கை இக்கூவபுரத்தில் சிவலிங்க பூசனையைச் செய்து ஒழித்து உய்ந்தோம். விபூதி ருத்திராட்சங்களை யணிந்து சிவலிங்க பூசனையைச் செய்யாதவர்கள் பாதகரிலும் பாதகராவார்.

எங்களுக்கு அவர்கள் எந்நாளிலும் புறம்பானவர்களே ஆகையால் அமரர்களே! நீங்கள் சிவலிங்க பூசனையைவிடாமற் செய்யுங்களென்று வேதமுடிவைக்கண்ட பிரமாவுரைத்தருளினர். அயனுரைத்த வார்த்தைகளை அமரர்கள்கேட்டு அவரைவணங்கி கூவநகரத்திற்சென்று இலிங்கவுருவைத்தாபித்துஅன்போடும் வழிப்பட்டனர். அவ்வாறவர்கள் அர்ச்சித்த சிவலிங்க வடிவுகடோறும் திருவிற்கோலநாத ரெழுந்தருளியிருந்து யாவரையும் ரட்சிக்கின்றனர். இத்தன்மையான மகிமைவாய்ந்த கூவ புரத்தில் யாவராகிலும் அடைந்தால் மேலான பரிசுத்த ஞானத்தையடைந்து அடைதற்கரிய சிவாநந்தத்தை யனுபவிப்பார்கள். தேவர்களெல்லாமநந்தங்கோடி தவங்களைச் செய்து மானிடராகி பரமசிவம் அன்பர்கட்கனுக்கிரகஞ் செய்யும் அக்கூவ புரத்திலவதரித்து வாழ்வார்களென்ருல் அதன் பெருமையை யாராலளவிட்டுச் சொல்ல

முடியும். தன்னை மனதிற் பதித்தவர்களுக்குப் பாவத்தைப் போக்குகின்றவருள் நிறைந்த சிவபெருமான் சந்தானகிரி சந்தான ரென்கிற ஞானசாரியராய்க் கூவ நகரத்தில் வசிப்பவர்களுக்குக் கிருபையுடன் உபதேசஞ் செய்ய அதனைக் கேட்ட அவர்கள் உலகின்கண் அழிவில்லாத சுகத்தையனுபவித்து மனங் களிப்படைந்திருந்து முடிவில் அழிவற்ற பரகதியையும் அடைவாராயினர். என்று கூவபுரத்தினியல்பைச் சூதமுனிவரியம்பலும், அதைக்கேட்ட முனிவர்கள் கரங்களைக் குவித்துக்கொண்டு எங்கள் செவிக்கு அமுதம் ஊட்டவந்த பெருமானே பரமசிவமெழுந்தருளிய கூவ புரத்தில் வசிப்பவர்களுக்கு உபதேசிக்கின்ற ஆசாரியன் யார்? அதை யியம்புமென்று வினவ, அச்சூதமுனி சொல்வார்:—முன்னொரு காலத்தில் முகுந்தனும், பிர்ம்மாவும், தவசிகளுந், தேவர்களும் ஈசனது சத்திநிபாதத்தை யடையப்பெற்றதால் உடலைவெறுத்து ஞானத்தை யடைவதற்கு விருப்புற்றார்கள், அவ்வாறு விரும்பியவர்கள் கைலையை யடைந்து கண்ணுதலைத்துதித்து சிற்றறிவுடைய யாங்களிந்த வுடற் சுமையைநீக்கி அறிவுருவமாகும் வண்ணம் பதிபசு பாசத்தி னுண்மை முற்றும் எங்களுக்குத் தெரிவித்துக் காக்கக்கடவீரென்றார்கள்.

இதனைக் கேட்டருளிய சிவபிரான் அளவற்ற வருளுடையவராய் அக்கைலையைச் சூழ்ந்திருக்கின்ற பெரிய நான்கு மலைகளுக்குள்ளே ஆமர்த்தகிரியினுச்சி

யையடைந்து அன்று மாயவனுக்கு நல்லா சிரியனுகி வுண்மையை உபதேசிப்பார், ஆதியும், நடுவும், அந்தமும், அருவமும், உருவமுமாகியபேதங்களும், பிரமாணங்களுமின்றி பெரிய ஞான சோருபமாகி வேதங்களுக்கும் மனதுக்கு மெட்டாத மலாகிதமாய் எங்கு நிறைந்ததாகி பிறப்பிறப்பற்று ஒரே தன்மையாயிருப்பதுவே பதியினது இயல்பாம். அனுதியே மூலமலத்தான் மூடப்பட்ட பேரறிவினையுடையதாகியும், மாயையினுல் விளங்கப் பெறும் சிற்றறிவினையுடையதாகியும், முன்செய்தவினைகளால் பிறப்பிறப்புகளையுடையதாகியும், ஆகாயத்தைப்போல் அடுத்தவண்ணமாயும் மிருப்பது பசுவினது தன்மையாம், அனுதியாகியும், ஒன்ருகியும், அளத்தற்கரிய சத்தியுடைத்தாயும், பலவுயிர்களின் உணர்வையெல்லாந் தடுப்பதாகியுஞ் சிற்சத்தி விளங்காநின்ற வுயிர்களிடத்தெல்லாம் நீங்கிப்போகும் தன்மையாகியுமுள்ளது இருள்மயமாகிய ஆணவமாம்। சுத்தம் அசுத்தம் மூலப்பிரகிருதியென்கின்ற சம்பந்தத்தையடைந்து சுத்தமாகிய ஐந்து தத்துவமும், சுத்தா சுத்தமாகிய எழு தத்துவமும், அசுத்தமாகிய இருபத்து நான்கு தத்துவமுமாகிய முப்பத்தாறு தத்துவங்களாய் பிரேரம் (ஏது) போக்கியம்(அநுபவப்பொருள்) போகம் (அநுபவம்) என்கின்ற மூன்று காண்டங்களாய் ஆன்மாக்களுக்குதவி புரிந்திருப்பது மூவிதமாயையாம். மனம் வாக்கு காயங்களாற் செய்ய வருவதாகிய பாவ புண்ணியமென்கிற இரண்டுவகையாய்ச் சஞ்சிதம் பிராரத்வம்,

ஆகாமிய மென்னு மூன்றியல்பாய் புத்தியிற்பொரு ந்தும் நிலையையுடையதாய் அவ்வத் தகுதிக்கேற்ப வினையெனும் பேர்பெற்று அனுபவித்தொழிக்கப்படு வதாய் அனுபவமுடிவில் பின்னனுபவத்திற் கிடனின் றி ஒப்படைவதாயுள்ளது கன்மமாம், என்று பதி பசு பாசப்பொருளின் றன்மையை யுரைத்து இம்மலங்க ளெல்லாம் உனக்கு அன்னிய மாகுமென்றும் அறி வித்தொழித்து அறிவுருவமாகி நிற்கின்ற வுன்னைப் பாரெனறு ஆத்ம நிலையைத்தெரிவித்து அதற்கு மேலேநிற்கின்ற தன்னருளையுங் காட்டிச்சென்று கூடு தலில்லாததுஞ் சேர்ந்து நிற்பதுவுமன்றி ஒன்றிரண் டென்பதில்லாமற் சுட்டறிவையு நீங்கித்தானே தானு யெப்போது நிற்கின்ற என்னை யிருந்தபடியே சாணக் கடவாயென்று தன்னுடைய நிலையை வாக்கினும் சொல்லாமல் குறிப்பினுலுபதேசித்தார். இவ்வண்ண மே அயனுக்குப் புட்பகிரியிலும் இருடிகளுக்குக் கோ ளகிரியிலும் தேவர்களுக்குச் சந்தானகிரியிலும் முன் னியம்பிய முப்பொருள்களையும் முறையாக வுபதே சித்தார். அந்த சந்தானகிரியின் பெயரே சங்கரத் கும் பொருந்தியதாம் - கூவபுரத்திலுள்ளவர்கள் தே வர்களாகையால் அவர்களுக்குப் பேருளுடைய வாசாரியர் சந்தானகிரி சந்தானன், என்று இப்பெரு மை வாய்ந்த வாசாரியர் அக்கூவபுரத்திலெப்போதும் வீற்றிருப்பார். பரம சிவமே குரு வடிவங்கொண்டு மிகப்பிரியத்துடனுபதேசஞ்செய்யுந் திருக்கூவத்திற்

குச் சமமாக வேறொரு தலத்தை யுரைப்பதாகாதென்று அத்தலத்தினியல்பு முழுவதையுஞ் சூதமுனிவர் சொல்லியருளினர்.

சந்தானகிரி சந்தானச்சருக்க முற்றிற்று.

அடிமுடிதேடிய சருககம்.

இவ்வாறு சூதமுனிவரியம்பலும், இதனைச் செவியுற்ற இருடிகள் மகிழ்ந்து சூதரை நோக்கி ஐயனே! விஷ்ணுவும் பிர்ம்மாவும் நானே பிரமமென்று தங்களிற் றருக்குற்றுப் பகையானரென் றோதினீரே, மீண்டும் அவர்கள் சிவபெருமானையே பரமென்று அவர்கள் எந்த எதுவினல் அறிந்தனர், அதையியம்புவீரென்று வினவ, சூதர் சொல்லுகின்றார். ஆதிகாலத்திற் பிரளயம் வந்து எங்கும் பரவியபோது பிர்ம்மதேவன் நித்திரை செய்கின்றதை, கெடாதவின்பத்தையுடைய முனிவர்கள் பார்த்து வேதாவின் றேகத்திற் கையை வைத்து கலாசொரூபியாகிய சரஸ்வதிக்கு ஆவிபோன்றவரே! நித்திரை விட்டு எழுந்திருமென்றூர்கள். அப்போது பிரமாவெழுந்து களிப்புடன் கடலிற் சென்றுலாவினர். அங்கு சூல்கொண்ட மேகம்போற் பாற்கடலில் அறிதுயில் செய்கின்ற கண்ண பிரானைக்கண்டு. மயக்கங்கொண்ட பிரமன் விஷ்ணுவை மயங்கும்படி யடித்து. அழகிய நீரின்மீது நித்திரை செய்கின்ற நீயாரென்று வினவ

அதைக்கேட்ட விஷ்ணு வானவர் உலகுக்கெல்லாந் தலைவனாகிய நாராயணன் நானென்றேறுதிக்கொண்டு மமதையுடனெழுந்தார். அங்ஙனம் திருமால் சொல்லிக்கொண்டு எழுவதைப்பிரமன் கண்டு விஷ்ணுவுரைத்த வார்த்தையை வினவி நீயல்ல நல்ல பரம் நானே என்று முன்னின்றான். அப்போது விஷ்ணு கோபங்கொண்டவராயெதிர்த்துப் பிரமாவின் காந்தி பொருந்திய மார்பிற்புடைத்தார். தாமரைக்கமலத்து வீற்றிருக்கும் பிரமாவும் தீயில்நெய்விட்டது போலச் சினங்கொண்டு அண்டமுகடு உடைந்ததோவென வையுறுமாறு விண்டுவின் மார்பிற்குத்தினார். இவ்வாறிருவருக்குங் கொடும் போர்விளைந்து. ஒருவரையொருவர். மார்புகுழியும்படிக் குத்துவார், குதித்தோடி யெற்றுவார், பொன்மலையுங் கரியமலையுஞ் சுழல்வதைப்போற் சுழலுவார், உடல் சிதறப் பிடிப்பார், கீழ் மேலாக விழுந்து பதைப்பார், கட்டித் தூக்கித்தள்ளி யிடதுகையைக் கழுத்திலிட்டு அழுத்திக்கொண்டு கையை முட்டியாகப் பிடித்து மார்பிற் குத்துவார், சிரசான் முட்டி வட்டாகாரமாகச் சுற்றுவார், இப்படி மற்போர் புரிவதை முனிவர்களோடு தேவர்களுங்கண்டு, இவர்களைப்போல் யுத்தஞ் செய்தவர்களை நாம் கண்டதில்லை யென்று புகழ்ந்தார்கள், பின்பு யிடிபோன்ற சொற்களையுடைய அவ்விருவரும் உறைவாளை யுருவிக்கொண்டெதிர்த்தனர், இவர்களால் வீசப்பட்டவாளின் ஒளியன்றி யின்னாரிவரென்று இமையோர்களும் அறியாவண்

ணம் காற்றிற் சுழலுங் காற்ருடியைப்போற் சுழன் ருர்கள். சிவபிரானை யறியாமல் மயங்கிச் சன னங்கடோறு முழலுகின்றவர்களைப் போல் மலைகளி லும் அமராபதியிலும் கடல்களிலும் பாதலத்திலுந் திக்குகளிலுஞ் சூரியமண்டலத்திலு மோடுவார்கள். ஒருவரை யொருவர் வெட்டவேண்டுமென்று கால் கை சிரந்தோள் கண்டந் தொடை மார்பு வயிறு விழியிவைகளைக் குறிப்பாக நாடுவார்க்ள். இவ்வாறு இவர்கள் யுத்தஞ் செய்யலும், அத்தருணத்திலிவர் கள் அகங்காரத்தை யடக்க நமது பாமசிவம், முடி யானது அண்டகோளகையைக்கடக்கவும், அடியா னது பாதலங்கள் முழுவதையுந் தாண்டவும், அக் கினி மயமான இலிங்க வடிவமாக அவ்விடத்திலெ ழுந்தருளினுர். அவ்வண்ணமெழுந்த இலிங்கமானது மாலும் அயனுங்கொண்ட மனத்திருளை நீக்கவமைக் கப்பட்ட மாணிக்க தீபம்போல் விளங்கியது; அவர் கள் மனவிருள் அப்பெருஞ்சோதியன்றி மற்ருேர் வி ளக்கின் ஒளியால் மாற்ற முடியுமோ, அங்கெழுந்த அவ்வக்கினிஸ்தம்பத்தை அரியும் அயனும் அமர்த் தொழிலை விட்டு நீங்கிப் பார்த்து, இந்தஸ்தம்ப மிங்கு வந்தது என்ன காரணமென்ருர்கள்; இதைத் தாணுவென்றறியாமல். கபாலமேந்திய கையனை அவ னது அருள் ஞானக்கண்ணலன்றி யார்காண வல்ல வர்? பின்னர் இருவரும் யுத்தத்தை விட்டு, இந்த அனற்பிழம்பின் அடியையும் முடியையும்பார்ப்போம், அவ்வடி முடியை முன்னே பார்த்தவன் யாவனே

அவனே பரமாகுவனென்று தங்களுக்குள்ளே யுடன்பட்டு, விஷ்ணு, வானவர் பன்றியாகவும் பிரமா அன்னமாகவும் வடிவங்கொண்டு பாதத்திலும் ஆகாயத்திலுஞ்சென்று, மனவாக்குகளுக்கெட்டாத ஞானநாயகருடைய அடியையும் முடியையும் பார்ப்பதற்கு அறிவில்லாமையால். மயங்கினார்கள். முன் பொருகாலத்தில் பர்வதம்போல் வந்த கோட்டையுடைய மதயானையை வாயாற்குடற் புறப்படும்படி மிதித்தமூத்திக்கொன்ற பாதகமலங்களென்றறிரியாமல் விருப்பத்துடன் அதனைக் காணும்படி பாதலத்திற்சென்று பிறைபோன்ற கொம்புகள் தேய்ந்துபோய் பூமியைத் தோண்டிக்கொண்டு பிலங்களை யெல்லாங்கடந்தும் வராகஞ் சோர்வடைந்து தேகம் வருந்தியதேயல்லாமல், எம்பெருமானுடைய திருவடிகள் விலங்காகிய பன்றிக்கு அகப்படத்தக்கதோ? அல்லவாதலால் அவ்வராகாவதாரி நாம் நினைத்த குறியைப் பார்க்க வில்லையே அயன்சென்று முடியைக்கண்டு வருவானாகில் நாமென்ன சொல்வதென்னும் நாணத்துடன், திரும்பவும் பூவுலகில் வந்தடைந்தனர். ஆகாயத்திசென்ற பிரமாவாகிய அன்ன மானது கண்ணுதலின் முடியிலுள்ள கங்கையில் மூழ்க நினைத்துச் செல்வதைப்போல் சூரிய மண்டல முதலிய வுலகங்களை யெல்லாங் கடந்துபோய் மாயனடியைக் கண்டு வருவான் நாமும் முடியைக்கண்டு சென்றால் அவனுக்கு நிகராவோமென்று நினைந்து ஆயிரந்தேவவருடம் வரையிலும் மேலண்டத்தி லேறிச்சென்றும்

சிவபெருமானது மார்புவரையிலுங்கூடச் செல்வதற்கு முடியாதவனாய்ச் சிறகுகளெல்லாம் வருந்தி இளைத்தவனாய், அப்பாலாகாயத்திற் செல்லுஞ் செயலொழிந்து விஷ்ணுவின் செய்கை எவ்வாறு முடிந்ததோ வென்று வருந்திய மனதுடன் மண்ணுலகில் வந்தார். இவர்களிருவரும் நாமே பரமென்றிச்சைகொண்டு அனேக நாள் பரியந்தம் படாத பாடுகளெல்லாம் பட்டும் தங்களிஷ்டத்தைப் பெற்றாரில்லை, எமது தலைவருடைய அடியையும் முடியையும் பூப்பட்ட * கண்ணையுடையவர்கள் போலாயினவிவர்கள் எத்தனை பாடுபட்டாலுங் காண்பார்களோ? காணப்பெறாதவர்களாகிய இருவரும் அங்குவந்து கூடித்தாங்கள் குறித்த அடியையும் முடியையுங்காண்கிலாமையை முன்காணத்தொடங்கிய காலத்தில் பொலிவுபெற்றிருந்த தத்தம் முகம் வாட்டமுற்றிருத்தலாலும், சிந்தையின்கணின்று உந்துகின்ற நாணமானது இருவரிடத்தும் ஒத்திருத்தலாலும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளாமலே அறிந்துகொண்டு மனத்திலெழுந்த அகந்தையைச்சிந்தி யொழிந்தனர்.

பின்னேமயக்கமாதிய அகந்தையொழியவே எமது பரமசிவத்தினருள் கிஞ்சித்து வந்தடைந்தது அதுவடைந்தமையால் இருவரும் தங்களிடத்துண்டாகிய

---

* பூபட்டகண்=பூவாகிய ஆசனம் உடையார் என்று பிரமனுக்கும், பூவை யொத்த கண்ணையுடையார் என்று விஷ்ணுவிற்கும் கோள்க.

மயக்கத்தினின்று நீங்கி இந்த வற்புதமாகிய தாணுவா
னது நமக்குத் தலைவராய் அனுக்கிரகஞ் செய்கின்ற
நெற்றிக்கண்ணனது திருவுருவமோ வென்று சிந்தித்
தார்கள். அச்சயத்தில் ஞானநாயகராகிய சிவபெருமா
ன்மணியினிடத் தாடுகின்ற வொளியைப்போல அந்த
அக்கினி ஸ்தம்பத்தினடுவில் மான்மழு விளங்கிய கர
ங்களும் திருமார்பமும் சந்திரகிரணம்போன்ற புன்
னகைபொருந்திய திருமுகமும் விளங்கும்படிப் பிர
சன்னராய் நின்றனர். நின்ற அப்போது அயன்மாலி
ருவரும் கண்டத்திற் றரித்த நீலமும் மார்பிற்பொருந்
திய சிரமாலையையுங் கண்டு உள்ளம் நடுக்கங்கொண்டு
நாணமு மச்சமு முடனே யுதிக்க; அச்சிவபெருமான்
றிருவடியிற்றங்கள் சிரம் பொருந்தும்படி விழுந்தார்
கள். இவ்வண்ணம் விழுந்தவர்களைப் பராபரன் பார்
த்துப் பயப்படவேண்டா மெழுந்திரு மென்றியம்ப,
கும்பிட்ட கரத்துட னிருவரு மெழுந்து நின்று, தங்
களுக்குத்தெரிந்த விதமெல்லாஞ் சொல்லித்துதித்து,
அறிவிலிகளாகிய யாங்களுன்னைப் பரமென்றறியாமற்
செய்த குற்றங்களை நீக்கியருள் செயவா யென்றுரை
க்க, மங்கைபங்கன் கூறுகின்றார் :—" உங்களை நாம் சி
ருட்டித்து ஆக்கல் காத்தலென்கிற விருதொழிலையுங்
கொடுத்து சலத்தோடுசேர்ந்த வெப்பத்தைப்போல்
உங்களறிவினிடத்திற் பொருந்தியும் உமையவளோ
டுந் திருவுருவங்கொண்டு வேறாகியும் இருக்கும் எம்
மைநீங்கள் மறந்து, உங்களையே பரமென நினைந்து
யுத்தஞ்செய் திளைத்தீர்கள். நீங்கள் நம்மையே பர

மென்று நினையாமல் யுத்தஞ்செய்த பாவமானது உம்மைவிட்டு நீங்கி உங்கள் பதவியை முன்போ லடையும்படி ஆவல்கொண்டு திருக்கூவமென்னுஞ் க்ஷேத்திரத்தை யடைந்து, நமது வடிவமாகிய சிவ லிங்கத்தை நன்ருக ஸ்தாபித்து அர்ச்சியுங்களென் றருளி'' இன்னமுங்கூறுகின்ருர். "விபூதிருத்திராட் சமணிந்து விளங்காநின்ற நமது சொருபமென்று ரைக்கப்பட்ட லிங்கபூசனையைச் செய்யுங்குணமு டையவர்களை நாமாகவேயறிபவர் நீங்காத பேரின்பத் தையுடைய உண்மையான தேவர்கள். அவர்களைநமக் குவேருக வறிபவர்கள் கொடுந்துன்பத்தைவிட்டு நீங் காத கொடியநரகர்கள். கலைக்கியானங்க ளெல்லாம றிந்தவராஞலும் நாமகிழும் பூசனையைக்கருதிச்செய் யாத நிலைமையையுடையவர்கள் ஒன்றையு மறியாத வர்களே. அவ்விலிங்கபூசனையைச் செய்பவர்கள் உல கின்கண் ஒன்றையு முணராதவர்களாஞலும் அவர் கள் எல்லாமறிந்தவர்களே யாவார். மானிடர்களில் நீசர்களாயிருந்தாலும் சிவலிங்கத்தினிடத்தில் அன் போடு நம்மைப்பூசனைசெப்பவர்கள் தேவர்களைப்பார் க்கிலும் மிகமேலானவர்களேயாவர். அப்பூசனையைப் புரியாதவர்கள் தேவர்களிலுஞ் சிறந்தவராஞலும் புலையர்களேயாவார்கள். இதுசத்தியவசனமேயாம். இ லிங்கபூசனையைச்செய்பவன் எக்குலத்திற்பிறந்தவஞ யினும் அவனை நாமேயென்று புகழ்ந்து வந்தனைசெய் பவர்கள் எல்லாவற்றிற்கு மேலாகவிளங்கும் நமதுபத வியைப் பெறுவார்கள்; அவன்குலத்தை நினைந்து

அவனை இகழ்ச்சிசெய்யும் புல்லர்கள் நீசராகி நரகில் வீழ்ந்து அப்பாதையைக் கடக்கமாட்டார்கள் என்றருளிச்செய்து சிவபெருமான் அந்தத்தாணுவில்மறைந்தருளினர். அதனைக்கேட்டமாலும் அயனுஞ் சந்தோடமிகுந்து சம்புவின் வசனங்களை நினைந்து திருக்கூவநகரத்தை யடைந்து சிவலிங்கத்தை ஸ்தாபித்து வாசனை பொருந்திய மலர் மஞ்சனங்களைக்கொண்டு வழிபட்டு, வினைகளையெல்லாம் நீக்குவதும் சிவஞானத்தை விளைப்பதும் பரமபரிசுத்தனாகிய சிவபெருமான் பிரியத்துட னெழுந்தருளியிருப்பதும் அக்கூவநகர மாதலின் சொற்பனத்திலுங்கூட அந்த நகரத்தைவிட்டு நீங்கக்கூடாதென்று நினைந்து அங்கே விற்கோலநாதரை வணங்கி வசித்திருந்தனர். மாலும் நான்முகக்கடவுளும் வழிபட்ட விற்கோலநாதரைத் தரிசித்தவர் பன்னிரண்டு கோடி மூல லிங்கங்களை முறையாகச் சென்று ஒழுக்கத்துடன் தரிசித்தடையும் பலனை யடைவார்கள். அன்றியுந் திக்கஜத்தைப்போன்ற மதயானையையழித்த திருவிற்கோலநாதருடைய திருநாமங்கள் பலவுள்ளன. அவைகளை ஸ்மரித்த உடன்பிறப்பிற்செலுத்து மிருவினைகளுமப்போதே நீங்கிவிடும். அவற்றிற் சில திருநாமங்களைச் சொல்லப்புகின், இரட்சர், தியாகர், சந்ததாரர், (அடியவர்களை சமுசாரபயத்தினின்று நீக்கி நன்குகாத்தவர்) வளர்சடைக்கூத்தர், (தீர்க்கசடாநிருத்தர்) ஜகநாதர், சர்வகர்த்தர், அஞ்சனபகண்டர், (விடத்தால் அஞ்சனம்போலுங் காந்திபெற்ற கண்டத்தையுடைய

வர்) கிலாங்கினர், (கலிகால கிலேசத்தைநீக்கி யருளி னவர்) புவனநாயகர், (அசுரர்களைமாய்த்துப் புவனங் களைக்காத்தவர்) திரிபுரக்னர், (திரிபுரத்தையழித்த வர்) அப்பிரதிஷ்டர், பிரதிட்டையல்லாதவர், சுய ம்பு) கூவநாதர், (கூபரநாதர்) செந்நெல்வைத்தவர். என்று சொல்லப்படுவதாகும். என்றிப்பெருமைவாய் ந்த பன்னிரண்டு பெயர்களையுஞ் சொல்பவர்களும் இவற்றிலொரு பெயரைத் தங்கள் புத்திரனுக் கிடுப வர்களும் உலகத்திலுண்மையாய்ப் போகங்களை யனு பவித்து முடிவில் பரமசிவத்தின் பாதத்தையு மடை வார்களென்று கூவநகரத்திற்குத் தலைவராகிய பெரு மானுடைய பெரும்புகழை யாவலுடன் சூதமுனி வர் நைமிசாரணிய வாசிகளுக் கோதியருளினர்.

அடிமுடிதேடியசருக்கம் முற்றிற்று.

செந்நெல்வைத்த சருக்கம்.

குற்றமற்ற தவத்தினையுடைய முனிவர்கள் மிக்க மகிட்சியினாற் றிரும்பவும் அச்சூதமுனிவர் திருவடி யையவணங்கி, ஐயனே! வில்போலும் அழகிய நெற்றி யையுடைய உமாதேவியை இடப்பாகத்தில் வைத்த சிவபெருமானுக்குச் 'செந்நெல்வைத்தவ' னென்னும் பெயர் எம்முறைமையால்வந்தது அதையெங்களுக்கு ரைப்பாயென்றுகேட்க, சூதமுனிவர்கூறுகின்றார் :—

பூர்வத்தில் அக்கூவமாநகரத்தில் காமவெகுளி மயக்கமென்னு முக்குற்றங்களை நீக்கினவரும், அற்பவழிகளிற்செல்லும் ஐம்புலன்களைத் தடுத்தவரும், நித்யவஸ்துவின் விவேகத்தால் அநித்தியவஸ்துவி னிலையையுணர்ந்தவரும் சிவபெருமானிடத்தி லன்புடைமையை அடியார்களிடங் காண்பிப்பவரும் ஆகிய தருமசீல ரென்னும் பெயர்வாய்ந்த வோரந்தணரிருந்தார். தருமமே உடலாகவுஞ் சிவபிரானிடத்திலுள்ள அன்பே யுயிராகவும், வந்து உதித்ததை யொத்தவர் ; நன்மார்க்த்திற்கிடைத்த செல்வத்தை யுடையவர், விற்கோலநாதருடைய பாதத்தைத் திரிகாலங்களிலுஞ் சென்று வந்தனைசெய்து அவரடியார்களுக்கு அறுசுவையுடன் கூடிய அன்னத்தை யன்போடுமளித்து அதிலெஞ்சியதைப்புசித்து எமக்குப் பிரயோசன மிதுதானென்று நடந்து வருநாளில், குற்றமற்ற அத்தருமசீலர் அடியார்களுக்கீயுங் கொடைத்தன்மையைப் பார்த்து மனதில் வெட்கமடைந்தோ, அன்றி அவர்மேன்மையை யுலகத்திற் பிரசித்தப்படுத்தவோ மழை பெய்யாமல் மேகங்களெல்லாமோர்பக்க மொதுங்கிப்போயின. அதனால் அறிவைப் பேதிக்கும் பசிநோயானது அதிகரிக்கவே பெருமிதமிழந்து யாவரும்வருந்தினர்கள். அத்தன்மையாகிய பஞ்சகாலத்தில் தரும சீலரானவர் தன்னிடம் வரப்பட்ட தவசிகளுக்கெல்லாம் நல்லவகைகளோடு நல்ல சுவையுடன், அன்னம் அளித்ததனால் அந்நெறியினால்வந்த பிரயோசனமொன்றே அவர்பால் நின்றது,

அவர் அடைந்திருந்த செல்வமில்லாமற் போயிற்று. நெடுநாள்தம்மிடம் பழகியிருந்த செல்வமெல்லாம் குலையின்றவாழையைப்போலாக, கற்பிற்குக்கூறிய அளவல்லாமல் மேம்படும் அளவில்நடக்கவல்ல அழகின்மிக்கமனைவியார் ஆபரணங்கள் முழுமையும் விற்று, அடியார்களுக்கன்புடன் விருந்து செய்வித்தார். வீட்டிலுள்ளவைகள் யாவுஞ் செலவாய்விட வேறே யாதொரு செயலு மின்றி இனியடியார்களுக்கு அமுது செய்விக்க அந்தோ! யான் யாது செய்வேனென்று நடுங்கி, யாசக மெடுத்தாயினும் அடியார்களுக்க முது படைத்து எஞ்சியதையுண்பேனென்று மனந்துணிந்து,எண்ணியபடியே நெல்லையாசித்துக்கொண்டுவந்து சிவனடியார்க்குத் திருவமுதளித்து வந்தனர். இவ்வண்ணம் நடத்திவருந்நாளிலே உலகில் வறுமையானது மிகவும் அதிகரிக்க அதனல் சோர்படைந்து நெற்பிக்ஷையும் கொடுப்பவர்களில்லாமல் எட்டுநாள்வரையுமெங்குமுழன்றும் ஒன்றுங்கிடைக்கப்பெருமையால் திரும்பிவந்து மிகுந்த பசிநோயோடு தன்மனைவியுடன் வருந்தி தேகத்தளர்ச்சி யடைந்திருந்தார். அப்போதவர் மனைவியார் நாயகனுடைய தேகமெலிவைப்பார்க்குந்தோறும் மனங்குழைந்து கண்ணீர் வெள்ளமாக வோடப்பெருமூச்சு விட்டு என் செய்வோமென்னுந்துன்பம் மனத்தில் மிகுந்துதோன்ற, நெருப்பிலிட்ட மெழுகைப் போலுருகி இது முன் செய்த தீவினையோ வென்றெண்ணி வருந்தினர். அப்போது தரும சீலர் தன் தேகந்தளர்ந்தும் மனந்தளராமற் போய் நதியில்

முன்பு போற் சென்று மூழ்கிப்புட்பமுந் திருமஞ்சன தீர்த்தமும் எடுத்துக் கொண்டுவந்து திருவிற் கோல நாதருக் கபிடேகஞ் செய்து, அர்ச்சித்துத் துதித்து மெல்ல ஆலயத்தைவிட்டு நீங்கித் தம்மில்லத்தில் வந்திளைத்திருந்தனர். இவ்வாறு தரும சீலர் எட்டு நாள் வரைக்கும் உணவு ஒன்று மின்றித்தன் தேகந்தளர்ந்து ஒன்பதாநாளுஞ் சிவபிரானைப் பூசித்துத் தன் மனைக்கு வருகின்றவர், தேகஞ் சோர்ந்து மைதீட்டியகுழலையுடைய மனைவியார் முகத்திலறைந்துக் கொண்டழும்படி வீட்டின் பக்கத்தில் வந்து வீழ்ந்தனர். அச்சமயத்தில் சிவனடியாரொருவர் எங்கும் உணவு கிடையாமற்றேகந்துவண்டு கண்களுமுள்ளே குழிந்து உதடெல்லா முலர்ந்து வாடிய முகத்தோடு வாசலில் வந்து நின்றுக்கொண்டு வினைகளெல்லா நீங்கினவர்களே! நான் மிக்கபசியோடும் வந்தேன் என்றார். அப்போதவ்வடியாருரைத்தவார்த்தையானது அக்கினியிற் காய்ந்த வேலாயுதத்தைப் புண்ணின்றுளையிற் சொருகியதைப்போற் றன்செவியின் வழியாகச் சென்று நெஞ்சத்தையுண்டிட எழுந்து போய்த்தன் மனையாட்டியுடன் வந்து சிவனடியாரை வணங்கித் தமது இல்லத்தில் அழைத்துப் போய் ஓராசனத்திலிருத்தி, அவர்தேகம் உணவில்லாமல் சோர்வடைந்திருப்பதைப் பார்த்து, வருந்தி ஆஹா நான் கெட்டேன், சிவனடியார் வருந்தியிருக்கும் வண்ணம் பார்த்தேனே யினியென்ன செய்வேனென்று இரண்டு கண்களினின்றும் நீரொழுக அக்கினியிற் பட்ட அரக்

னும் மூன்று மடங்கதிகமாக மனமுருகி நைந்து மறுபடியும் வந்த சிவனடியாருடைய தேகத்தளர்ச்சி யைக்கண்டு சகிக்க முடியாமல் இன்னமும் இந்த நகரமுற்றிலுஞ் சென்று யாசித்துப் பார்ப்பேன், செந் நெல் கிடைக்காமற் போனால் உயிரை விடுவேனெ ன்று மனையாட்டிக்குச் சொல்லி நிகரில்லாத அன்ப ரானவர் தம்மிடத்துள்ள அன்பின் வலிமையைக் கொண்டு சென்று கொன்றை மாலை சூடிய குழக னுக்கு நல்லவராகிய அடியார் பசியினால் இளைத்தா ரென்று வருந்துகின்ற மனதோடும் அங்கங்கே யுட் கார்ந்து எழுந்து மெல்ல மெல்ல வீடுகடோறும் பிச்சைக்குச்சென்று தன்றேக வருத்தத்தைக் கிஞ் சித்தேனும் நினைக்காதவரா யிருந்தனர். அவருயிரும் அன்பே பற்றுக்கோடாய் போகாமல் நின்றது. அப் போது திருவிற்கோல நாதருடைய திருவருளால் இருநாழி நெல் கிடைத்தது. கிடைக்கவே தரும சிலர்தமக்கு முன்னிருந்த செல்வத்தைப் பார்க்கிலும் மூன்று பங்கதிகங் கிடைத்தாற் போல் மிக்க மகிழ் வடைந்து திரும்பிச்சென்றனர். இவ்வாறு தரும சிலர் வருவதற்குள் அவர் மனைவியார் வந்த சிவனடியார் சோர்வைக்கண்டு உண்டாகுந் துக்கமோர் பக்கம் வருத்தவும், நாயகனுடைய தேகத்தளர்ச்சியை நினைக்கும் தோறும் எழுந்துயரமோர் பக்கம் அதிகப் படவும், அழுதழுதிரங்கி மார்பிலடித்துக்கொண்டு வி ழுவார்! இப்படித்துன்பக் கடலின் மூழ்கி வருந்துகின் றவர்திருத்தொண்டர் பசித்திருக்கின்றாரென்று செந்

நெற்கொண்டு வருகின்ற தன்னுயகனைக் கண்டு எதி
ரே வந்து வணங்கி, அச்செங்நெல்லை வாங்கிக்குத்திப்
பக்குவமாகத் திருவமுதாக்கிப் படைக்கவேண்டுமெ
ன்று மனதிற் பொருந்திய வன்பினுல் தன்றேகத்
தளர்ச்சியையும் நினையாமல் விரைவாக அன்னஞ்
சமைத்து, பின்னர் நாயகனைப் பார்த்துத் திருவமு
தாயிற்றென்று கூறி நமது துன்ப நீங்கும்படிவந்த
சிவனடியாருக்குத் திருவமுது செய்விப்பீரென்று
செப்பினர். அப்போது தருமசீலர் அடியாரை வண
ங்கி அமுது செய்வித்து தேவாமிர்தத்தை யெதிரே
கண்டவரைப்போல் அதிக மகிழ்ச்சியை யடைந்
தார். வந்த சிவனடியார் வயிருரவுண்டு மனக்களிப்
புடனேக, அவர் பின்னே தருமசீலர் சென்று விருப்
புடன் வணங்கி விடைபெற்றுத்திரும்பி வந்து அடி
யவருண்ட சேடத்தை மனையாளுடன் உண்ணச்
செல்லுஞ் சமயத்தில் (வந்தவருடைய தன்மையை
யுரைக்கின்ருேம்) தருமசீலருடைய பக்தியை யுல
கின் கண் விளங்கும்படிச் செய்யும் வண்ணம் என்
றும் அழிவில்லாத வருணிறைந்த கூவ நாயகர் திரு
வுள்ளத்தில் நினைந்து தந்தம்பொருந்திய யானைத்
தோலைப் போர்த்தருளிய திருவுருவத்தை மறைத்து
பழைய வடிபார்களைப்போல் ஒரு கிழவடிவங்கொண்
டனர். அவ்வுருவம் எத்தன்மைத்தெனின் முன்னே
தன்னைத் தஞ்சமாக வடைந்த காரைக்காலம்மையா
ரை தன்னைப்பெற்றத் தாயாரை யழைப்பது போல்
வாரும் அம்மையே யென்றழைத்த சொல்லானது

உண்மையாக அந்த காரைக்காலம்மையார் வடிவமே யென்று கண்டோர் சொல்லும்படித் திருமேனியிற் றசைகளெல்லா நீங்கி என்பெலாந் தோன்றவும் கன சபையில் நிர்த்தனஞ் செய்யும் பாத தாமரை தளர் நடையைக் கொள்ளவும். தன்னை விற்கோல நாதரென் கின்ற பெயரைப் புதுப்பிக்க வில்லைப்போற் றேகம் வளையப்பெற்று ஓர் மூங்கிற்றண்டை யூன்றிக்கொண்டு உமையவள் பார்த்துப் பரிகாசஞ்செய்து நகைக்கும்படி இத்தன்மையான திருவுருவமுடையவராய்த் தருமசீலருடைய வீட்டிற்குச்சென்று, நாம் பசியினு லிளைத்தனம் ஒருபிடியன்ன மிடுவீர்களானல் உமக்கு மிக்க புண்ணிய மாகுமென்று சிவபெருமான் உரைத்தனன் மகாதேவருரைத்த அந்த வார்த்தையக் கேட்டவுடன் அன்னமுண்பதற்காகவிருந்த தருமசீலரும்அவர் மனைவியாரும் இவ்வடியார் நாமுண்பதற்கு முன்னே வந்தது பூர்வத்தில் நாம் செய்த தவத்தின் வலிமை போலுமென்று மனமகிழ்ந்தெழுந்து போய் எம்பிரான் இளைத்து நிற்பதைக்கண்டு மனஞ் சகியாமல் நெக்குவிட்டுருகி வருத்த மேலிட்டிருகண்களிலு நீர் சொரியும்படி, அன்போடும் வணங்கி, கிரகத்தினுள்ளே யழைத்துக் கொண்டுபோய், அப்பெரியவரை ஓராசனத்தி லிருக்கச்செய்து, இங்கே நாமுய்யும் வண்ணம் வந்தவர்க்கு நமக்குள்ள வன்னத்தைப் படைப்பாயென்று மனைவியாருக்கேவ, அவர் மனமகிழ்ச்சியுடன் படைத்தனர். அவ்வாறு படைத்தவுடன் நமது தலைவர் எட்டு நாளாக நீங்கள் பட்டினியோடு மிக

வும் வருந்தி திருத்தொண்டு செய்யு முறுதியிற்றவறு தலில்லாத வுங்கள் பக்திக்கு அளவில்லை யென்று உடனே மறைந்து கூறுகின்றார்:— இந்தப் பஞ்ச கால நீங்கும் வரைக்கும் உங்களுக்கு நம்முடைய ஆலயத்திலனுதினமும் ஒருகுட நிறைந்த செங் நெல்லை முன்வைக்கின்றோம் அதைக்கொள்ளக்கடவீ ரென்று அமலன் கூறினர். தருமசீலர் அதைக்கேட்டு மகிழ்ச்சியோடுங் கைகளை சிரசிற்குவித்துக்கொண்டு இரண்டு கண்களிலும் ஆநந்த பாஷ்பம் சொரிய கடை யனுகியவென்னையும் சித்தத்துட் கொண்டு வந்தருள் செய்த கண்ணுதலோ வென்று ஆலயத்தையடைந்து, பக்திகாமியாகிய விற்கோலநாதரையடுத்து வணங்கி, யெழும்போது அங்கே யொருகுடநிரம்பிய செங்நெல் லைக் கண்டு மனமகிழ்ந்து எடுத்துக் கொண்டு போயி னர். அங்கே இங்ஙனம் கொண்டு போகப்பட்ட நெல் லினை நல்லமுதாக்கி யளவற்ற வடியார்களுண்ணும்படி படைத்து, எஞ்சியத்தை மனைவியோடு முண்டு களிப் படைந்திருந்தார். இவ்வாறு அனுதினமும் பெருமான் ஆலயத்தில்வைக்கப்படுகின்ற செங்நெல்லைக்கொண்டு வருகின்ற வடியார்களெல்லா முண்ணும்படியறுசுவை யோடமுது செய்வித்து, உத்தமராகிய தருமசீலர் சிவபதவியைப் பெற்றனர். தருமசீலருக்குச் செங் நெல்வைத்ததனுல் செங்நெவைத்தவரென்னும் பெய ரைச் சிவபெருமானடைந்தனர். அந்தப் பெயரை விருப்பத்துடன் சொல்பவர் அழிவற்ற செல்வத்தி லுங் கல்வியிலும் விருத்தியடைவர்; மீண்டும் பே

ரின்ப வீட்டையும் பெறுவர். அந்தவிற்கோல நாதர் வெள்ளியங்கிரியிற் பிரதோஷ வேளையிற் சந்தியா நிருத்தமும்,கனகசபையிலாநந்த நிருத்தமும்,திருவாலங்காட்டிற் சண்ட தாண்டவமும், திருக்கூவபுரத்திற்றருக்கமாதென்று வந்த சத்தியானவளனுதினமுந் தெரிசிக்கும் வண்ணம் இரட்சா நடனமுஞ் செய்தருளுவர். இக்கூவமாநகரத்திற்றருக்கமாதா வென்னும் பெயரையுடையவள் துதிக்க நடஞ்செய்கின்ற பெருமானுடைய நாமம் வளர் சடைக் கூத்தர் ; அப்பரமருடைய பாதகமலங்களை ஓர் பகலிற் சென்று தரிசித்தவர்கள் இம்மையில் அளவற்ற கல்வியையும் நீங்காத செல்வதையும் பெரும்புகழையும் பெற்று மறுமையிற் சிவகதியையுமடைவார்கள்.

எமது பரமசிவம் நடனஞ்செய்கின்ற கூவமாநகரத்தில் வசிப்பவர்களுக்கு ஓர்தினையளவு செம்பொனளித்தல் காசிமுதலிய தலங்களில் அந்தணருக்காயிரம் பொன்னளித்த பலனுக்கு நிகராகும், சிவனடியார்கரத்தில் அப்பொன்னை யளித்தால் அதன் ஒப்பற்ற பலனைச்சொல்லவும் முடியுமோ? கூவநகரத்திலொருபிடியன்னம் அந்தணருக்களித்தால் மும்மூர்த்திகளு மனமகிழும்படி நூறுயாகங்களைச் செய்த பலன் அப்போதே கிடைக்கும். தவசிகளுக்கு ஒரு பகல் வயிறுரவத்தலத்தி லன்னமிட்டவர் பிரமவிஷ்ணுவிவர்கள் பதவிமாத்திரமோ அடைவர், சிவபதவியையும் பெறுவார்கள். கூவநகரத்திற் றவசிகளுக்கு

மடங்கட்டிக்கொடுப்பவர்கள் தங்களிடத்தி லுள்ளம டமையி னின்று நீங்கிப்பேரின்ப வீடடைவார்கள். அழியப்பட்ட பதவிகளை எப்போது மடையமாட் டார்கள். அக்கூவநகரத்தில் விருப்புடன் ஓர் சிவனடி யார்க்கு உள்ளங்கையளவு விளைநிலமாகிலும் கொடுத் தவர் எக்காலமும் கைலைமலையில் நிலைபெற்றிருப்பர். இக்கூவநகரத்தில் தவசிகட்கு ஓர்வஸ்திரமளித்தால் அதிலிருக்கும் இழை யொவ்வொன்றிற்கும் நூறு கோடி தேவவருடம் வரையில், சிவலோகத்திலிரு ந்து பின்னர் சிவபிரான் திருவடியை யடைவார்கள். இடபம், ஒன்றையங்கே தானஞ்செய்தால் அதன்ப லனைச் சொல்வதற்கரிதேயாகும். கொன்றைசூடிய கொற்றவன் வீற்றிருக்கும் அக்கூவநகரத்திற்செய்யு மொவ்வொரு தருமமும் அநந்தங்கோடிகளாய்ப் பெ ருகியளவற்ற பலனைத்தருமென்று அதனியல்பையெ ல்லாமுனிவர்கள் மகிழும்படி சூதமுனிவரியம்பினர்.

செங்நெல்வைத்தசருக்கம் முற்றிற்று.

தாருகன்வதைச் சருக்கம்.

விசாலமகிய சொரூபஞானத்தையுடைய சூதமுனி வர்கூவமாநகரின் சிறப்பெல்லா மெடுத்துரைத்தலும், ஏனைய முனிவர்கள்கேட்டு மனமகிழ்ந்து உச்சியிற் கைகளைக்குவித்துச் சொல்லுவாராயினர். முன்னே நீர் தருக்கமாதென்று, உரைத்தீரோ, யவளுற்பத்தி

யெவ்விதம்? இக்கூவநகரத்தில் நடனஞ்செய்ய வந்த காரணமென்ன? இவற்றினை யுரைத்தருளு மென்று கேட்க, சூதரியம்புகின்றார். தருமங்களெல்லா மழியவும் உலகிலுள்ள உயிர்களெல்லாந் துன்பத்தின் மூழ்கவும் முன்னாளிற்றாருக னென்னுமோ ரசுரனுற்பத்தியானன். இவனே ஆகாயத்தை யளாவியதன்தேகத்தினின்றுஞ் சிந்துகின்ற இரத்தத்துளிகளெல்லாந்தன்னைப்போ லுருவங்கொண்டெழும்படியாகவும், ஏனையோர்களா லழியாமலிருக்கும் வண்ணமும், தவஞ்செய்து வரம்பெற்றவன்; அன்றியும் அட்டதிக்குப்பாலகரையும் பாதலத்திலுள்ளவர்களையும் அந்தரவாசிகளையுந் தனது சேனைத்தலைவர்களை விடுத்துச்செயங்கொண்டு அநுதினமும் ஏவல் கொள்ளப்பட்டவன்; திக்குயானைகளை யொவ்வொன்றாகத் தூதரைவிடுத்துக் கொணர்வித்து அவற்றிலேறிக்கொண்டு உலகத்தையெல்லாம் ஓர்வீதிக்குச் சமமாகக் கருதியுலாவிவந்து பின்னரவற்றை நீக்குவான். சூரியன்தேரிற்கட்டிய ஸப்தவாம் புரவிகளில் ஒளிபொருந்திய சதங்கையினையணிந்த தன்பிள்ளையை ஞாயிறு முதலேழுகிழமைகளிலும் ஒவ்வொருகிழமைக்கும் ஒவ்வொரு குதிரையின்மீதே முறையாக வேற்றி வீதியிலுலாவிவரச்செய்து பின்னர் அவற்றினை விட்டுவிடுவான். தன்புறங்காலைக்கொண்டு கடல்நீர்வறளும்படி யொரேயெற்றாக வெற்றுவான். மகாமேருவுடனின்னுஞ் சிலமலைகளைப் பந்தைப்போ லெடுத்துவிளையாடும் வலிமையுள்ளவன். சங்கநிதி பதுமநிதி

கள் தன்னுடைய தடாகத்தில் விளங்குகின்ற சங்கு களோடுந் தாமரைமலர்களோடுஞ் சமமாக விருக்க வும் காமதேனுவானது தன்பசுக்கூட்டங்களி லுள்ள வோர்பசுவாகவும் பஞ்சதருக்களோடுங்கூடிய விந்திர னுடைய சோலையே தனக்குஞ் சோலையாகவும் வகி த்தவன், சிவபிரான் வில்லாகிய மேருவிலுள்ளபொன் னைக்கவர்ந்து அதற்கு நாணாகிய ஆதிசேடன் முடிக ளிலுள்ள மணிகளையுஞ் சேர்த்துச் செய்யப்பட்ட புதியவாபரணத்தை யணிந்த மாட்சிமையுடையவன். தேவப்பெண்களைப் பிடித்துவந்து அசுரப்பெண்க ளுக்கெல்லா மேவல்செய்யவைத்து அவர்களைச்சிறை யிலடைத்து வருந்தச்செய்து அணங்கியர் (வருந் தப்பட்டவர்) என்னும் பெயரையுமிட்டவன். இத்தா ருகனே, தான்வீற்றிருக்குஞ் சபையில் ஆதிசேடனு டையவாயிரந்தலைகளே யலங்கரிக்கப்பட்ட தம்பங்க ளாகவும். அச்சேடன் சிரங்களிலுள்ள மணிகளே யிரு ளையோட்டுகின்ற தீபங்களாகவு மிலங்க வைத்தவன். தன்றிருவோலக்க மண்டபத்திற் காலமறிந்து வராத தேவர்களைத் தூதுவரை விடுத்து விலங்கிட்டுச்சிறை செய்யும் வலிமையுடையவன், சொற்பனத்திலு மிந் திரனிவனைக்கண்டால் மனநடுங்கி வாய்குழறிவிரை ந்து நினைவடைந்து ஓர்பகலெல்லாம் வருந்துவதை விட்டு நீங்கான். உலகத்திலுள்ள வுயிர்களுக்கெல்லா மொருங்கேவரப்பட்ட வியாதியைப்போல வவதரித் தவந்தத்தாருகனால் தேவதார்ச்சனையுந் தருமமுங் கலைக்கியானங்களும் யாகங்களுந் தவங்களும் முற்

றுங்குலைந்தன. அவ்வசுரனுடைய ஆக்கினை யிலகப்பட்டுத் துன்பப்படுங்காலத்தி லோர்நாள் தேவர்கள் விஷ்ணு பிரமா விந்திரன் முதலிவர்கள் ஓர் பக்கத்திற்கூடி வசித்துத் தங்கள் துயருந்தாருகனுயிருமொருங்கே யழியத்தக்க காலஞ் சம்பவித்ததனால் இனிநாம் சிவபெருமானைச் சரணடைந்தால் நம்முடைய துன்பநீங்கு மென்று துணிந்தார்கள். இங்ஙனம் துணிந்த தேவர்கள் கைலைமலையை யடைந்து நந்திதேவர் பாதத்தைத் தஞ்சமாக வடைந்து அவரைவணங்கி இவ்வாறியம்பு கின்றனர்:—ஓ நந்தியெம்பெருமானே! எங்களுக்குத் தாருகனாற் சம்பவித்த துன்பத்தைச் சிவபெருமானுக்குரைத்து அதைநீக்கிக்கொள்ளும்படி வந்தோம், நீ சிவபெருமான் சன்னிதிக்கு எங்களை விடுத்தருளுவா யென்று வேண்டினார்கள். அப்போது தமக்குத்தாமே சமமானவரும் சிவகுருவானவரும் என்னை யாட்கொண்டவருமாகிய நந்திதேவர் அனுமதிகொடுக்கச் சிவபிரான் வீற்றிருக்குமிடத்திற் றேவர்களெல்லாஞ் சென்றனர். மணிகள் பதித்த மண்டபத்தினடுவிலிருக்குஞ் சிங்காசனத்தின்மீது கோடிசூரியர்க ளொன்ருய்த் திரண்டமைந்ததைப்போல் வீற்றிருக்குங் கருணைக்கடலைக்கண்டு வணங்கிக் கண்கள் நீரைச்சொரிய தேக நடுங்க நெருப்பிலிட்ட வரக்கைப்போல் நெஞ்சமுருகக் கொடிய துன்பமாகிய சுழலிலகப்பட்ட வடியேனுக்கும் அருளைச் சுரந்தளிக்கு மீசனைத்தங்கள்

வேண்டுகோள் பிரயோசனத்தை யடையும்படித்து திக்கின்றார்கள்:—

வானுதிகளாய் நிகழ்வாய் சரண மறைமா முடியின் பொருளே சரண, மூனுருயிரே சரணஞ் சரண முணர்விற் குணர்வே சரணஞ் சரணர், தேனுர் மொழி பங்கினனே சரணஞ்! சிவ சங்கரனே சரணஞ் சரண, மானு வமுதே சரணஞ் சரண மருளா கரனே சரணஞ் சரணம்.

மருவே மலரே சரணஞ் சரண மணியே யொளியே சரணஞ் சரணந், திருவே பொருளே சரணஞ் சரணந் தேனே யமுதே சரணஞ் சரண, மிரவே பகலே சரணஞ் சரண மெமையா ளுடையாய் சரணஞ் சரண, மருவே யுருவே சரணஞ் சரண மருளா கரனே சரணஞ்சரணம்.

என்றிவைகளைச் சொல்லித்துதித்து இருகரங்களையுங்குவித்து நின்றவர்களைக் கொன்றையணிந்த குழகன்பார்த்து, தீயிற்பட்ட தாமரை மலரைப்போன் முகம் புலர்ந்த வுங்களுக்குவந்த நீங்காத்துயரமென்ன வதையுரையுங்க ளென்ருர். பெருமா னிவ்வண்ணங்கேட்க விஷ்ணு விளம்புவார், நீக்கமின்றி யெல்லாப் பொருள்களிலும் இருந்தியக்குகின்ற வெந்தையே! நீயெங்கள் மனதிலுள்ள துயரத்தை யறியாதவர்போல் வினவியது யாங்களுய்யும் வண்ணஞ் செய்யுங் கருணையென்று துதித்துச் சொல்வாராயினர். தாருகனென்னு மோரசுர னுற்பத்தியாகி உலகில் வேதம் யாகம் தருமம் தானம் தவங்கள் இவையெல்லாமழிந்தன. அமராகையால் (மரித்தலில்லாதவர்) தேவர்கள் துன்பமடைந்தும் உயிர்தரித்திரு

ந்தார்கள். கொஞ்சமேனு மனதிற்கருணையற்ற தாருகன்செய்த தீமைகளை இவ்வளவென்றியம்ப எங்களால் முடியாது. எங்கள் பெருமானே! இனியாங்கள் இயம்புவது என்ன விருக்கின்றது? தேவரீர் பாதங்கட்கேவல் செய்வதைப்போல் அவனுக்கு அநுதினமும் நாங்கள் ஏவல்செய்தோம் என்பதைவிட அந்தத்தாருகன் செய்யுந்தீங்குகள் எங்களாற் சகிக்கமுடியவில்லை. ஆதலின் உமது பாதத்தையே தஞ்சமாக நினைந்து அபயமென் றடைந்தோம், எங்களை ஆட்கொள்ளல் தேவரீர் பொறுப்பாகும்; தந்தையன்றி தநயருடைய துன்பத்தை விலக்குபவர் வேறுயாரேனு முண்டோ, * அச்சுதனென்னும் என்பெயரிலும், அமரரென்னுந் தேவர்கள் பெயரிலுமுள்ளமுதலெழுத்தாகிய அகாம் நீங்காதிருக்கும்படி பூர்வத்தில் நஞ்சைக்கண்டத்தி லடக்கியநாதனே, அந்தநஞ்சைப்பார்க்கிலுங் கொடிய தாருகன் தினமும் எங்களை வருத்துகின்றான் எப்போதும் எம்மைத்துன்பஞ்செய்யுந் தாருகனைக்கொன்று எம்முயிர் நீங்கவொட்டாதபடி எம்மையாட்கொள்ளும், அன்றேல் யாங்கள் ஒரிமைப்போதிலே மாளும்படி முன்னே

---

* அச்சுதன், அமரர் என்னும் பதங்களில் முதலெழுத்தாகிய அகரத்தை நீக்கிவிடின் முறையே சுதன் மரர், என நின்று, அழிதலையுடையவன் மறித்தலை யுடையவன், என்று பொருள்படு கின்றமையின் அவ்வகரம் நீங்கவொட்டாமல் விடத்தினையுண்டு எம்மைக்காத்த பரம்பொருளே தாருகனையும் அடக்கி எம்மைக்காப்பீர்.

எங்களைக் காக்கக் கண்டத்திலடக்கிய விடத்தை விட்டுவிடும் ஐயனே! என்று திருமாலானவர் செப்பினர். அதனைத்தனது திருச்செவியிலேற்ற சிவபிரானுக்குக் கிருபையுண்டாகி அவ்வசுரனைத் தொலைத்து அமரருடைய அல்லல்களை யெல்லாம் அகற்றுவதற்குத் திருவுள்ளங்கொண்டார். தாருகன் வரத்தையும் வலிமையையும் நினைந்து பொன்மலையை வளைத்துப்புரங்களை யெரித்த பூதநாதனாகிய சிவபெருமான் உமையவள் வதனத்தைப் பார்த்துத் தனது கண்டத்திற்றமது திருக்கரத்தை வைத்தருளினர். அங்ஙனம் வைத்தவுடனே எட்டுத்தோள்களும் இரண்டு பர்வதம்போன்ற தனங்களும் அக்கினிக்கொழுந்து போன்ற சிகையும், காதளவும் நீண்டவிடத்தையொத்த கண்களும் திறந்தவாயும், சூற்கொண்ட மேகத்தை யொத்த தேகமும், கரத்திற்பிடித்த சூலாயுதத்தோடுங் காளியானவள் தோன்றினள். மேலண்டச்சுவற்றின் முட்டப்பெற்று வளைவுற்ற முடியையும், அட்டதிக்கினெல்லைபளவும், அக்கினியைச்சொரியுங்கண்களையும், சுழலப்பெற்ற சூலாயுதத்தைத்தைத் தாங்கிய கைகளையும், உடையவளாய், ஊழிக்காலத்தில் அநந்தமேகங்கள் கர்ச்சிப்பதைப்போல் ஆர்ப்பரித்தெழுந்தாள். அக்கினிக்கு வெப்பம் இயல்பாயிருப்பதைப்போலவே இவள் கோபத்தையே யென்றுஞ் சுபாவகுணமாக வுடையவள்; தன்னைத் தஞ்சமாக வடைந்தவருக்குக் கிருபையுஞ்செய்யத்தக்கவள். அநந்தகோடி யண்டங்களைச் சிருட்டிக்கக்கூடிய தீரமே

ஞ்சமுடையவள். வலிமையில் எவ்வுலகினுந்தனக்கு நிகரற்றவள், கரியமலையினை மத்தியில் மாலைக்காலத் திற் சூழ்ந்துள்ள செவ்வானம்போல விரித்து இடுப் பில் உடுத்தப்பெற்ற சிவந்த வஸ்திரத்தை யுடைய வள், வயிரவக்கடவுளேந்திய சூலாயுதத்துக்குச் சம தையான சூலம்பிடித்தவள், சிலம்புகள் ஒலிக்குங் கால்களையுடையவள். உலகிலுள்ள வுயிர்களையெல்லா ஞ்சூலத்தி னுனியாற்குத்தி யந்தவுதிரங்களை யுண்ணு ம்படி நினைப்பவள். சமுத்திரத்தின் திண்ணிய அ லையிலே உலகமுற்றும் அழிக்கும்படி உதித்த வால காலவிடத்தி லுதித்தவளென்றால் அவ்வாலகாலத்தி ன்குணம் அவளுக்குப்பொருந்தி யிருக்கத்தக்கதன் றோ? மேகம்போ லார்ப்பரித்தெழுந்த காளியை யு மையவள் கண்டு, ஏங்கித்தன்கைவிரல் நெரித்துக் கொண்டுபோய் ஒப்புயர்வில்லாத மலரகிதரைத்தான் முன்னம் தழுவிய தழும்பில் தன்னழகியதனங்கள் பொருந்த கண்ணுதலைக்கட்டித் தழுவிக்கொண்டாள். அந்தக்காளியை விஷ்ணுவானவர் பார்த்து முன்னே நாம்சொல்லியவண்ணமே கண்டத்திலுள்ளவிடத்தை யோர்பெண்ணுகச்செய்து எங்களைவதைக்கும்படி வி டுத்தாரென்றுவருந்தி மயங்கினின்றார்; பிர்மாவுந் தே கநடுக்கங்கொண்டார்; இந்திரன்மனந்தளர்ந்தான்; அக் கினியுடல் முழுதும்வெயர்த்தான், எமன் நாவுலர்ந் தான், நிருதிதேகஞ்சோர்ந்தான்; வருணன்பயந்தான்; வாயுதிகைத்திருந்தான்; குபேரன்மூர்ச்சித்தான்; ஈசா னன் மயங்கினன், மற்றதேவர்களெல்லாம் அங்கெழு

ந்தகாளியின் கோரரூபத்தைக்கண்டு ஏங்கிக்கண்களை மூடிக்கொண்டார்கள். அப்போது காளியானவள் பிறையைமுடித்தபிஞ்சகனோடும் உமையவளையும் வணங்கி யுரைக்கின்றாள்:—“என்னைப்படைத்த பரமனே நானிங்கே செய்யும் ஏவலையியம்புவீர்; அதையுனதருளாலாற்றக்கடவேன்” என்றுரைத்தனள், அவ்வேலையில் அரனனவர் அமரர்கள்மகிழும்வண்ணம் அறைகின்றார். “தேவர்களென்றுஞ் செய்யத்தகாத வேவலைச்செய்யும்படி யெப்போது மிடரையே விளக்குந் தாருக னுயிரைக்கவர்ந்து, தேவர்களுக்குச் செல்வத்தையுதவும் பொருட்டு, உன்னைப்படைத்தோம். அந்தத் தாருகனைச் சூலத்தாற்குத்திச் சொரிகின்றவுதிரத்தைக் கபாலத்திலேற்றுப் பருகியவனுடலையும்விழுங்கக்கடவாய்” என்றறைந்தனர், அதனைக்காளியானவள்கேட்டு நாம் நினைத்த வண்ணமே கண்ணுதல் அருள் செய்தாரென்று மகிழ்ந்து ஓர்வார்த்தையுரைக்கின்றாள். நாதனே! யெளியேனுக்கவனை யுண்டுவிடுதலே பணிவிடையாகத் தந்தீர் நீரெதைக்கட்டளையிட்டீரோ வதை நானியற்றக்கடவே னென்றுரைத்துப் பரமன்பாதத்தைப் பணிந்துநின்றாள். அப்போதிவளுக்குச் சேனைகளாக வளவற்ற யோகினிக்கூட்டங்கள் அக்காளியின் வடிவிலேயே யுதித்தெழும்படி பெருமானினைந்தார். உடனே யந்தக்காளியைப் போலவே அபார உருவினைத்தாங்கி கையில் கபாலமுஞ் சூலமும் விளங்கும்படி யோகினி வெள்ளங்களிடியைப்போ லார்ப்பரித்து அவளுடலினின்றுமுற்

பத்தியாயின. அந்த யோகினிகட்கெல்லாம் சிவபிரான்சிரசிற்றரித்த விளம்பிறைபோன்ற வக்கிரதந்தங்களும், அவர்கண்டத்திலுள்ள விடத்தை யொத்த வுடல்களும், அவர்கரத்திலேந்திய அக்கினியை யொத்த கண்களும், அவர் சூலம்போன்ற மூன்றுதலைகளையுடையசூலமுந்தோன்ற; கண்ணுதலானவர் காளியைநோக்கி நீ இந்தயோகினி வெள்ளங்களுடன் சென்று, புண்ணியத்திற்குப் பகைவனுகிய தாருகனுயிரைப் போக்கித் தேவர்களுக் கருள்செய்யென்று கட்டளையிட்டனுப்பினர். உடனே காளியானவள் சங்கரனையுஞ் சாம்பவியையும் வணங்கி விடைபெற்று ஆலயத்தைவிட்டு வெளியேவந்தாள். அங்குள்ள தேவர்கள்பார்த்து மனப்பயநீங்கித்தெளிந்து சிவபிரான்திருவருளைக் கூறிமகிழ்ந்து ஒருவர்மேலொருவர் குதித்தேறிக் கரங்களைக்கொட்டிப்பாடி யிருகால்களுமாறிச் சுழன்ருடி யரன் பக்கம்வந்து எங்களுயிரைப் போக்கும்படி முன்னே யார்ப்பரித்துவந்த விடத்திலிருந்து காளியை வருவித்து அவளைக்கொண்டே யெங்களுயிரை நிலைநிறுத்தக் கட்டளையிட்டீர், உமதருளின் பெருமையை யாரறிவார்கள் என்றுத்துதித்து, அவரிடம் விடைபெற்றுக் காளியின்பக்கல்வந்துதனித்தனியே வணங்கி, யவள்முடியிற் புட்பவருடம் பொழிந்தார்கள். இவ்வாறு சொரிந்ததேவர்கள் தங்கள் தச்சனைக்கொண்டு காளிக்குத்தக்கதேரொன்றைவிரைந்து செய்துக்கொடுத்துத், தாயே! இதன் மீதிவர்ந்து எங்கள் சத்துருக்களை யழிக்கும்படிச்செ

ல்வா யென்று புகழ்ந்து நின்றனர். காளியபந்தத்தே
ரினழகைக்கண்டு அதைச்செலுத்தவோர் யோகினி
மாதையமர்த்தி, முனிவர் சயசயவென்ன வந்தத்தே
ரிற்பாய்ந்தேறித் தேரைச்செலுத்தென்றாள். சாரதி
யாகிய யோகினி யிரதத்தைத்தூண்டிவிட்டாள். அது
வாயுவைப்போல் விளங்கிச்செல்ல, அப்போது சூலா
யும் பிடித்தயோகினி வெள்ளங்கள் கடல்போலார்
ப்பரித்துச்சூழ்ந்தன அன்றியும் பூமியிலு மாகாயத்தி
லு மேகமண்டலத்திலுமின்னும் வெளியிடங்களிலும்
கடலினும் மலையினுஞ்சென்றன, உடுக்கை முரசு சங்
கு காகளம் ஊதுகொம்பு இவைகள் முதலிய வாத்தி
யங்கள் ஆதிசேடன் முடியும் பூமியு மதிரும்படிபொ
லித்தன. இவ்வாறு சேனைகள்செல்ல பூதாளிகள் ஆகா
யத்திற் செல்லுதல் இந்தப்பூமியில்வந்து என்னைக்
காலாற் பரிசிக்கக்கூடா தென்றிருந்த தேவர்கண்மு
டிமீதேறி யிமையவரென்பதை நீக்கி மானிடராகச்
செய்வேனென்று நினைத்துச் செல்லுதலை யொத்தி
ருந்தது. இன்னும் அப்பூதாளிகள் சென்று மேகங்
களையுந் திசைகளையுஞ் சூரியன் தேரையுங் குலமலை
களையுங் கடல்நீரையும் நட்சத்திரங்களையுஞ் சுவர்க்
கத்தையும் ஏனைய வுலகங்களையும் மறைத்தன. அப்
போது காளியானவள் ஆதிசேடனுடலை நெளித்த
லறும்படி யார்ப்பரித்தெழுந்து யோகினி வெள்ளங்
களோடுந் தேவகங்கை வரையிலும் ஆகாயத்திலு
யர்ந்திருக்கும் மதிலையுடைய தாருகனது நகரின்பக்
கல் சென்றடைந்தாள். இவ்வாறிவர்கள் வந்ததைத்

தூதுவர்களறிந்து ஓடித்தாருகனுடைய சபையைநா டிவணங்கி யவனுக்குக் கோபமுண்டாகும் வண்ணங் கூறுவார்:—ஐயனே! நீதேவர்களை யேவல்கொண்ட தனல் காளியென்கிற வோர் பெண்பிள்ளை யோகி னிவெள்ளங்களுடனே யுன்னோடு யுத்தஞ்செய்யவிவ் விடத்தில் வந்திருக்கின்றாளென்றனர். அந்தத் தூது வருரைத்த வார்த்தையானது தாருகனுடைய கோ பாக்கினி மூண்டெழும்படி கூறிய மந்திரத்தையொ த்திருந்தது. அவர்கூறிய வார்த்தையிற்பாதி செவியி ற்புகுமுன்னே யவன் மனதிற்கோபமூண்டது, மூக் கிற்புகையெழுந்தன, கண்கள் தீப்பொறிகளைச் சித றின. அவனுடைய கோபாக்கினி யவனறிவையேசுட் டது. இவ்வளவிலேயே யொழிந்ததோ வென்றாலோ அடுத்தவர்களையும் பந்துக்களையும் அவனையும் அழிக் கும் வரையிலும் அவியாதே விளங்கிற்று. அவன் உதட்டை யதுக்கிப்பற்களைக்கடித்து நெற்றியின்மே லேறிய புருவத்தையுடையவனுய்க் கண்களை மலர விழித்து மிக்ககோபத்துடன் மீசையை முறுக்கினு ன். கற்பகவிருட்சத்திலுள்ள பட்சிக ளெழும்படி யாகக் கால்களை யொன்றோடொன்று தாக்கி இடி வீழ்ந்தாற்போல் நகைத்து இப்போது நான்கேட்ட சொல்லானது நன்றாயிருக்கின்ற தென்றுச் சீற்றங் கொண்டு நவிலுவான்.

ஓடியால் உலகனைத்தையு மளந்த விஷ்ணுவையும் என்னேவலில் நிற்கும்படியாகச் செய்த வென்னி

டத்தில் ஓர் பெண்பிள்ளை யுத்தத்திற்கு வருவாளா ளுல் என்வெற்றி நன்ருயிருக்கின்றது; இந்திரன் முதலிய தேவர்களை வெல்லும் வலிமை யென்னி டத்திலுண்டாயிருந்தும் ஓர் மாது என்மீது யுத்தஞ் செய்யவந்தா ளென்கிற நிந்தையானது என்னுயிர் நீங்கினுலு நீங்காதன்ருே? சகலபுவனங்களிலு மென் னேடு போர்செய்பவர்களில்லாமையால் தோளினுல் யாதொரு பயனுமின்றி வருந்துகின்ற நான் ஒரு பெண்பிள்ளையோடு சண்டைசெய்தப் பழியைப்பொ ருந்தினவ னுவனன்ருே? இங்கே என்னை வெல்வத ற்கு இப்பெண்பிள்ளை வந்ததனுல் மின்னலோடுகூ டிய விடியைவெல்ல சர்ப்பமும், இந்திரனை வெல்ல மலைகளும், புலியைவெல்ல மான்களும் போகுமல் லவோ? பிர்மா விஷ்ணு இந்திரன் முனிவர் இவர் களெல்லா மோர்பெண்ணினிடத்திற்போய் அபைய மென்றடைந்த தன்மையால் அவர்களாண்மை மிக வுஞ் சிறந்ததே, நல்லது அந்த இந்திரனைப்பிடித்து க்கொல்வனே, எமனைப் பதைபதைக்கும்படி வதை ப்பனே, சந்திர சூரியர்களை யோர்புட்பச்சென் டைப்போற்றாக்கிப் பூமியிற் புடைப்பனே; அக்கினி யைவிழுங்கி எழுகடலையும் பானம் பண்ணுவனே; தேவர்களைப் பாதத்தாற் றேய்ப்பனே; முனிவர்க ளையழித்து விடுவனே வென்றின்னவைகளைச் சொ ல்லிக் கோபித்தான். இவ்வண்ணஞ் சினங்கொண் ட தாருகன் அந்தக் காளியானவள் என்னை வணங் கும்படி வந்தாளோ? அல்லது பகைத்து யுத்தஞ்

செய்ய வந்தாளோ? தூதர்களே? உங்கள் குறிப்பெ ன்ன வென்று வினவினன். தூதர்கள் வணங்கி, ஐய னே! அக்காளியானவள் எமனையும் வெற்றிகொள் ளும் படைகளையுடையவள், உம்மோடு யுத்தஞ்செ ய்யத்தான் வந்திருக்கின்ருள் இதிற்சந்தேகமில்லை நீ யவளை சாமானியப்பெண்ணென்று நினையாதே, அசு ரரும் அமரரும் வருந்தும்படி முன்னே பாற்கடலி ற்ருேன்றிய பாதகஞ்சமே யோர்பெண்வடிவாகவந் ததென்று நினைப்பாயாக; அவளதட்டுகின்றவோசை யானது நமனையுங்கொல்லும், அவளேந்திய சூலாயுத மோ கோவர்த்தனமென்னுங்குன்றைக் காத்திற்ருங்கி ய கோபாலனுக்கு ஓர்தலைச்சுமையாகும்; என்று தூ தர்கள் சொல்லிமுடித்தனர். அப்போது கடலானது யுகாந்தத்தில் பொங்கி யெழுவதைப்போற் காளியின் சேனைகளார்ப்பரிக்கின்ற வோசையானது தாருகனு டைய கோபாக்கினிக்குநெய்யோடு சமிதையைச்சொ ரிந்தாற்போல அவன்செவியில்நுழைந்தது. அச்சமய த்திலக்கினியைப்போலதிகோபங்கொண்டு ஓ தூதர் களே! அந்தப்பெண்களைப்பிடித்துச் சிறையிடுகின்றே ன் விரைவில் என்சேனைகளை வரும்படியழைமினென் றேவினன்; அவர்களும் விரைந்துசென்றனர்; சென்ற பின்தாருகன் யுத்தகோலங்கொள்ளும்படி யுள்ளேசெ ன்று சூரியன் கரிய மலையிலுதித்தாற்போல மணிகள் பதித்த மகுடமொன்றை சிரசிற்றரித்து வீரக்கழலுங் கட்டி கச்சை வரிந்திறுக்கி உடை வாளையுஞ்சேர்த்து தேகத்திலங்கி தரித்து, அம்புராத்தூணியு மூதுகிற்ரு

ங்கி முன்கையிற்ருேலணிந்து விரல்களுக்குக் கவசமி ட்டுமகுடத்திற்றும்பை மாலைபணிந்து அநந்தந்தேவ தாஸ்திரங்களைப்பூசைசெய்து எடுத்துக்கொண்டு மே ருவையொத்த வில்லைக்கையிற்பற்றி இவ்வாறு யுத்த கோலத்துடன் தன்னரண் மனையினீங்கி வெளியே வருவதற்குள்ளே சேனை முழுவதையுங் கொண்டு வரச்சென்ற தூதர்களிடங்கள்தோறும் விரைந்துசெ ன்று எங்கும் பறையடித்து இன்று உங்களுக்கோர் பெரும்போர் கிடைத்தது எழக்கடவீரென்றலும் இரதகசதுரகப தாதியென்னு நால்வகைப் படைகளு மெழுந்தன. போரென்று நெற்போரைப் புகன்ரு லும் எங்கேயுத்தமென்று எழுந்துதுள்ளுகின்ற வசு ரர்கள் தூதர்வந்து பறையடித்த வுடனே யந்தவோ சையைக்கேட்டு அவர்கள் மகிட்சியடைந்ததை யென் னென்றிசைப் போம். புசங்கள் பூரித்து மனக்களிப் படைந்து யுத்த மகப்படவில்லையே யென்னுந் துன்ப நீங்கி மழுவாள் சக்கரம் முதலியவைகளைத் தாங்கிப் பகைவர்களெங்கே காண்பியுங்களென்று அண்டச்சு வருடைந்தாற் போலார்ப்பரித்துச் சூழ்ந்தார்கள். இந் திரன் வச்சிராயுதத்தான் முன்னே சிறகுகளறுப் புண்ட மலைகளெல்லா மவ்விந்திரனுக்குப் பகைஞு னை தாருகனிடத்திற் சினேகங்கொள்ளச் செல்வ தைப்போல தேர்கள் அவனுக்கு நாற்புறத்தினுஞ் சூழ்ந்தன. கற்பிலா மகளிர் மனம் வேறுபட்டுத் தாங் களண்டிய வாடவர்களுடைய பணிவிடையைச் செவ் வையாச் செய்வதைப் போற் றங்களைச்செலுத்தும்

பாகர்களிடத்திற் கோபங்கொண்டு அவர் குறித்த வண்ணஞ் செல்கின்ற யானைகளோர்பக்கஞ்சூழ்ந்தன. ஒப்பற்ற ஞானநெறியிற்செலலாமல் ஐம்புலமார்க்கத்திற் செல்லும் அற்பர்கள் மனம்போல குதிரைக் கூட்டங்களானவை பூமியினு மாகாயத்திலும் பாதலத்திலுங் கடலிலு மலைகளிலும் பாய்ந்துச்சென்றன. இவ்வாறெழுந்த நால்வகைப்படைகளையுந் தாருகன் கண்டு மனமகிழ்ந்து கோடி புரவிகள் பூட்டப்பட்டுள்ள வோர் தேரிற் பாய்ந்தேறி யமர்ந்து, சாரதியைப் பார்த்து பாகனே, நொடிப்போதிலே யந்தப் பெண்பிள்ளையின் படைக்கெதிரிற் செலுத்துவாயென்னலும், அவனுடனே புரவிகளைத்தூண்டித்தேரைச் செலுத்தினான். அப்போது அடைப்பை காளாஞ்சி யாலவட்டம் வாளாயுத மிவைகளை யெடுப்பவர்கள் சூழவும் கன்னைகை காட்டவந்து பரிசனங்கள் மொய்க்கின்ற ஈக்களை யோட்டுவதைப்போற் சாமரங்களை வீசவும் தாருகன் செல்லுந்தன்மையைப் பார்த்துச் சேனைவெள்ளங்கள் எழுகடலோசையும் மழுங்க வார்ப்பரித்து ஆதிசேடன் முடிகளை மாற்றவும் பூமி பிளவுபட்டு எங்கவுந் திக்குகண் முழுதஞ் செறிந்து சென்றன. அசுரச் சேனைகளார்ப் பரித்துச் செல்லும் போது பூதூளிகள் ஆகாயமுற்றும்மூடி அதற்குமேலுஞ்செல்வது நிலமகளானவள் நீச்ச அசுரரைப் பரிசித்த பாவம் நீங்க தேவகங்கையின் மூழ்கச் செல்வதை பொத்திருந்தது. கண்ணுதற் கடவுள் கடலினஞ்சை யுண்டுக் கடவுளரைக் காத்ததைப்போல்

வெண்கொற்றக் குடைகள் ஆகாயத்தி லெழும்பூது ளிகளை தனக்குள்ளே யடக்கிச் சூரியனுடைய தேக வழகையழியா வண்ணந்தடுத்தன. கணிகையர்களோ ரிடத்திற் கூடித் தங்களுக்குள்ளே யடித்துக்கொள் வதைப்போல வீரர்கள் கையிற் பிடித்தக்கொடிகள் ஆகாயத்தி லொன்றுடொன்று தாக்கின. பூமியிலுள் ளவர்கள் அழுமோசையானது அடுக்கடுக்காயெழு வதைப்போல் முரசமத்தளம் படகமுதலிய வாத்திய வொலிகளெழுந்தன. இவ்வாறுசேனைகள்விரைந்த சூ ழதாருகனெனவன் காளியின் படைகள் பொருந்தியவி டத்திற்றேவர்கள் நடுங்கும்படிச் சென்றெதிர்த்தான்.

அந்த வசுரப்படைகள் வந்ததை யோகினிகள் பார் த்து அண்டங்கள் வெடி படும்படிச் சூலாயுதங்களைச் சுழற்றிக்கொண்டு ஆர்ப்பரித்து எதிரிற் சென்று எழுமழு இருப்புலக்கை வேல் சக்கரம் வாள் அம்பு மலை கதை முதலிய வாயுதங்களை யசுரர்மேலெறிந்து யுத்தஞ் செய்தார்கள். அசுரர்களு மவ்வண்ணமே பற்பல வாயுதங்களை யோகினிகள் மீதெறிந்தார்கள். இவ்வாறு யுத்தஞ்செய்யும்போது தேர்களையும் யானை களையும் குதிரைகளையுஞ் செலுத்தி இருப்புலக்கை கதை முதலியவைகளைக் கரத்திற்பிடித்த அசுரர்கள் அட்டதிக்கையுஞ்சூழ்ந்து வளைத்துக்கொண்டு வில்லை வளைத்து மேகம் பொழிவதுபோ லம்புகளைச்சொரிந் தார்கள். அப்போது தலைகளும் உடல்களும் வேறுவே றாகவிழுந்து அமிழவாற்றைப்போல் இரத்தநீர்களெ

மூந்தன இப்படியிருதிறப்படைகளிலும் எண்ணிலாத வர் உழுந்துருளும் நேரத்திற்குள் மாண்டனர். அசுர ருடைய வலிமையையுங் களிப்பையும் யோகினிகள் பார்த்து அக்கினியைப்பேலச் சுவாலித்தெழுந்து அ ண்டங்களுடையும்படி யார்ப்பரித்து வானவர் மகி ழ்ந்தாடும்படி தேர்களோடு தேர்களையுங் குதிரைக ளோடு குதிரைகளையும் யானைகளோடு யானைகளையும் எடுத்து வீசினர்கள். வாயுவானவன் மகாமேருவின் சிகரங்களைப் பறித்து வீசியதைப்போல் தேர்களைத் தூக்கி யதிலிருந்த வசுரரோடு மாகாயத்தி லெறிந் தார்கள். வானத்திற் செல்லும் பானு வானவன் விலகியோடும் வண்ணம் குதிரைகளையும் யானைகளையு மவைகளைச் செலுத்துபவருடனே தூக்கி யெறிந்தார் கள். சமீபத்தில் வருமசுரரைப் பிடித்து அவர்கள் கண்டத்தைக் கடித்து மாவிருட்சத்திற் றிருகியெடுக் குங் கனியைப்போல் வாயிலிட்டுச் சுவைத்து இரத்த நீரைப்பருகிகோபத்தோடுபசியுங்கொஞ்சம் ஆறினர். அன்றியும் எதிர்க்கின்ற வசுரரைப் பிடித்து இரத்த நீரொழுகக் கைகளாலிடித்து தேகவெலும்புகளை யெ ல்லாமொடித்து மலைகளெல்லா முதிரும்படித் தம் தண்டாயுதத்தாலடித்து அவருயிரையும் விண்ணுல கிலேற்றினர். இவ்வாறு அசுரர்களுக்குத் துன்பத்தை விளைத்தயோகினிகள் அவரைவெருட்டியுதைத்துமிதி த்துத் துவைத்து மருட்டி யிடித்து வளைத்து சீறிப் புரட்டி யெடுத்து அடித்து உருட்டினர்கள். கிட்டிய சிலவசுரரை யெடுத்து மேக மண்டலத்திலும் பூமி

யிலு மலைகளிலு மெறிந்தார்கள். அநந்தம் படைத் தலைவர்களை உயிர்பதை பதைக்கும்படி யறைந்து நொடிப்போதிலே நொறுக்கினார்கள். இவ்வண்ணம் யோகினிகளெங்கு நெருங்கிப் பதினாயிரம் வெள்ளம் அசுரரைக்கொன்றார்கள். அவைகளைக் கோபத்தோடும் புயவலிமையைப் படைத்த வோரமைச்சன் கண்டுத் தன்தேரையங்கே செலுத்தி மேருவும் பிளக்கும்படி வில்லை வளைத்து எதிர்த்து மேகத்தைப்போற் பிறை முகாஸ்திரங்களை விடுத்துதிக்குகளை மறைத்து தேவர்கள் வருந்தும்படி யோகினிகளின் றலைகளை யறுத்துப் பூமியிலுருளச் செய்தான். அந்த அமைச்சன் விடும் வாளிகள் யோகினிகளின் கரங்களையுஞ் சிரங்களையுங் கால்களையும் சரீரங்களையும் புயங்களையு மவர்கள் செருக்கினையு மறுத்தன. இவ்வாறு அக்கினியை யலைக்கின்ற பிரசண்ட மாருதம்போல ஓர் அமைச்சன்வந்து யோகினிகளையலற வடிப்பதைக்காளியின் சேனைத்தலைவி யொருத்திகண்டு கோபங்கொண்டு இந்த யோகினிகட்கிரையிடுவதற்கு இந்த நீசனுடைய வுயிரைப் பருகுவேனென்று ஓரிமைப்போதிலே யந்த வமைச்சனைத் தேரோடு மெடுத்து ஆகாயத்தி லெறிந்தனள். இஃதெவ்வாறிருந்ததென்றால் அவ்வமைச்சனுடைய வீரத்தன்மைக்கு மகிழ்ந்து அவனைத்தேருடன் சுவர்க்கத்திற் கனுப்பினாளென்றுரைக்கும்படி யிருந்தது. அப்படித்தேரோடு மெறியவே சூரியனிரதஞ் செல்லுகின்ற வாகாயத்தைக் கடந்துபோய் விரைவிற்றிரும்பினான். அப்படி

விழ்பவன் பேரில் ஓர் கதையையோகினி பிரயோகித்தாள்; அமைச்சனதையறிந்துவிரைந்து ஓர் வாளாயுதத்தையெடுத்து ஆகாயத்தினிடத்திலேயே யந்தகதையைத் துண்டித்து விட்டுப் பூமியிற் குதித்தான். உடனே யவனேறிய தேரும் பூமியில் விழ்ந்துடைந்தது. கதையைத் துண்டித்துப் பூமியிற் குதித்து நிற்பதை யோகினி கண்டு உளங்கொதித்து சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற ஓர் சக்கராயுதத்தை யமைச்சன் மீது செலுத்தினள். அந்த சக்கராயுதம் விஷ்ணுவின் சக்கரம்போல் அக்கினியைச் சிதறிக்கொண்டு வருவதை யமைச்சன் கண்டு வில்லை வளைத்து ஆயிரம் அம்புகளை விடுத்து அதையறுத்து கடலைப்போல ஆர்ப்பரித்தான். தான் செலுத்திய சக்கரமழிய யோகினியானவளுடனே யோர் மலையைப் பிடுங்கி யமைச்சன் மீதெறிந்தாள். அமைச்சனந்த மலையை யாயுதங்களானிக்காமற்றனது புசத்திற்றாங்கினான். தாங்கினவுடனே யவன் புசத்திற் பட்டுத் திரும்பி வந்து முன்னே யாடவர்களுடைய புசமானது பெண்கள் முலைகளுக்குத் தோல்வி யடைந்திருக்கின்ற கோபத்தாற் செலுத்தப் பட்டு அந்த முலைகளோடு யுத்தஞ் செய்திறந்ததற்குச் சமதையாக வந்த யோகினியின் றனத்திற் பட்டுடைந்தது. மலையுடைந்த வுடனே யோகினியானவள் வில்லை வளைத்து அமைச்சனெற்றியிலிரண்டம்புகளை யழுந்தச்செய்து ஓர் கதையையெடுத்து விரைந்து அவன் மீது மோத வுடனே யவனிறந்தனன். முன்னே யுடலோடு மாகாயத்திலேற்

றினாள் பின்பு உடலை நீக்கி யுயிரை மாத்திர மீளா வண்ணஞ் சுவர்க்கத்திலேற்றினாள். இதனைக்கண்ட தேவர்கள் மகிழ்ந்து கைகளைக் கோர்த்துக் கொண்டாடினார்கள். அப்போதமைச்சனிறந்ததை யசுரர்கள் கண்டு கோபித்து அக்காளியின் சேனைத்தலைவியின் மீது பற்பல வாயுதங்களையு மெறிந்து ஆர்ப்பரித்தனர். உடனே யோகினியானவள் ஓர் வாளாயுதத்தை யெடுத்துக்கொண்டு அந்த வசுரப்படைகளை யெல்லாங்கொன்று பருத்திக்குவியல்களைப் பறக்கடிக்குஞ் சூறை மாருதம் போலே யவ்வசுரச் சேனைக்குள்ளே புகுந்து காற்றுடியைப் போற் சுழன்று கால்களையுங் கைகளையுந் தோள்களையுஞ் சிரங்களையு மவர் பிடித்த வாட்களையும் விற்களையுஞ் சபதச் சொற்களையும் இமைநேரத்திற் றுணித்தனள். அப்போதசுரர்களெல்லாம் வில்வேல் சூலம் கரந்தோள் கால் தலையிவை யெல்லாமற்றார்கள். அந்தவசுரப் பெண்கள் தாங்களணிந்திருந்த தாலிகளையு மிழந்தார்கள். அப்போது அளவற்ற மலைகளைப்போல் பிணமலைகள் குவிந்தன. அந்த மலைகளினின்றோடும் ஆறுகளைப்போல் இரத்த நீர் பிணக்குவியல்களிலிருந்திரங்கி யொலித்துக்கொண்டோடிக் கடலில் வீழ்ந்து கருங்கடலைச் செங்கடலாக்கியது. அந்தயோகினியின் யுத்தகளத்தில். காக முங்கழுகும் பருந்தும் நாய்களும் மூளைகளைக் குடைந்து தசைகளைத்தின்று எங்கு பார்த்தாலும் பேயின் கூத்துகளாக விருந்தது. பிணமலைகளை யுண்டபேய்கள் ஒரு பெரும்பேயை யரசனாக நியமித்து. அசுர

ருடைய மகுடத்தை யதற்கணிந்து அவர் குடைகளை நிழலாகப் பிடித்துப் பம்பை முதலிய வாத்தியங்களை யடித்து இரண்டு பக்கங்களிலுஞ் சாமரைகளை வீசின, பேய்களெல்லாம் உதிரங்களைக்குடித்து மாமிசங்களைத்தின்று பேரிகை முதலிய வாத்தியங்களை யடித்து இந்தக் காளியானவள் எங்கள் வறுமையை நீக்கினளென்று புகழ்ந்து நின்று கூத்தாடும், தோலுரிந்த பறையை யுரலாக நிறுத்தி யசுரருடைய பற்களை யதிலரிசியாகப்பெய்து யானையின் கொம்பையும் முசலத்தையும் உலக்கையாகப் பற்றிப்பெண் பேய்கள் மாவைப்போலிடித்தன. துன்பமற்ற சொந்த மனைவியை நீக்கிப் பிறர் மனையிலுள்ள பரதாத்தை யிச்சித்துத் துன்பக்கடலின் மூழ்கு மறிவற்ற தூர்த்தர்களைப்போல் நாய்களெல்லாந் தகுதியான மாமிசமிருக்க வதைநீக்கி வெற்றெலும்பைக் கடித்துக் கடித்துப்பல் தளர்ச்சியடைந்தன. இத்தன்மையாயுத்தகளத்தி லெடுத்த வில்லினால் யோகினி யானவள் அசுரர்களைச் சின்ன பின்னங்களாகச் சிதைத்து நிற்கத் தங்களுயிரைக்காக்க விரும்பின சிலவசுரர்கள் முதுகாட்டி யோடினர். அதனைத்தாருகன் பார்த்து அக்கினியைப்போற் கொதித்து உதட்டைக் கவ்விப் பற்களைக் கடித்து என்சேனைகள் சிதையும்படி யழிப்பவர் மாதர்களோ! இது நன்றாயிருந்தது என்று நகைத்து இந்த யோகினிகளைப் பருத்திப்பொதிகளில் தீபுகுந்தழிப்பது போலழிப்பேனென்று கையிலேந்திய கதாயுதத்துடன் பூமியிற் பாய்ந்தான். அவன் பாய்ந்தபோது பூமியானது வெடித்தது, அட்ட

ாகங்களுஞ் சோர்ந்தன, திக்கு யானைகள் பயந்து இ ரிங்தோடின, மேரு முதலிய பருவதங்கள் சாய்ந்தன, தேவர்களு மிது எவ்வாறு முடியுமோ வென்றேங் கினர். இவ்வண்ணங் தேரினின்று குதித்தத் தாரு கன் செயலை யோகினி யானவள் கண்டு வாயுவைப் போற் பாய்ந்து தாருகனுடைய புசத்தை வாளினல் வெட்டினள், பெரியோர்களுடன் பகைத்த பேதை யரைப்போற் பயன் படாமல் வாளாயுதமிற்று விழுங் தது. உடனே தாருகன் தண்டினல் மோதாமல் அ ண்டகூடமும் உடைந்ததென்றையமுறும் வண்ணம் தனதிடது கரத்தினல் அந்தயோகினியின் மார்பிலோ ங்கியடித்தான், அடித்தவுடன் யோகினியின் மார்பு பிளந்து வாயிலுதிரத்தைக் கக்கிக்கொண்டு பூமியில் வீழ்ந்தாள். சேனைத்தலைவி யிவ்வாறுவீழ்தலும் ஏனை யயோகினிகளெல்லாம் வாள், மழு தண்டு சூலம் முத லிய வாயுதங்களைச் சுடுகனலிலெறிகின்ற துரும்பைப் போலத்தாருகன் மீது ஓயாமலெறிந்தார்கள். அவ் வாயுதங்களிற் சில பிளப்புண்டன சில மடிந்தன சில துகளாய்ப் படிந்தன சிலவொடிந்தன; இவ்வித மழி யவே தாருகன் பார்த்து ஓடிப்போன யோகினிகள் நீங்க வென்னையெதிர்த்தவர்களைக் கொல்வேனென்று காக்கை முதலியவைகள் களிக்கும்படி யம்மோகினி களுடைய கால்கை நிதம்பம் புயஞ்சிர மிவைகள் சிதறும்படி தண்டினல் மோதினன். ஒவ்வோரடியில் ஆயிரம் யோகினிகள் விழும்படி கதையாற் புடைத் துக்கொன்ருன். தண்டினற் சிலர் சிரங்களைப் போக்

னுன், கரத்தாற் சிலர் செருக்கை நீக்கினுன், புசத்தாற் சிலர் திகைக்கும்படித் தாக்கினுன், காலாற் சிலரை வதைத்தான், தலைகளைத் திருகிச்சிலரை வதைத்தான், பிடித்த பிடியிற் சிலரைக்கொன்றுன், ஆகாயத்திலெறிந்து சிலரை வென்றுன் கால்களாலெற்றிச்சிலரை யழித்தான், மார்பிற் குத்திச்சிலரை யொழித்தான், பூமியிலும் மலைகளிலும் பாதலத்திலும் மேகமண்டலத்திலுங் கடலிலுங் காடுகளிலும் பிரம விஷ்ணு சிவர்களுரிலும் இந்திரனுலகத்திலுஞ் சூரியன்றேரிலும் ஏனையவுலகங்களிலுஞ் சிலரை யெடுத்து வீசினுன், இவனையெதிர்த்த யோகினிகளுடைய எலும்புகளும் பற்களுங், கரங்களுஞ், சிரங்களுங், கால்களுந் தொடைகளுந் தோள்களுங் கண்டங்களு நாசிகளும் அற்றன. அப்போது உதிர ஆறுகளெங்கு மோடின, பிண மலைகளு நிறைந்தன, நாய்களும் பேய்களும் பாட வநந்தங்கவந்தங்கள் நின்றுடின. இவ்வாறு தாருகன் வதைக்க வவனைவெல்லும் வகையின்றி யோகினிகளோடினர். இதைக்கண்ட தேவர்கள் கண்ணீரொழுக முகத்தினறைந்தழுதார்கள். யோகினிகள் சிதறுண்டதை தாருகன் கண்டு கையிற் பற்றிய கதையோடு தேரிற் சிங்கத்தைப்போற் பாய்ந்து எறினுன். அவ்வேலையி லசுரர்கள் ஒடுகின்ற யோகினிகளைத் தொடர்ந்து மழுவாள் முதலிய ஆயுதங்களை வீசினுர்கள். தன்னுடைய படைகளோடி வருவதைக் காளியானவள் கண்டு, அஞ்சாதிர்கள், அஞ்சாதிர்கள்; இவ்வசுரர்களை யெல்

லாய் கூட்டமாகிய புழுக்களைப்போற் பாதத்தாற் றேய்த்து விடுகிறேனென்று சாரத்தியஞ் செய்யும் வலவியைப் பார்த்து, இம்மென்பதற்கு முன்னேயந்த வசுரப்படைக்கு நேராக நமது தேரைச் செலுத்து வாயென்றாள். உடனே வலவியானவள் வணங்கித் தேரை நடத்தினாள். மதஞ்சொரியும் யானையைக் கவ் வுகின்ற சிங்கத்தின் மீது செல்லுஞ் சிம்புளைப்போல் விடத்தையொத்த விமலையாகிய காளி சத்துருக்க ளெதிரிற் புகுந்து மிக்க கோபத்துடன் பிரசண்ட வில்லையெடுத்து நிறுத்தி வளைத்து பூமியதிரவு மகா மேரு வுதிரவும் வான் மீன் சிதறவும் அசுரர்களுக்கு முன்னே நாண் ஒசையைக்காட்டி நின்றாள். அசுரர் களெல்லாமந்த நாணோசையைக்கேட்டு சிலர் மருண் டனர் சிலர் மண்ணில் வீழ்ந்து புரண்டனர் சிலர் செவிகளைமூடி வெருண்டனர், சிலர் தேரோடு முரு ண்டனர், இத்தன்மையதாய்க் காளியின் நாணோசை யைக்கேட்டு நடுங்கிய வசுரர்கள் அந்த நாணிலிருந்து தீட்சண்ணிய மான பாணங்கள் வருவதற்கு முன் னே மனத்திலுள்ள நாண முழுவது நழுவுதலாலே சில ரோடினார், கொஞ்ச நாண முடையவர்கள் வரு ந்தி நின்றார்கள். இவ்வாறு நிற்றலும் வில்லைச்செண் டுபோல் வளைத்து, இரத்தவாறு கடலிற்போய்பாயும் வண்ணம் அனலையுமிழுமம்புகளை யசுரர்மேல் விடா மற் பெய்தனள். தேர்கள் மீதும் யானைகள் மீதுங் குதிரைகள் மீதும் ஊழிக்காலத்துச் சோனு மேக முந்தோற்கும்படி பாணங்களை விடுத்து அவற்றினைப்

பூமியிற் சாய்த்தனள். இன்னுமந்தக் காளியின் வாளி கள் மார்பையும் உடலையும் அவர்பெற்ற வரங்களை யும் வயிறுகளையுங் கரங்களையுஞ் சிரங்களையும் வில்லை யும் அறுத்தன. அந்த விமலை விடுமாசுகங்கள் யானை களையுங் குதிரைகளையுந் தேர்களையும் அறுத்தன. தாருகன் புகழை யறுத்தற்கொப்பாக அவன் குடை களை யறுத்தன, கொடிகளையு மறுத்தன. அன்றியும் அவள் விடுஞ் சுடுசரங்களானவை காடுகளிலுஞ் சுரங் களிலும் மலைகளிலுங் கடல்களிலும் மேலுலகங்களி லுந் திக்குகளிலுஞ் சென்றன. அன்றியும் அவள் விடும்பிறை முகாத்திர மானது வீரகண்டையணிந்த கால்களை யோர் திக்கிலும் படைகளேந்திய கரங்க ளையோர் திக்கிலும் மாலையணிந்த சிரங்களையோர் திக்கிலு மறுத்து வீசா நிற்கும். காளியானவள் தன் கைச்சாபமாகிய வில்லைக்கொண்டு அவ்வசுரர் வாயி னின்றும் வருகின்ற சாபமாகிய வீரவாதங்களை மாற் றினளென்று உரைக்கும் வண்ணம் ஒருநொடிப்போ திலே தாருகன் படைகள் ஒன்று மில்லாமற் போக் கினள். அப்போது இரத்த வெள்ளங்களானவை வில் லையும் வாளையும் அசுரருடலையுந் தேரோடு புரவிக ளையும் வாத்தியங்களையும் யானைகளையும் அடித்துக் கொண்டு சென்றன. பின்னுங் காளியானவள் அம் புகளை விடும்போது வீரமற்ற வசுரர்கள் மனங்குலை குலைந்து கையிலுள்ள வாயுதங்களை யெறிந்து விட்டு அன்னையே; இங்கே எம்மையாளக் கடவாயென்று சிலரியம்புவார். சிலர் தாங்கள் பிடித்த குடையானது

வெட்டுண்டு போக காளி கண்டால் கதையென்று நினைந்துக்கொல்வாளென்று கருதிக் காம்பை பூமியில் விட்டு விடுவார், சில வசுரர் வெட்டுண்ட குடைகளைச் சேர்த்துக் காம்புகளிற் சொருகி பிடிப்பார்கள். சில புரவி வீரர்கள் கரத்திலுள்ள வாளாயுதத்தை நிலத்திலிட்டுப் புரவியை விட்டிரங்கி யந்தப் புரவியைப் பிடித்துக்கொண்டு நிற்பார்கள். சிலரந்தப் புரவிகளின் வாயிலுள்ளப் புல்லினை வாங்கித் தமது வாயில் வைத்துக்கொண்டுத் தோல்வி யடைந்தோமென்னுங் குறிப்புடனிற்பார்கள். சிலர் வளைத்த வில்லிற் பூட்டிய பாணமேந்திய கையோடும் பூமியில் வீழ்ந்தார்கள். சிலர் வீரரென்றுணரும்படிக் கட்டிய வீரகண்டையை யறுத்தெறிவார்கள். இவ்வாறழிந்தவர்களையும் அழியாமல் வாடி நிற்பவர்களையுந் தாருகன் கண்டு உகாந்த காலத்திலெழு மக்கினியை விட அதிககோபங்கொண்டு தேரை விரைவாகத்தூண்டி சிங்கத்தின் முன்னே வந்து எதிர்க்கின்ற யானையைப் போற் காளிக்கு முன்னே வந்து நின்று பயங்கரமான அக்காளியின் வடிவைப் பார்த்து ஆச்சரியப்பட்டு இவள் பெண்ணுயிருந்தாலு நமது யுத்தத்திற்கேற்றவளென்று நினைந்துச் சொல்கின்றான்:—"பெண்ணே; நீயார், யானையும் அஞ்சும்படி மோதுகின்ற ஆண் புலியை வெல்ல நினைந்து வந்த மானைப்போல் அயன் முதலிய வமரர்களை வென்ற வென்னோடு சண்டை செய்யவந்தது யாது காரணமதைச்சொல் என்றான். அந்த தாருகனுரைத்ததைக் கேட்ட காளியானவள்

இடி இடித்தாற்போற்சிறித்து ஓ! குற்றமுடைய வசுரனே; கேள் என் பெயரோ காளி, நீ தேவர்களுக்குத் துன்பத்தை விளைத்ததனால் திரிநேத்திர தாரியான சிவபிரானுன்னைக் கொல்லும்படி யிங்கேயென்னை யனுப்பினர்; ஆகையால் யானையைக் கொன்றுண்பதற்குப் பெண் சிங்கம் வந்ததைப்போலுன்னை யொருகணப்போதிலே விழுங்கி வானவர்கள் படுந் துன்பத்தோடு என் பசியும் நீங்குமென்னு மாசையாலிங்கே வந்தேனென்றாள். காளி இவ்வண்ணமிசைத்தவுடன் தாருகன் கையோடு கையைத்தாக்கி நகைத்து, என்னை விழுங்குவனென்றுரைத்த வார்த்தையானது வானத்தைக் கையாற் பற்றி வாயிலிட்டு விழுங்குவேனென்பதை யொக்கும், நீபெண்ணாயிருந்ததனால் இதுகாறுங் கொல்லாமற் பொறுத்திருந்தேனென்றான். இவ்வாறவனியம்பியதைக் காளி கேட்டு இழிதொழிலுடைய வசுரனே; என்னை வீரமில்லா மடந்தையென்று விளம்பினையே உலகமெல்லா மொருகணத்தில்மாற்றி யொடுக்குவது வெள்ளிமலையில் வீற்றிருக்கும் விமலரதுசத்தியல்லவோ? இதை நீயறியவில்லைபோலும் என்றனள். கீழ்மகனுகையா லதையவன் கேளாமற் சீறி ஒப்பற்ற வில்லை வளைத்து நாணோசை கொண்டார்ப் பரித்தான். அந்த வோசையால் மேகங்களுடைந்து வீழ்ந்தன; சர்ப்பங்களெல்லாம் புரண்டன; மலைகளும் பூமியும் அண்டகூடமு முடைந்தன; இவ்வண்ணந்தாருகன் நாணோசையைக் காட்டவதனைக்கண்டு காளியும் அம்பைச் சொரிவதற்கு

முன்னே கார்முகம் அதிர்வதைப்போற் கார்முகத்தைவளைத்துக் கூர்மையான பாணங்களை விடுவதற்கு நாணோசையைக் காட்டி நின்றாள். அந்தக்காளியின் நாணோசையானது தாருகன் நாணோசையை விழுங்கியெழுந்தது. காளியானவள் தாருகனை விழுங்குவதற்குக் கோபத்துடன் வந்தாளென்றால் அவள் வில்லோசை யவ்வசுரன் வில்லோசையை விழுங்குவதோராச்சரியமாமோ? பின்பு தாருகன் வில்லில் ஓர் பாணத்தைப் பூட்டிக் காதளவு மிழுத்துக் காளியின் மேலெய்தான் - உடனே காளியு மோரம்பை விடுத்து அதனை மாற்றிப் பின்னு நூறு பாணங்களை யெதிரே விடுத்தாள்:— தாருகனும் நூறு கணைகளைச்செலுத்தி யவைகளை யறுத்தான். காளி மிக்ககோபங்கொண்டு ஆயிரம் பாணங்களை விடுத்துத் தேரோடு பாகனையுங் குதிரைகளையு மழித்தாள். தாருகன் வேறோர் தேரிற் பாய்ந்து ஆயிரம் பாணங்களைச் செலுத்திக் காளியின் சாரதியை யழிக்க வதனைக் காளிகண்டு பதினான்குபாணங்களைவிடுத்து தாருகன் பிடித்தவில்லைத் துண்டித்தாள், தாருகன் வேறோர்தனுசை யெடுத்து வளைத்து ஐம்பதுபாணங்களை விடுத்துக் காளியின் கைவில்லைத் துண்டித்து முப்பது பாணங்களை யதிகமாகச் செலுத்தினான். அந்தபாணங்களைக் காளியானவள் வாளால் வெட்டிமடித்து ஓர்வலியவில்லை யெடுத்து வளைத்துக் கூரியகணையொன்றை யவன்மார்பிற் படும்படி விடுத்தாள். அந்தபாணந் தாருகன்மார்பிற்குச் சமீபத்தில் வருதலும் அவன்விலக்க. மீண்டுமிரண்டு பாணங்களை

விடுத்துத் தாருகன்மகுடத்தைத்தள்ளி யார்ப்பரித்தா ன். இங்ஙனம் மகுடமிழந்த தாருகன் பொறுமை யில்லாத தவமும், பொருளில்லாத கவியும், வேதப் பொருளறியா விவேகமும், மைந்தரில்லாத வாழ்வும், நீதியில்லா வரசும், அன்பில்லாத அறமும்போலசோ பைகுன்றி நின்றனன். இங்ஙனம் காளியால் மகுட பங்கப்பட்டு அழகழிந்து நின்ற தாருகனைக்கண்ட தேவர்கள் எழுந்து துள்ளிக் கைகளைவீசி நகைத் தார்கள். அப்போது கடல்பொங்கி யெழுந்ததைப் போல தாருகன் சீறி வேறோர் முடியைத் தரித்து மேருவைப்போன்ற வில்லொன்றை வளைத்துச் சோ ருமேகம்போற் பாணங்களைச் சொரிந்தான். அதனைக் கண்ட வயரெல்லாமோடினர், சோமசூரியாதிவான் மீன்களுமறைந்தன, இருளான தெங்குமூடியது, நஞ் சிலுங் கொடியதாருகன் மென்மேலும் பாணங்களை ச்சொரியவே சூரியன்றேரையு மிருள்மூட தேவர்க ளும் ஆச்சரியத்துடன் மயங்கினர்கள். சிவபிரான்றி ருக்கண்களை இன்றும் உமையவள் மறைத்தாளோ வென்றையுறும் வண்ணம். தாமரைக ளெங்குக்குவிந் தன, குவளைகளெல்லா மலர்ந்தன, பட்சிகளெல்லாங் கூண்டிலடைந்தன, தவசிகளெல்லாந் திகைத்தனர்; அதனைக் காளியானவள் பார்த்து இடியுமஞ்சும்படி நகைத்து, முன்னே சிவபிரான் றிரிபுரத்தை யெரித் ததைப்போல் தன்னெற்றிக்கண்ணிறு லவன்விடுத்த பாணங்களை நீறுக்கினள். ஆனது திருவருளாலஞ் ஞான நீங்க அறிவொன்றே விளங்கியதைப்போல

தாருகன் விடுத்தபாணங்க லழியவே தருமமென்ப தை யறியாதவத்தாருகனைக்கண்டாள். உடனே தாருகன் காளியின் எட்டுத்தோள்களிலும் தாக்கும்வண்ணம் பதினாயிரம் பதினாயிரம் பாணங்களை விடுத்தான். அவை அந்தக்காளியின் புசத்திற்தாக்கின வுடனே நீருயின; அவ்வாறு நீருதலு முழுத்தீயைப் போற் கொதித்துக் காளியானவள் கோடிபாணங்களைவிடுத்தாள். தாருகனுங் கோடிபாணங்களை விடுத்து அவற்றினை யறுத்துத்தள்ளினான். இவ்வாறு ஒருவர்மீது ஒருவர் விடும்பாணங்களை விலக்கி மகிட்சியும் வாட்டமுங்கொண்டு தேவகூட்டங்கள் பார்க்கும்படி பெரும்போர்புரிந்தார்கள். இருவர் விடுவாளிகள் ஆகாயத்திலு மேருமுதலிய மலைகளிலும் பரவைகளிலுங் கானகங்களிலும் அண்டகடாகத்திலும் விஷ்ணுவுக்குணவாகிய பூமியிலும்? திசைகளிலுஞ்சக்கரவாளகிரியிலும் பாதலத்திலும் புறவாழியிலும் மேலுலகிலுஞ்சென்று பரவின. இவ்வண்ணம்போர் செய்யும்போது இந்தக்காளியை தேவதாஸ்திரங்களால் வெல்வேனென்று தாருகன் சிந்தித்து வருணாஸ்திரத்தை விடுத்தான்; அது எழுகடலும் பெரும்புறக்கடலு மிங்கேவந்ததைப்போல் வந்தது. காளி அக்கினியாஸ்திரத்தை விடுத்து அதனையழித்தாள். தாருகன் அக்கினியாஸ்திரத்தை விடுக்க, அதனால் மேகங்களெல்லாஞ் சூலழியவுங் கடனீர்வறளவும் வானவர் நைந்து மருளவும் பொங்கியெழுந்து வந்தது. காளி வாயுவாஸ்திரத்தை விடுத்ததனைய

ரித்தான்; தாருகன் வாயுவாஸ்திரத்தை உடனே செலுத்த வதுமலைகளெல்லாஞ் சுழலவும் விண்ணி லுள்ள கற்பகச்சோலை முறியவும் வீசிக்கொண்டுவ ருவதைக் காளிகண்டு நாகாஸ்திரத்தை விடுத்துமா ற்றினள். தாருகன் நாகாஸ்திரத்தை விடுத்தான் அது படங்களை விரித்து வாய்களில் விடத்தைக் கக்கிக் கொண்டு வருதலும் காளி கருடாஸ்திரத்தைவிடுத் து அதனை மாற்றினள்; உடனே தாருகன் கருடாஸ் திரத்தை விடவே யது தன் சிறகின் காற்றினல் யு காந்தகால வாயுவருந்தவும், மேகங்களெல்லா மோ டவும், மலைகள் பொடியாகவும், அக்கினியின் வன் மையழியவும், வாயிற்கவ்விய சர்ப்பத்துடனே வந் தது. அந்த பாணத்தின் வலிமையைக் காளிகண்டு நாரிபாகற் கொப்பாகிய நந்தியம்படையை யெடுத்து நறுமலர் முதலியவற்று லர்ச்சித்துத் துதித்து அந் தகருடாத்ஸதிரத்தை யழித்துவருவாயென்று விடுத் தவுடனே யது இடபவுருவை யடைந்து முசுப்பா னது அண்டமுகட்டை யுராஞ்ச பூமியையோர்காற் குளம்பாலெற்றி, கண்களிற்றீப்பொறிபறக்க வாயில் நீரைக்காட்டிக் கிண்கிணிமாலைக ளசைய வெளியி லுலாவும் வேகத்தினலாகிய காற்றை நாசியுஞ், சுடு கின்ற வக்கினியைக் கண்களுங்காட்டவும், உலகமெ ல்லாஞ்சோர்ந்து விழவும்" வாலடியான்மேருமுதலி யமலைகள் பெயரவுங், கொம்பினலெலறிவதற்கு ஒன்று மில்லாமையால சும்மாவிருக்கவும், பிரமா முதலிய தேவர்கள் கும்பிட்டு வாழ்த்தவும் நந்தியம் படைச்

சென்றது. இதைக் கண்டவுடனே கருடாஸ்திரமான துதன்னைக்கண்ட சர்ப்பத்தைப்போ லழிந்தது. அப்போது நந்தியம் படைத்தாருகன்மீது செல்ல. அதைக்கண்ட தாருகனும் நந்தியம் படையைவிடுத்தான். இவையிரண்டு மெதிர்த்து யுத்தஞ்செய்து விடுத்தவர்களிடமே சென்றன. பின்பு தாருகன் இந்திராஸ்திரம் பிர்ம்மாஸ்திரம் நாராயணாஸ்திர மிவைகளைச் செலுத்தினான். அவைகளந்தந்த தேவதையினுருவைக்கொண்டு வருதலும் காளியுமவர்கள். படைகளை விடுத்து மாற்றினாள். இனி யிவளை யெல்லாவுலகங்களையு மிமைப்பொழுதில் மாய்க்குஞ் சங்கரன்படையைவிடுத்துச் சாடுவோமென்று அதைத் தாருகனெடுத்து அர்ச்சித்து இந்த மங்கையினுயிரைவாங்கிவாவென்றிறைஞ்சிவிடுத்தான். அது ஊழிக்காலத் தக்கினியை யோர்பக்கமும், இடியோடு மேகங்களை யோர்பக்கமுங், கடல்களை யோர்பக்கமும்,உலகையழிக்கும் விடத்தை யோர்பக்கமும், யானைப்படைகளை யோர்பக்கமும், அஸ்திரக்கூட்டங்களை யோர்பக்கமும்,பூதங்களை யோர்பக்கமுந், தேவாஸ்திரங்களை யோர்பக்கமும், இருளை யோர்பக்கமும், இடபங்களை யோர்பக்கமுஞ், சிங்கம் புலிகளை யோர்பக்கமும், பிரசண்டவாயுவை யோர்பக்கமும், உருத்திரர்களை யோர்பக்கமும், வயிரவர்களை யோர்பக்கமும் உக்கிரவீரரை யொருபக்கமுங் கக்கிக்கொண்டு திரிநேத்திரதாரியின்பாசுபதாஸ்திரமுன்னேவந்து தோன்றலும். காளி கண்டு தானு மந்தப்படையை மனத்தினாற் பூசித்து

விடுத்தாள். அதுவு மவ்வணமே பற்பல வுருவங்களை
க்கொண்டு தாருகன் படையுடனெதிர்த்துப் போர்
செய்தது. அதனற் கடல்கள் புரண்டன; அண்டச்
சுவறும் பிளந்தது; மகாமேருவும் வெடித்தது; இவ்
வாறு யுத்தஞ்செய்து அவரவர் பக்கலடைந்தன.
அப்போது தாருகன் காளியின்மீது ஓர் கதையைச்
செலுத்தினன். காளி யைந்து நாகாஸ்திரத்தைவிடு
த்து அதனை யழித்தாள். பின்பு நூறுபிறை முகாஸ்
திரங்களை விடுத்துக் காளியானவள் தாருகன்றேரை
யழித்தாள். உடனே தாருகன் வேறோர் தேரிற்கிளை
யிற்றுவும் வானரம்போற்பாய்ந்தான். காளி நூறுக
ணைகளைவிடுத்து அந்தத்தேரையு மழித்தாள். தாரு
கன்வருந்துகின்ற மனமுடையவனு யிமைப்பொழுதி
ற்காளியின்றேரிற் பாய்ந்து பூமியோ மேருவோவெ
டித்த தென்னும்படி யவள் மார்பிலோங்கி யடித்து
பூமியிற்குதித்தான். அதனைக்கண்டு காளிகடை யுகக்
கனலைப்போற்சீறி யினியிவனை யிப்போதே கொல்வே
னென்று பூமியானது வெடிக்கும்படி யவனுடனேகு
தித்து சூலாயுதத்தா லவன்மார்பு கிழியும்படிக்குத்தி
னள்; குத்தினவுடன் குருகனயர்ந்து அவன் மனதி
லுள்ள கோபாக்கினி வெளிப்பட்டதைப்போல் உதி
ரம் பூமியில் வழிந்தோடியது. அவனுதிரத்தைக்கபா
லத்திற்பிடித்துபானம்பண்ணென்றுமுன்னே சிவபிரா
னுரைத்ததைச் சிற்றத்தினல் காளிமறந்தனள். அப்
போதுதாருகனுடைய வுதிரந்தோய்ந்த மண்துகளெ
ல்லாம் அவனைப்போல் வடிவங்கொண்டு அநந்த மகு

ர்களாய்ப்பெரிய வாயுதங்களுடனே மேகமு மஞ்சும் படி யார்ப்பரித்தார்கள். இவ்வாறுற்பவித்த வசுரர் பதினுன்குலகிலு நிறைந்தனர்; இவர்களை வானவர் கண்டு மூச்சடங்கிக் கைப்பொருள் சோர்ந்து இறந் தவர்களைப்போ லறிவிழந்தார்கள். உடனே தாரு கனைப்போல் வடிவுற்றெழுந்த வசுரர்கள் சூலம்மழு வாள் பிண்டி பாலமுதலிய வாயுதங்களை விடுத்துக் காளியை அவள்படைகளோடும்போய்வளைத்தார்கள். அவர்களுற்பத்தியையும் அவர்களுத்தத்திற்கு வருவ தையுங் காளிகண்டு முன்னேசிவபிரானுரைத்த வார்த் தையை நினைந்துத் தன்படைகளை யழைத்து இவ்வசு ரரை யெல்லா மெடுத்து விழுங்குங்களென்றுரைத் துத் தானும் விழுங்கத் தலைப்பட்டாள். சூலாயுதத் தாலவர்கள் மார்பிற் குத்தி யுதிரங்களைக் கபாலத்திற் பிடித்துக்குடித்து மலைபோலுயர்ந்த வசுரப் பிரேதங் களை யெல்லாம் விழுங்கினுள். ஊழிக்காலத் தக்கினி யைப் பார்க்கிலும் உதராக்கினியை யுடையவளும் உ லகெலாம் புகழப்பட்டவளும் ஆகியவந்தக் காளியான வள் தன் வயிருனது ஓர் ஓமகுண்ட மாகவும் அங்குள் ள உதராக்கினியே அக்கினியாகவும் அசுரருடையவு திரமேநெய்யாகவும் அவர் மாமிசமே காட்டமாகவுஞ் சேர்த்து ஓர் வீரயாகத்தைச் செய்தாள். ஒரு முகுர்த் தத்திற்குள்ளே காளியானவள் யோகினிகளோடு அவ் வசுரர்களையெல்லா முண்டாள்; அதைத் தாருகன் கண்டு சீறித்தனியனுப் மனம் பதை பதைத்துக் காளி யை மோதும்படி வந்தான்; வரவே காளியானவள்

சூலத்தாலவன் மார்பிற் குத்தி சிந்துகின்ற வுதிரத் தைக் கபாலத்திலேற்றுப்பருகியிந்தப் பூமிதேவியின் பாரத்தை யிரக்கினள். தாருகனு மாண்டான். அவ னுடலையும் விழுங்கினள். அதனைக்கண்டு தேவர்கள் நமதன்னையாகிய காளி தாருகனைக்கொன்று அவனு டலையும் விழுங்கி நம்மையின்று இவள் தானீன்று ளென்றுக் களித்துத் தங்கள் துன்பமெல்லாம் நீங் கிப் பாடிக்கொண்டெங்கு மோடினர். கடலிலுதித்த நஞ்சைக்கண்ணுதற் கடவுளுண்டு காத்ததைப்போல் இன்று தாருகனை யுண்டு பாலராகிய வெங்களைக் காத்தாயென்று காளியின் மீது தேவர்களிடை விடா மற் புட்பவருடம் பொழிந்தார்கள். அதனைக்கண்டு காளி மன மகிழ்ந்து அசுரர்களாலிறந்த யோகினி களெல்லா முயிர்பெற்றெழும்படி யுரைத்தாள். உரை த்தவுடனே நித்திரையினின்றெழுந்ததைப் போல் யோகினிகளெல்லா மெழுந்து காளியைச் சூழ்ந்தார் கள். அப்போதசுரர்கள் உதிரத்தையு முடலையு முண் டதனல் காளியின் மதிமயங்கி தனக்குயாரு நிகரிலலை யென்று செருக்கடைந்து வீணையொன்றை மீட்டிக் கொண்டு பாடி புசங்களுங் கரங்களுங் கால்களு முடிகளு நெருங்கிய போர்க்களத்தி லாடினள். காளி நடிக்கவே யதனைக்கண்டு யோகினிகளும் பூமி பிளவு படவும் நட்சத்திரங்களு திரவும் உயிர்கள் துடி துடி க்கவும் இமயமலை நடுங்கவுங்கைகளைத் தட்டியார்ப்பரி த்து ஆடுவாராயினர்:— சிலர் கைகளைக்கொட்டிக் குயவன் சக்கரம் போற் சுழலுவார்; சிலர் நெருங்கிய

பேய்கள் கீதம்பாடி யாட வதனுட னடிக்கின்றார்; மத்தளத்தைத் தங்கள் பாத வடைவுக்கு இசைந்த வொலியாக வடித்துக்கொண்டு சிலர் நடிக்கின்றார்; பிண மலைகளிலேறிச் சிலர் காலாற்றுவைக்கின்றார்; அசுரர் தலைகளை அம்மனையாக வாகாயத்திலெறிந்து சிலராடுகின்றார்; விலாவிற் புசத்தாற்றாக்கி யுடல் வளைந்து சிலர் நடிப்பார்; கால் வாய் கண் புயம் புருவ மிவைகள் விகாரமாம்படி சிலர் ஆடுவார். பல கரைகளைப்போற் பற்களெல்லாம் விளங்கும்படி சிலர் நகைப்பார்; பிரேதங்களைச் சூலத்தாற் குத்தித் தூக்கிக்கொண்டு சிலராடுவார்.

மதம் பிடித்தவர்போற் குடல்களை மாலையாகப்போட்டுக்கொண்டு அதிர்ந்தாடுவார் சிலர். இப்படி பற்பல விதமாயோகினிகள் இரத்தநீரை குடித்தக் களிப்பினால் காளியுடன் ஆடினார்கள். இவர்களாடுகின்ற வோசையும், ஆர்ப்பரிப்பும், கைகளைக்கொட்டு மோசையும், உலகமெல்லா மழிக்கும்படி வருகின்ற மேக முழக்கைவென்றன. இதனாற் பூமியெல்லாம் வெடித்தன, மலைகளெல்லா முதிர்ந்தன, மேகங்களெல்லாம் விழுந்தன‘ உயிர்களெல்லா மூர்ச்சையடைந்தன, சோம சூரியரலைந்தனர், எங்குந்துன்பஞ் சூழ்ந்தது, ஆதிசேடன் பூபாரத்தைச் சுமக்க முடியாமல் ஆயிரந்தலைகளிலுங் கொப்புளமெழும்ப வருந்தித் தாங்கினான், அரியயனிந்திரன் தேவர்கள் முனிவர் யாவரும் வருத்தத்துடன் வந்து பிறையை முடித்த பிஞ்

ருகனையபயமென்றடைந்து, எந்தையே தாருகன் செய்த துன்பத்தை யுன்னிடத்திலுதித்த காளியைக் கொண்டு களைவித்தீர். காலிற்றைத்த முள்ளைக்க ளைந்து விட்டு அதில் ஆப்புவைத்தடித்தாற் போலந் தத்துயரத்தைப் பார்க்கினு மதிகதுன்பத்தை யிக்கா ளியானவளியற்றுகின்றனள். உனது பேரருளாலே செ ருக்கு [illegible] ற தீங்கையு நீக்கியெங்களை [illegible] நஞ்சையயின்றும், அக்கினி [illegible] சூரனைக்கொன்றும், யாங்களுய் [illegible] வொப்பபற்றவரே; இந்த விடை யூற்றினின்றுங் காக்கக்கடவீர் " என்று கைகளைக் கூப்பி நிற்க. அப்போது சிவபிரானந்தக் காளியின் செருக்கை ஓர் விளையாட்டானீக்கக் கருதி உமை யவளோடு பிரமத கணங்கள் சூழ வந்தக் காளியாடு மிடந் திருவாலங்காடாகையால் ஓரிமைப் போதி லேயவ்விடம் சென்று, அக்காளிக்கு முன்னே பெரிய வுருவத்தைக்கொண்டு வேதமும் விஷ்ணுவும் மறி தற்கரிய தாமரை மலர் போன்ற பாதஞ் சிவக்கும் படி நடனஞ்செய்தார். குற்றத்திற் கோரிருப்பிடமா கிய செருக்கைக்கொண்ட காளியானவள் மயங்கி சிவபெருமான் செய்கையைக்கண்டு வணங்கி. எதற் காக சும்மா வாடுகின்றீர் என்னோடு வாதுக்காட வாரு மென்றாள். அவளுரைத்த வார்த்தையைக் கேட்ட வுடன் அடியார்க்கெளிய வமலன் நல்லது காளி நீ தருக்க தாண்டவஞ் செய்யச்சொன்னாப் நமது வெற் றித்தோல்விகளைக் கண்டுரைப்பதற்கு உமையவள்

சாட்சியாகையால் என்னெதிரிலே நின்று ஆடென்று சடையிலுள்ள விளம்பிறையைச் சர்ப்ப மானதுச் சுற்றிக் கவ்விக்கொண்டு தொங்கவும், பாத மலரிலுள்ள சிலம்பொலி யெங்கும் பரவவும், பொன்மலைக்கு நாயகராகிய புராரி திரு நடனஞ்செய்தார். அப்போது அடியார் விரும்பியவண்ண மளிக்கும் அமலருடன் பூமியும் வானமும் நடுங்கவும், கடல்களெல்லா மடங்கவும், யோகினிகளெல்லாய் கைகளைக்கொட்டி நடிக்கவுங் காளியாடினுள். அந்தத் திருவாலங்காட்டிலருந்தவஞ் செய்திருந்த முஞ்சிக முனிவரோடு கார்க்கோடகனென்னு நாகமும் சிவ பிரான் செய்தவரிய நடனத்தைத் தரிசித்து மோட்ச மடைந்தது. (அதியிலே சுநந்த முனிவரென்பவர் கைலாசத்திற் தாண்டவ தரிசனங் தரும்படிப் பிரார்த்தித்துச் சிவபிரானனுக்கிரகப்படியே திருவாலங்காட்டை யடைந்து நெடுங்கால மருந்தவம் புரிந்திருந்த போது மண்மேடிட்டுத் திருமேனி மறைந்து கேசத்தோடு முஞ்சிப்புல் முளைக்கப் பெற்றமையால் முஞ்சிகேச முனிவரென்னுந் திருநாம முடையவராயிருக்க, கார்க்கோடகரென்பவருங் கைலாசத்திற் சிவபிரானுக்குக் கங்கணமா யிருக்குங்கால் அறியாமையால் விடத்தைக் கக்கிய குற்றங் காரணமாக சிவபிரானருளிய வாறு திருவாலங்காட்டையடைந்துதவ நிலையில் நின்று தாண்டவ தரிசனங்கிடைக்கப்பெற்று அம்முஞ்சிகேசமுனிவருடன் முத்தியடைந்தாரென்பது புராணம்) பிர்ம்மாவிஷ்ணு தேவர்கள் முனிவர்களியாவரும் நம்பன்

செய்யு ஞான நடனத்தை தரிசித்தலும் மயிர்க்குச் செறிய வுளங்தளர்ந்து மன நெக்கு விட்டுருகி பர கராவென்று கைகளைக் கூப்பினர்கள். இறைவர் நட னஞ்செய்யு மிடத்தை யடைந்து நான்கு வேதங் களும் உருவத்தை யடைந்து பக்தியுடன் பாடவும், பிர்மா தாளம் போடவும், நந்திதேவர் மத்தளத்தை முழக்கினர்.

எல்லாவுலகத்திலு முள்ள வாடலைப் பார்த்துக் கொண்டிருக்கு மிறைவன் இவ்வாறு நடனஞ் செய் தருள, அங்கே வாதுசெய்து பிரானோடு மாடுகின்ற காளி யிளைத்து மானத்தைச் சகிக்க மாட்டாமல் மீண்டு மாடினள். இவ்வாறு நடனஞ் செய்ய முடி யாமல் வருந்தி நிற்கின்றவளை மலைமகள் கொழுநன் கண்டு அண்டமுகட்டைப் பொருந்தும்படி யோர் பாதத்தை மேலே தூக்கினர். தொண்டர் வியாகூலத் தைத்தொலைக்குந் தொழிலையுடைய பெருமான்றூக்கி யபாத மானது உலகை யுண்டு உமிழ்ந்த விஷ்ணு வா னவர். முன்னே கொண்ட விராட் வடிவத்தை யொத் திருந்தது. ஓர் பாதத்தைப் பூமியிலூன்றி யோர் பாதத்தை யுயரவெடுத்துப் பெருமானடிப்பதை கா ளியானவள் கண்டு நாணமடைந்து அக்கினியிற்பட்ட மலர் போல் முகம்வாடி தலைகுனிந்து நின்முள். காளி யானவள் வெட்கி முகங்கவிழ்ந்து தான்கொண்ட செருக்கு நீங்கி நிற்க. அளவற்ற யோகினிகளுங் கண்டு நடனமொழிந்து குத்திரங்கழல நிற்கின்ற

பாவைகளைப்போல் வாளா நின்றனர். அதனைக்கண்ட தேவர்கள் மனமகிழ்ந்து அமலன்மீது அலர் மாரி யைப்பொழிந்து பக்கத்தில் வந்து வீழ்ந்து பணிந் தெழுந்துதுள்ளி கடலின் ஒலியைப்பார்க்கிலு மதிக வொலியுண்டாகும் வண்ணந்துதித்தார்கள். அவ்வே லையிற் காளியானவள் பயந்து வேதங்களும் பிர்ம்மா முதலியதேவர்களு மறியப்படாத உன்னை மதியாமற் பேயேன் செய்த பிழையைப் பொறுத்தருள்வீர் பெருமானே; யென்றுத்துதித்து நின்றாள். அவ் வண்ண நிற்கின்ற காளியைக் கண்ணுதல்கண்டு நீ பயப்படாதே யென்றவளுக்கருள் புரிந்து நாம் நடத் திய சண்ட தாண்டவத்தை யுன்னாற் பார்த்தலரி தென்றுரைத்து, மீணடு மருளிச்செய்வார், இந்த திருவாலங்காட்டிற்குத் தென்றிசையிற் கூவபுரமென் னோர் நகரமுண்டு, அது கைலையைப் பார்க்கிலு பெருமையை யுடையது, நம்மைப்போல் ஒப்பற்ற வந்ததலத்தில் உலகையெல்லாங் காக்கும் வண்ணம் இரட்சா நடனஞ் செய்வோம் நீயந்தக் கூவபுரத்திற் குச்சென்று திருவருளோடுங் கூடிய நமது நடனத் தைத்தினமுந் தரிசித்து அந்நகரத்திலுள்ளவர்களெல் லாம் நமது நந்தியங்கணத்திலுள்ளவர்களென்று நினை ந்து வெப்புநோய் முதலிய வியாதிகளையும், பேய் கள் மிருகங்களால் வருந்துன்பங்களையு நீக்குவா யென்றிவைகளை யுரைத்து நம்மோடு நீ தருக்கஞ் செய்து நடன மியற்றியதனால் "தருக்கமாதா" வென் னும் பெயருனக்கு விளங்கக்கடவது. அன்றியு மிந்

தக் கூவநகரத்தைக் காத்து இங்கேயுள்ள பீடைகளை யரிப்பாய் - அதனாற் 'பீடாரி' யென்னும் நாமமு முலகிலுனக்கு விளங்குக, வென்று விமலனுரைத் தார். அதனைக்கேட்டு காளி மும்முறை வணங்கி யுனதருளாலடியேன் றீவினைகளை நீக்கியாண்ட வார முதே; கட்டளைப்படி கூவமாநகரிற்சென்று உன் றிரு நடனத்தைத் தரிசித்து அதனைக்காக்கின்றே னென் றியம்பி விடைபெற்றுக்கொண்டு கூவமாநகரம் போய்ச்சேர்ந்து, அத்தலத்தை முன்னே வணங்கி யாலயத்துக்குள்ளே சென்று தவமுடையோர் கண்க ளுக்கு எளிதாக விளங்கும் விற்கோல நாதரைக் கை கூப்பி நமஸ்கரித்துச்சென்று வளர்சடைக் கூத்தரு டையநடனந் தெரிசித்தாள். தெரிசித்தலும் அனலிற் பட்டமெழுகைப்போல் மனங்கரைந்துருகிக் கண்களி னீரைப்பெருக்கி பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, எழுந் துத்துதித்து சொல்லற்கரிய பிர்ம்மாநந்தத்தில் மூழ்கி னுள். இவ்வாறு சிவபிரான் செய்தருளு நடனத்தை தரிசித்துக் காளியானவள் திருவாலங்காட்டிற் சிவபி ரானருளிய வண்ணமே கூவபுரத்தில் விருப்புடனி ருந்து அந்நகரத்திற்கு யாதொரு துன்பமு மணுகா வண்ணம் அன்னையைப்போ லெப்போதுங் காத்தி ருந்தாள். இத்தன்மை வாய்ந்த கூவபுரப் பெருமை யை யிவ்வளவென்றியம்ப வல்லவர் அந்நகரத்திற் றிருக்கோவில் கொண்டெழுந்தருளிய விற்கோல நாயகரேயன்றி வேறொருவருரைப்பதற் கெளிதோ? வியாச முனிவரருளைக்கொண்டு அடியேனுஞ் சிறித

தன் பெருமையை யறையப்பெற்றேன். முனிவர்களே முத்தியைத் தரத்தக்க தலத்தைச்சொல்லு மென்று நீங்கள் வினவியதனுல் தேவர்கள் போற்றுங் கூவமாநகரைக் குருவருளாலுரைத்தேன். இந்தக் கதையை யோர் காற் சொல்லக்கேட்டவர் சதுமுகனுவார்கள். இருகாற் சொல்லக்கேட்டவர் விஷ்ணுவாவர்ாகள். முக்காலுங் கேட்டவர்கள் கைலைக்குத் தலைவராகிய கண்ணுதலே யாவார்கள். இக்கூவபுராணத்தைப் படிப்பவர்க்கும், அதனைக் கேட்பவர்க்கும், பலபேய்க் கணங்களெல்லாங் விலகிப்போகும். நவக்கிரகங்களால் வருந்துன்பமு மில்லை, யன்றியவமரணங் துற்கனவு துன்பம் பிணி யிவைகளின்ரும். இந்தக்கதையை யெழுதுபவர் வினையனைத்தும் எமனுடைய கணக்கர்கள் தங்களேட்டிலெழுதார். இந்தக்கதையை யன்போடு படிப்பவர்களும், இதன் பயனைக் கேட்பவர்களும், நல்புத்திரரைப் பெறுவார்கள். என்றைக்கு - நீங்காத வாழ்வையு மடைவார். அட்டமாசித்திகளையும் பெறுவார், விரும்பிதை யெல்லா மப்போதே யடைவார், பதினுலுலகத்திலு மவர்க்கரியது ஒன்று மின்ரும். இதுவன்றி யாலயம், தவசிகள் வாழுமடம், தர்ம்மத்திற்றவறுதலில்லாத வீடு, உயர்ந்தமலை, கானகம், நதிக்கரை யென்னு மிவைகளிலொன்றில் மேலான மண்டபமொன்றையியற்றி, யதிலிருந்து இக்கூவ புராணத்தை மணமுள்ள மலர் சூடி தூபதீப முதலிய பூசனைசெய்து வாத்திய வொலியுடன் ஓதவும் - இதையோது நாட்டொடங்கி நல்ல

தவசிகளுக்கு அறுசுவையுடன் போசன மிடவும். புராண முடியுங்காலத்தில் இதைப்படித்தவர்கள் பாதத்திற் பரமசிவனென்றே மதித்து வந்தனை செய்து நல்ல வஸ்திரா பரணமும் விளை நிலமும் பாற்பசுவுந்தந்து பின்பு விற்கோல நாதரைப் புராணத்தோடு பரிசுத்த மனதுடன் படித்துப்பொருளை விரித்துரைக்கும் பெரியோனை வணங்கித்துதித்துத் தேர் முதலியவைகளிலேற்றிப் பலவாத்தியங்களு மொலிக்க நகரை யலங்கரித்து அன்புடன் வலமாக வரும்படிச் செய்விக்கவேண்டும். இவ்வண்ணஞ் செய்பவர் அனேகம் பாதகங்களை நீக்கி யிவ்வுலகத்திலவர்கள் மனதில் விரும்பிய பொருளையெல்லா மீய்ந்து திரு விற்கோல நாதர் பிர்ம்மா முதலிய தேவர்களுக்கு மரிய பரகதியைத் தந்தருள்வாரென்று சூதமுனி வருரைத்தருளினர். அந்த சூதமுனிவருரைத்ததை நைமிசாரணிய வாசிகளனைவருங் கேட்டு மகிழ்ந்து சூத முனிவரைத்துதித்து திருக்கூவநகரையடைந்து விற்கோல நாதரை [illegible] துதித்து அங்கிருந்து [illegible] தயதால் மூலஞ்ஞான நீங்கி மேலான [illegible]ந்தார்கள்.

[illegible]கலி விருத்தம்.

[illegible] செங்கோல வழங்குக
வேத வாகம மெய்ந்நெறி யோங்குக
போத ஞதிய புண்ணியர் மல்குக
வோது மூவர்தம் மொண்டமிழ் வாழ்கவே.

தாருகன்வதைச்சருக்க முற்றிற்று.

—oo:o:oo—

திருக்கூவப்புராண வசன முற்றிற்று.